உ

# இந்து தருமம்



இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக் கழகம்

1981 — 1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவ அடியார்கட்கு !

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வருடாவருடம் இந்து மாணவர் தொகை குறைவடைந்து வருவதாலும், கோயிலில் நடைபெறும் நாளாந்த பூசைகட்கான செலவுகள் தொடர்ந்தும் அதிகரித்துச் செல்வதாலும் இக்கோவிலினைப் பரிபாலிக்க வருமானம் போதாத நிலையில் உள்ளோம். அதாவது எங்களது கோவிலிற்குக் கிடைக்கும் வருமானத்தைவிடச் செலவுகள் கூடுதலாக இருக்கின்றது. இவ்வாறான பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு வழியாக இந்து மாணவர் சங்கத்தின் 1981ஆம் ஆண்டின் பெரும் பொருளாளர் கலாநிதி வே. பாவநாச சிவத்தின் ஆலோசனையின்பேரில் ரூபா 15,000/- தொகையைச் சேர்த்து மக்கள்வங்கி பேராதனைக் கிளையில் நிலையான வைப்பில் இட்டுள்ளார்கள், தொடர்ந்து ஐந்து வருடங்கட்கு இவ்வாறு நிதி சேர்த்து மொத்தம் ரூபா 75,000/- தொகையை நிலையான வைப்பில் இடுவதன் மூலம் எதிர்காலத்தில் கோவிலின் பேரில் ஒரு நிலையான மாறு வருமானத்திற்கு வழிவகுத்து வைக்கத் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

எமது தற்போதைய இந்துமாணவர்சங்கமும் இக்கைங்கரியத்தினை நிறைவேற்றும் பணியில் ஈடுபட்டுள்ளது. எதிர்வரும் இந்துமாணவர் சங்கக் குழுக்களும் இப்பணியினைத் தொடர்ந்து அந்த இலக்கை அடைய உழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்வதோடு, இந்த ஆக்கத்திற்குப் பல்கலைக்கழக மாணவர்களும், வெளியில் உள்ளவர்களும் பூரண ஆதரவு நல்குமாறு வேண்டி நிற்கிறோம்.

**இந்துமாணவர் சங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் முருகா

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்"

# இந்து தருமம்

*இதழாசிரியர் :*

செல்வன் சுப்பையா அபயகரன் ஜனகன்

**இந்து மாணவர் சங்கம்**

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

**பேராதனை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

| | | | |
|---|---|---|---|
| துணைவேந்தரின் ஆசிச்செய்தி | | ... | v |
| பெருந்தலைவரின் வாழ்த்துரை | | ... | vi |
| பெரும் பொருளாளரின் வாழ்த்துரை | (அட்டை iiiஆம் பக்கம்) | | |
| ஆசிரியர் தலையங்கம் | | ... | vii |
| பண்ணிசையும் இராகமும் | — இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | ... | 1 |
| பாரதியார் விரதம் | — கலாநிதி க. அருணாசலம், M. A., Ph. D, | | 3 |
| தக்ஷிண கைலாசம் | — கலாநிதி சி. பத்மநாதன் | ... | 13 |
| முருக வழிபாடு (பாரதி, கவிதை, பாரதிதாசன்) | — திரு. சி. தில்லைநாதன் | ... | 19 |
| திருப்பாவையும் திருவெம்பாவையும் — ஓர் ஒப்பீடு | — திரு. துரை மனோகரன், எம். ஏ. | ... | 25 |
| பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள் | — கலாநிதி அ. சண்முகதாஸ் | ... | 29 |
| 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் தமிழிசை இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | ... சச்சி. ஸ்ரீகாந்தா | ... | 35 |
| பாரதியின் ஆலய தரிசனம் | — திருமதி கலையரசி சின்னையா | ... | 43 |
| ஔவையும் முருகனும் | — செல்வி தவமணிதேவி சாம்பசிவம் | ... | 47 |
| குறிஞ்சிக் குமரன் தோத்திரம் | — அருட்கவி சீ. விநாசித்தம்பி | ... | 49 |
| கூறுகிறேன் கேள் குமரா ! | — அக்கரைச்சக்தி | ... | 50 |
| அருள்மிகு குறிஞ்சிக்குமரன் புகழ்ப் பாக்கள் | — குமாரசுவாமி ஐயர் | ... | 52 |


## மாணவர் பகுதி


| | | | |
|---|---|---|---|
| சரணாகதி | — செல்வி அம்பிகைவதனா கதிரித்தம்பி | | 53 |
| உண்மை இந்து யார் ? | — செல்வி மைத்ரேயி சபாரத்தினம் | ... | 55 |
| ஆறுதல் தரும் குறிஞ்சிக் குமரன் முகம் | — செல்வி நளாயினி | ... | 57 |
| மெய்ஞ்ஞானத்தினின்று விஞ்ஞானத்திற்கு | — செல்வன் சு. சிவகுமார் / செல்வன் செ. ரூபசிங்கம் | — | 59 |
| ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ! | — செல்வி S. ஸ்ரீரஞ்சினி | ... | 63 |
| குடமுழுக்கு கொண்டனையோ குமரா! குமரா! | — செல்வி இ. ஆனந்தி | ... | 65 |
| திருமுருகன் பெருமை | — செல்வி த. கமலராணி | ... | 66 |
| ஆலய வழிபாட்டில் நாம் காணும் திருப்தி என்ன ? அதில் அதிருப்தி சிறிதளவேனும் உண்டா ? | — செல்வன் அ. சுரேஷ் | ... | 69 |
| குறிஞ்சிக்குமரன்மீது வேள்விப்பத்து | — குமரன் அன்பர் | ... | 71 |
| இந்துசமயமும் அதன் பிரிவுகளும் | — ச. தயாபரன் | ... | 72 |
| கௌமாரம் | — (சிவதொண்டன் மலரிலிருந்து) | ... | 75 |
| தலைவரின் அறிக்கை | — | ... | 78 |
| செயலாளரின் அறிக்கை | — | ... | 80 |
| நன்றி மறப்பது நன்றன்று!......... | — | ... | 84 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்

## 29ஆவது செயற்குழு உறுப்பினர்கள் — 1981 – 82

| | |
|---|---|
| பெருந் தலைவர் : | பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம் |
| பெரும் பொருளாளர் : | திரு. கா. கந்தையா M. Sc. (Agric.) |
| தலைவர் : | செல்வன் ச. தயாபரன் |
| துணைத் தலைவர் : | செல்வன் மா. பகிரதன் |
| இணைச் செயலாளர் : | செல்வன் சி. குகதாசன் |
| | செல்வி அ. சிவகுமாரி |
| இளம் பொருளாளர் : | செல்வன் வி. விஜேந்திரன் |
| இதழாசிரியர் : | செல்வன் சு. அபயகரன் ஜனகன் |
| நூலகர் : | செல்வி ப. சிவநாயகி |
| குழு உறுப்பினர்கள் : | செல்வன் அ. சுரேஷ் |
| | செல்வன் சா. பாஸ்கரன் |
| | செல்வி இ. ஆனந்தி |

# குறிஞ்சிக்குமரன் கோவில்

## பொறுப்பாண்மைக்குழு — 1981 – 1982

தலைவர் : பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியம்
(பெருந் தலைவர், இந்துமாணவர் சங்கம்)

செயலாளர் : பேராசிரியர் சு. சோதிஸ்வரன்

பொருளாளர் : திரு. பொ. அரியரத்தினம்

அங்கத்தவர்கள் :

1. பேராசிரியர் த. யோகரத்தினம்
2. பேராசிரியர் அ. துரைராஜா
   (பீடாதிபதி, பொறியியல்பீடம்)
3. திரு. கா. கந்தையா
   (பெரும் பொருளாளர், இந்துமாணவர் சங்கம்)
4. திரு. வி. சிவசுப்பிரமணியம்
   (தலைவர், அகில இலங்கை இந்துமாமன்றம்)
5. திரு. அ. துரைசாமிப்பிள்ளை
   (தலைவர், கண்டி இந்துமாமன்றம்)
6. திரு. பொ. பரமநாதன்
   (தலைவர், மத்திய மாகாணச் சைவ மகாசபை)
7. ச. செல்வராசா
   (தலைவர், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை)
8. செல்வி நிர்மலாதேவி தம்பிராசா
   (இந்துப் பட்டதாரிகள் சங்கம்)
9. செல்வன் ச. தயாபரன்
   (தலைவர், இந்து மாணவர் சங்கம்
10. செல்வன் சி. குகதாசன்
    (செயலாளர், இந்து மாணவர் சங்கம்)
11. செல்வன் சா. பாஸ்கரன்
12. செல்வி கமலராணி தம்பாப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Our Vice Chancellor's Message

I am pleased to write this message to the annual journal of the Hindu Students Union of the University of Peradeniya for the year 1982.

Religion plays a vital role in the life pattern of our university. Though the numbers following Hindu Religion are comparatively small, their impact on the campus society is noteworthy.

I sincerely hope that the Hindu society would continue their cultural programme which is appreciated by the campus community.

I take this opportunity to wish the Hindu Society success in all its endeavours in the coming years.

**Professor B. L. Panditharatne**
Vice Chancellor

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துமாணவர் சங்கப் பெருந் தலைவரின்
# வாழ்த்துரை

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் தமது திருப் பணிகளை ஆரம்பித்து இருபத்தொன்பதாவது ஆண்டினை நிறைவு செய்யும் இவ்வேளையில் இச் சங்கத்தின் சேவைகளை வெளியுலகிற்கு எடுத்துரைக்கும் சங்கத்தின் வருடாந்த வெளியீடான "இந்துதருமம்" வழமைபோல் இம்முறையும் சிறப்பான முறையில் வெளிவர இருப் பதையிட்டுப் பூரிப்படைகிறேன்.

பல்வேறுபட்ட காரணங்களால் குறைந்துகொண்டுபோகும் இந்து மாணவர் தொகையால் இந்து மாணவர் சங்கம் ஆள்பலனில் குறைவு ஏற்பட்டபோதிலும் இந்து மாணவர்களின் தெய்வ நம்பிக்கையால் அவர்களுக்கு ஏற்பட்ட மனத்துணிச்சலால் மாணவர்கள் கோவிலில் நடைபெறும் விழாக்களையும் சிரமதானப் பணிகளையும் எவ்வித குறையுமின்றி மிகச் சிறந்த முறையில் நடாத்திவருவது எல்லோ ரும் பாராட்ட வேண்டிய விடயமாகும்.

வாசிப்பவர் மத்தியில் சைவ உணர்வை ஏற்படுத்தும் கட்டுரை, கவிதைகளைத் தாங்கிவரும் "இந்து தருமம்" தொடர்ந்தும் சிறந்த முறையில் வெளிவருவதற்கும் இந்து மாணவர் சங்கத்தின் சைவப் பணி தொடர்வதற்கும் என்றென்றும் குறிஞ்சிக் குமரன் அருள் பாலிப்பான் என்ற நம்பிக்கையுடன் மனமார வாழ்த்துகின்றேன்.

*தாவரவியற்பகுதி,*
*பேராதனைப் பல்கலைக்கழகம்,*
*பேராதனை.*

பேராசிரியர், சி. பாலசுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கருத்து

இலங்கைச் சிறுதீவின் எழில்மிகு பகுதியாயிருக்கும் மலையகத் தலைநகராம் கண்டி மாநகரில் சரஸ்வதித் தாயின் அருட்பார்வை பெற்ற பேராதனையில் மலையும், மலைசார்ந்த இடமாகிய குறிஞ்சி நிலத்தில் விரும்பி உறையும் குன்றுதோறுடும் குமரனாகிய முருகப்பெருமான் வீற்றிருக்கும் குறிஞ்சிக் குமரன் ஆலயம் அமைந்துள்ள இடமும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் எந்த ஒரு பகுதியில் நின்று பார்த்தாலும் கிடைக்கும் குமரனின் கோபுர முடி தரிசனமும் எம்மவர் எல்லோருக்கும் கிடைக்கப்பெற்ற பெரும்பேருகும்.

கவனிப்பாரற்றுக் கிடந்த இம்மலைப்பகுதியை பதினான்கு வருட காலத்துள் இன்று இச் சிறப்பான நிலைக்குக் கொண்டுவருவதற்கு இப்பல்கலைக் கழகத்தில் வாழ்ந்த — வாழ்ந்துகொண்டிருக்கின்ற விரிவுரையாளர்களும், மாணவர்களும் செய்த பணியை நாம் போற்றாமல் இருக்கமுடியாது. இவ்வாறு சைவம் காத்த சான்றோர்க்கு நாம் என்றென்றும் நன்றியுடையவர்களா யிருக்கவேண்டும் என்பது ஆலயத்தின் சரித்திரத்தைப் புரட்டிப்பார்ப்பவர் எவர்க்கும் கண்கூடு.

பல்கலைக்கழகத்தில் சிறந்த சங்கங்களில் ஒன்றான இந்து மாணவர் சங்கத்துக்கும் குமரன் ஆலயத்துக்கும் உள்ள தொடர்பைச் சொற்களால் வருணிக்க முடியாது, அநுபவத்தால் கண்டுணர வேண்டும். இம் மாணவர் சங்கத்தில் முக்கிய பங்கினை வகிப்பதால் எமக்குப் பொறுமை அதிகரிக்கும். எதிலும் பொதுநல நோக்கு உண்டாகும். மற்றையவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து அவர்களை மதிக்கும் பண்பு உருவாகும். இவ்வாறாக நாம் எதிர்காலத்தில் வாழப்போகும் வாழ்க்கைக்கு எம்மை ஓரளவாவது தயார் செய்துகொள்கிறோம் என்றால் அது மிகையாகாது.

உலகின் தொன்மை மிக்க சமயமாகிய இந்து மதத்திற்கு இன்று சோதனை காலம். காரணம் இன்று உலகில் இந்துக்கள் பலர் எமது சமயநெறியை விட்டு விலகி வாழ்ந்துகொண்டிருப்பதுடன் பிறமதத்தவர் மட்டுமன்றி இந்துக்கள் சிலரும் மதத்தை இகழ்வதைக் காணக்கூடியதாயுள்ளது. இந்நிலைக்கு முக்கிய காரணமாக விஞ்ஞான யுகத்தில் மூழ்கி மயங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு இந்துமதக் கிரியைகள் பல விளங்காமையையும் வேதசாஸ்திரங்கள் விளங்காமையையும் கொள்ளலாம். இதனை நிவர்த்தி செய்வதற்குப் பல்கலைக் கழகங்களிலுள்ள இந்து கலாச்சாரத்துறை, மொழியியல்துறை, மனித பண்பாட்டியல்துறை போன்றன தம்மாலான முயற்சிகளில் சைவாதீனம் போன்றவற்றுடன் சேர்ந்து தொழிற்பட வேண்டும் என்பது எமது வேண்டுகோள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளையில் எம் இந்துமதத்திற்கு உலகளாவிய மகாநாடு ஒன்று எம் நாட்டில் நடத்தப்பட இருப்பதையிட்டு நாம் பெருமையடைவதோடு விழா நடத்துபவர்களுக்கு எம்மாலான உதவிகளையும் செய்யவேண்டும்.

பல்வேறுபட்ட காரணங்களால் பேராதனையில் குறைந்துகொண்டு போகும் இந்து மாணவர் தொகை ஆலய பரிபாலனத்தில் சில தாக்கங்களை ஏற்படுத்தலாம். இதனை உணர்ந்துள்ள இந்து மாணவர் சங்கம் நிலையான வைப்புப் பணம் சேகரித்து அதனால் வரும் வட்டியைப் பரிபாலனத்துக்கு உபயோகிப்பதால் பொருளாதார ரீதியாகச் சிரமம் ஏற்படுவதைத் தவிர்க்க முனைந்துள்ளது. எனவே, இந்துக்களாகிய நாம் இப்பணியில் எம்மாலியன்ற உதவியைச் செய்து கலியுகவரதனும் கந்தன் திருஅருளினைப் பெறுவோமாக.

நன்றி!

**சு. அபயகரன் ஜனகன்**
*இதழாசிரியர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணிசையும், இராகமும்

இலக்கிய கலாநிதி
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

பண்ணிசை, பண்ணும் இசையும் என இரண்டு அம்சங்கள் கொண்டது.

பண் இசையுமன்று ; இசையில் வேறுமன்று. பண் இசையிற் பிறந்து இசையைத் தமிழ் செய்வது. இதனை விளக்குவோம்.

இங்கே இசை என்றது உள் ஒலியை. அது நமது சரீரத்தினுள்ளே ஒலிக்கும் ஒலி.

உள் ஒலியாகிய வைந்தவத்தில் எழுத்தொலியாலான பாடல் அமைவதுண்டு. இப்பாடலை ஒலித்திரள் எனலாம். ஒலித்திரளாய பாடல் உள்ளத் தூய்மைக்கேற்றவாறு உயர்ச்சியுறும்.

பாடலாகிய ஒலித்திரள் நெகிழ்ந்து, நீர்த்திரள் ஆவியாய் மேலெழுவதுபோல மேலெழாநிற்கும். அப்பொழுது நெகிழ்ந்த ஒலியாகிய இசையில், சப்த சுரங்கள் பண் செய்து உபகரிக்கும். பண், இசையிற் பிறந்து, அவ்விசையைத் தமிழ் செய்யும். தமிழ்செய்தலாவது, இசையே தமிழாமாறு செய்தலாம். இசை, இசைவிப்பது. உள்ளத் துணர்ச்சியை மெய்ப்பொருட்காட்சிபால் இசைவிப்பது.

இயல், நிழல்போன்ற சாயலை உணர்த்த, இசை, சாயலின் மூலமான மெய்ப் பொருட் காட்சியை உணர்த்தாநிற்கும். நிழலுக்கும், நிழல்தரும் பொருளுக்கும் உள்ள வேறுபாடாயிருக்கும், இயற்றமிழுக்கும் இசைத் தமிழுக்கும் உள்ள வேறுபாடு. இயற்றமிழிலும் அநந்தகோடி மடங்கு மேலானது இசைத்தமிழ்.

இத்துணைச் சிறந்த இசைத்தமிழ், பிறர் செவிகளையும் உளப்படுத்த நேரும்போது, சப்த சுரங்கள், சரீரத்துக்குப் புறத்தேயுள்ள புற ஒலியில், இராகம் என்ற உடலைச்செய்து, பண்ணுகிய உயிருக்கு உபகரிக்கும். இராகம், பண்ணிசையை வேண்டிய அளவுக்கும் பெருக்கிப் பயன்செய்யும்.

முன்னர் உள்ளொலிபற்றிப் பேசினேம். இப்பொழுது புற ஒலியென ஒன்று பேசுகின்றேம். இப்புற ஒலிக்குப் பௌதிகம் என்று பெயர். பூதத்தில் பிறந்ததால் இப்பெயர் வந்தது. பஞ்சபூதங்கள், 36 தத்துவங்களில் இறுதித் தத்துவங்கள். ஒலியைப் பிறப்பிக்கும் முக்கிய தத்துவம், ஆகாயம். அதன் குணம் சப்தம். இச்சப்தமாகிய பௌதிக ஒலி அர்த்தப் பிரபஞ்சத்தைச் சேர்ந்தது. வைந்தவ ஒலியாகிய இசை, சப்தப் பிரபஞ்சத்தைச் சேர்ந்தது. அன்றி, தத்துவங்களும், தத்துவ மூலமான கலைகளும் பிறக்குமிடமாகிய சுத்த மாயையில் பிறந்தது.

சுத்த மாயைக்குக் கீழே அசுத்தமாயை; அதற்குக் கீழே பிரகிருதிமாயை; அதன் இறுதித் தத்துவம் பூதம். அதிற் பிறந்தது பௌதிக ஒலி.

பிறப்பால் பண்ணிசைக்கும் பௌதிக இசைக்கும் வெகுதூரம். ஆயினும், பண்ணுகிய உயிருக்கு, இராகம் உடலாய் அமைந்து பேருபகாரம் செய்கின்றது.

இராகம் பண்ணைச் சேராதவழி, உயிரற்ற உடலேயாம். வைந்தவப் பண்ணிசைக்குப் பௌதிக இராகம் உடலாய் அமைந்தவழி, உளதாம் பயனை அளவிடமுடியாது. அது ஆனய நாயனுர் புராணத்தால் அறியத்தக்கது.

ஐந்தெழுத்து மந்திரம், வைந்தவ இசையில் உச்சமானது. அவ்விசையைப் பௌதிக இசையோடு சப்த சுரங்கள் மூலம் இசைத்து, வேய்ங்குழல் வாயிலாக வெளிப்படுத்தியருளினுர் ஆனய நாயனுர். இசை, ஓரறிவு உயிரையும் ஊடுருவியது; உயிர்களைப் பற்றியிருந்த இருள் விலக, ஒவ்வோர் உயிரிலும் அருள் ஒளி மேலிட்டது.

இவ்வாற்ருல் இயற்றமிழ் இயல்பும் இசைத்தமிழ் மேன்மையும் பேசப்பட்டன.

இசைத் தமிழ் வேறு; இசைக் கலை வேறு. இசைக் கலையில் இசை தமிழாதல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைத் தமிழின் பிறப்பு வளர்ப்பும் பேசப்பட்டது. இசைத் தமிழ் சென்று முற்றும் இடத்தில், நாடகத்தமிழ் தொடங்கும். அங்கே பாடல், இசை யாதும் இல்லை; மௌன முத்திரைதான் அங்கே பாஷை. அதனைத் தக்ஷிணு மூர்த்தியின் சந்நிதியில் காணலாம். தக்ஷிணு மூர்த்தியின் இருக்கையும், திருக்கைச் சின்முத்திரையுந்தான் நாடகத்தமிழ். அத்தமிழ் பயிலும் மாணவர் முனிவரார் நால்வர்.

நாடகத் தமிழ் வேறு; நாடகக் கலை வேறு. நாடகக் கலையில் பாடல், இசை உண்டு.

நாடகத் தமிழை ஒளி நெறி என்கிறுர் பிள்ளையார். 'ஓர்ஆல் நீழல் ஒண்கழல் இரண்டும் முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி காட்டினை' என்பது பிள்ளையார் வாக்கு.

நாடகத் தமிழுக்குப் பிள்ளையார் அருளிய பெயர்,

ஒளி நெறி.

ஆகவே,

இசைத் தமிழ் — ஒலி நெறி;
இயற்றமிழ் — ஒலித்திரள் நெறி.

பண்ணுக்கும், இராகத்துக்கும் வேற்றுமை மேலே சொல்லப்பட்டது.

இனி, அவ்விரண்டன் ஒற்றுமை பற்றி ஒன்று சொல்லலாம்.

உண்மையில் பண்ணும் இராகமும் ஒன்றே. உள் ஒலியில் பிறப்பதைப் பண் என்பதும், புற ஒலியில் பிறப்பதை இராகம் என்பதும் மரபு.

பண், பண்ணியல், திறம், திறத்திறம் என்ற பாகுபாடு இராகத்துக்கு உண்டு; பண்ணுக்கு அப்பாகுபாடு இல்லை.

சப்த சுரங்களோடு கூடிய சம்பூரண இராகத்துக்குப் பண் என்று ஒரு பெயர் உண்டு; ஆனுல், வழங்குவதில்லை.

சம்பூர்ண இராகமாகிய பண் வேறு; வைந்தல இசையில் பிறக்கும் பண் வேறு. இரண்டும் முறையே ஒன்றன் உள்ளும் புறமுமாம்; உயிரும் உடலும் போல.

இனி, இனம் பற்றி, கட்டளை பற்றியும் ஒன்று சொல்லத்தக்கது,

1. பண், இசையிற் பிறந்து இசையைத் தமிழ் செய்வது.
2. இராகம், பண்ணுக்குக் கவசமாயிருந்து பண்ணிசையைப் பெருக்குவது.
3. கட்டளை, பண்ணுக்கு அநாயாசம் அளிப்பது. அநாயாசம் — ஆயாசம் இன்மை.

கட்டளை, நடைபற்றிய யாப்புப் பேதம். நடையானது பாடுவோருக்கும், பாடும் பொருளுக்கும் அவ்வப்போதுண்டாகும் தொடர்புபற்றி வேறுபடும்.

புராணங்களிலும், காவியங்களிலும் இடையிடையே வேறு என்று இருப்பது போன்றது கட்டளை. கட்டளை வேறுபாட்டை அவதானித்து, ஆயத்தம் செய்துகொண்டு ஓதிஞல், பண், தடங்கலின்றி இடையீடு படாமல் இனிது நடக்கும்.

கட்டளையும், பண்ணின் புறத்தோற்றமாகிய இராகமும், ஓதுவார் பரம்பரையில் இருந்து வந்தவை.

ஓர் உயிருக்கு இரண்டு உடல் இருத்தல் சாலாது. இப்பொழுது பண்ணுக்குரிய இராகத்தில் ஓதுவாருக்கிடையில் வேறுபடு தோன்றியிருப்பது, உயிராகிய பண்ணில் நோய் உற்பத்தியாய்விட்டது என்ற எண்ணத்தை வருவிக்கின்றது. எனினும், ஓதுவார்களுக்குள்ளே பழைய பாரம்பரியத்தைப் பின்பற்றுபவர்களைப் பின்பற்றுவதே நமக்குக் கிடைக்கக் கூடிய ஒரேஒரு வழி.

✳

ஞானம் ஆண்மகன் ஒருவனையொத்தது. பக்தி பெண்மணியொருத்தியைப் போன்றது. கடவுளுடைய இல்லத்தின் நுழைவுப் பகுதியில் உள்ள அதிதி விடுதி வரையிலும் செல்லத்தான் ஞானத்திற்கு அதிகாரம் உண்டு. ஆனுல் ஆண்டவனுடைய அந்தப்புரப் பகுதிகளுக்கு பக்தியானது செல்லக்கூடும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் விரதம்

கலாநிதி க. அருணாசலம், M. A., Ph. D.
விரிவுரையாளர், தமிழ்த்துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்

உலகின் ஏனைய மதங்களிலும் பார்க்க இந்து மதத்திலேயே ஆண்டுமுழுவதும் அதிக அளவிலான மதச்சடங்குகள், விழாக்கள், விரதங்கள் முதலியன இடம் பெறுகின்றன. கற்றோர் முதல் கல்லாதோர் வரை, அதிகாரிகள் முதல் ஆண்டிகள் வரை சமூகத்தின் வெவ்வேறு படித்தரங்களில் வாழும் இந்துக்கள் மத்தியில் விரதம் மேற்கொள்ளும் வழக்கம் நிலவுகின்றது. ஏகாதசி விரதம், கந்தசஷ்டி விரதம், நவராத்திரி விரதம், சிவராத்திரி விரதம், புரட்டாதிச் சனி விரதம், ஐப்பசி வெள்ளி விரதம், பங்குனித்திங்கள் விரதம், பாவைநோன்பு என விரதங்களின் பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். இவ் விரதங்களுட் சில பல நாட்களுக்குத் தொடர்ந்து இடம் பெறும். சில அரைநாள் பட்டினி விரதம்; சில முழுநாள் பட்டினி விரதம். விரதம் என்ற பெயரிற் கால்நாளோ அரை நாளோ முழுநாளோ பட்டினி கிடந்த பின் அறுசுவை உணவை வயிறார உண்டு ஏப்பம் விடுவதே இந்துக்கள் பலரின் வழக்கமாகி விட்டது. விரதங்களின் நோக்கமும் இன்று வரவரக் குறுகிக்கொண்டு வருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் நவயுகத்தை நாவாரக் கூவியழைத்த யுகப்பெருங் கவிஞனும் அளவுகடந்த இறைபக்தனுமான பாரதியாரும் விரதம் மேற்கொண்டார். அவர் மேற்கொண்ட விரதம் சாதாரணமாக இந்து மக்களாற் மேற்கொள்ளப்பட்டுவரும் விரதங்களிலிருந்து வேறுபட்டது; தனித்துவமானது: மிக உயர்ந்த நோக்கமுடையது; அவரின் வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. பாரதியார் அவ்விரதத்தை நிறைவேற்றும் பொருட்டு அவர் என்றுமே ஓயாது சலியாது உழைத்தார்; அகத்திலும் புறத்திலும் இடைவிடாது போராடினார். 'செய்வேன் அல்லது செத்து மடிவேன்' என்ற மனவைராக்கியத்துடன் தமது வாழ்க்கையின் சுகபோகங்களையெல்லாம் அதன் பொருட்டுத் தியாகம் செய்தார்.

பாரதியார் மேற்கொண்ட விரதம் யாது, எத்தகைய விரதம்? பாரதியாரே கூறுவதை நோக்குவோம். விநாயகரை அடிபணிந்து தமது விரதம் எத்தகையது என்பதை விநாயகரிடமும் மக்களிடமும் பின்வருமாறு கூறுகின்றார்:

> **எனக்கு வேண்டும் வரங்களை**
> **இசைப்பேன் கேளாய் கணபதி!**

எனத் தொடங்கி,

> **பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்**
> **கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்;**

என்ற பீடிகையோடு தான் கேட்பவற்றையெல்லாம் நிறைவேற்றுமாறு பக்தனுக்கே உரிய முறையில் உரிமை யுணர்வோடு விநாயகரிடம் வேண்டுகின்றார். தமிழக வரலாற்றிலோ இந்துமத வரலாற்றிலோ எந்த ஓர் ஆஸ்திகனும் பேசாத, பேசத்துணியாத பொருளைப் பேசத்துணிந்தவர் பாரதியார். மற்றவர்கள் கேட்காத, கேட்க அஞ்சிய வரத்தைக் கேட்டவர் பாரதியார். விநாயகனே! என் துன்பம் எல்லாவற்றையும் அகற்றிப் பேறு பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ அருள்புரி; அப்பாவி மக்களின் உழைப்பை யெல்லாம் சுரண்டிக் கொழுக்க வழிகாட்டு; என் சுற்றத்தவர்களானாலும் சரி இந்து மதத்தவர்களானாலும் சரி என்னுடன் மாறுபடுபவர்களை வேரும் வேரடி மண்ணுமில்லாமலே அழித்தொழிக்க வல்லமை தா. அதற்காக உனக்கு நான் வேண்டிய கைக்கூலி தருவேன்; ராஜகோபுரம், தீர்த்தமண்டபம் எல்லாம் கட்டுவேன் என அற்பத்தனமாகப் பாரதியார் வேண்டவில்லை.

> **மண்மீ துள்ள மக்கள், பறவைகள்**
> **விலங்குகள், பூச்சிகள், புற்பூண்டு, மரங்கள்**
> **யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே**
> **இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே**
> **செய்தல் வேண்டும், தேவ தேவா!**
> **ஞான காசத்து நடுவே நின்றுநான்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமண்ட லத்தில் அன்பும் பொறையும்
விளங்குக; துன்பமும் மிடிமையும், நோவும்
சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெல்லாம்
இன்புற்று வாழ்க ! என்பேன் ! இதனைநீ
திருச்செவி கொண்டு திருவுளம் இரங்கி
அங்ஙனே யாகுக ! என்பாய் ஐயனே !

எனப் பாரதியார் வேண்டுவது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. 'எல்லோரும் இன்புற்றிருக்க வல்லால் யாதொன் றறியேன் பராபரமே', 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்' என்னும் சிந்தனைகளை விடப் பரந்து விரிந்ததாகப் பாரதியின் உள்ளம் விளங்குகின்றது. விநாயகரிடம் தாம் கேட்கும் வரத்தின்மூலம் தாம் காண விழைந்த புதிய யுகம் எத்தகையது என்பதையும் தெளிவு படுத்தி விடுகின்றார்.

தாம் காண விழைந்த புது யுகத்துக்குக் 'கிருதயுகம்' என்னும் அழகான, ஆழ்ந்த பொருள்கொண்ட சொல்லைப் பாரதியார் தமது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பிற வற்றிலும் பல்வேறிடங்களிற் கையாண்டுள்ளார். கிருதயுகத்தையே 'சத்தியுகம்', 'அமர யுகம்' என்னும் வேறு பெயர்களாலும் சில இடங்களிற் குறிப்பிட்டுள்ளார். பாரதியார் பல்வேறு வகையான தமது ஆக்கங்களிற் கிருதயுகம் என்றால் எத்தகையது என்பதையும் அதன் சிறப்பம்சங்களையும் தெளிவு படுத்தியுள்ளார். அத்தகைய கிருதயுகத்தைக் கேடின்றி நிலைநிறுத்தலே பாரதியார் மேற் கொண்ட விரதமாகும்.

கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம் நான் கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளிணை வாழியே !

என்கிறார். அத்துடனமையாது,

'' வீழ்க கலியின் வலியெல்லாம்
கிருத யுகந்தான் மேவுகவே ''

'' இடிபட்ட சுவர்போல கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ ''

'' பொய்க்கும் கலியை நான்கொன்று
பூலோ கத்தார் கண்முன்னே
மெய்க்குங் கிருத யுகத்தினையே
கொணர்வேன் தெய்வ விதியிஃதே ''

என அசாதாரணத் துணிச்சலுடனும் அளவு கடந்த தன்நம்பிக்கையுடனும் சூளுரைக்கின்றார். வெறுமனே வாயளவிற் சூளுரைத்த துடன் நில்லாது அதனை நிறைவேற்ற அயராது பாடுபட்டவர் பாரதியார். மக்களுக்கு இடைவிடாது உபதேசித்ததுடன் தமது சொந்த வாழ்க்கையிலும் புது யுகத்தின் சிறப்பம்சங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்து காட்டினார். அதனால் அவர் தமது வாழ்வில் அடைந்த துயரங்கள், வேதனைகள், அனுபவித்த கொடுமைகள் சொல்லில் அடங்காதன. அவர் காட்டிய புதுயுக அம்சங்கள் பல இந்து சமுதாயத்துக்குப் புதுமையானவை; ஆயின் இன்றைய நிலையில் அத்தியாவசியமானவை; இந்துமதத்துக்குப் புத்துயிர் ஊட்டி அதனை நிலைபெறச் செய்ய வல்லவை. அவர் சூளுரைத்து மேற்கொண்ட விரதத்தின் முக்கியமான சில அம்சங்களே இக் கட்டுரையிற் சுட்டிக் காட்டப்படும். பாரதியார் தமது ஒப்பற்ற கருத்துக்களைக் கவிதைகள் வாயிலாக மட்டுமன்றி உரை நடை ஆக்கங்கள் வாயிலாகவும் சொற் பொழிவுகள் மூலமும் வெளிப்படுத்தியுள்ளார். அவ்வகையில் அவரது உரைநடை ஆக்கங்களில் இடம்பெறும் கிருதயுகம் பற்றிய கருத்துக்கள் இங்கு முக்கியமாக நோக்கப்படும். பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் இவ்வேளையிலும் பாரதியார் என்றவுடன் பலருக்கு அவரது கவிதைகள் மட்டுமே ஞாபகத்தில் வருகின்றன. ஆயின் உண்மையிலே பாரதியார் கவிதைகளை மட்டும் பாடியவரல்லர். மிக்க இளம் வயதிலேயே 'இந்தியா', 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளில் அரசியல், சமூகம், பொருளாதாரம், சமயம் எனப் பல்வேறு துறைகள் சார்ந்த பல கட்டுரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி வெளியிட்டுள்ளார். ஆழ்ந்த கருத்துக்கள் நிறைந்த ஞானரதம், நவதந்திரக் கதைகள், சின்னச் சங்கரன் கதை, சந்திரிகையின் கதை முதலிய கதைகளையும் உருவகங்களையும் எழுதியுள்ளார். அவை யாவற்றிலும் அவரது புதுயுகச் சிந்தனைகள் இழையோடியுள்ளதை அவதானிக்கலாம்.

பாரதியார் தாம் காணவிழைந்த புது யுகத்துக்கு ஏற்றவகையில் இந்து மதத்தைச் சீர்திருத்த முயன்றார். இந்து மதத்தில் இடம் பெறும் மூடக்கொள்கைகள், இடைக்காலத்தில் புகுந்துகொண்ட பொய்ம்மைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழல்கள், போலிவேடங்கள், பெண்ணினம் பற்றிய அலட்சியம், வருணப் பாகுபாடு முதலியவற்றைத் துணிகரமாகக் கண்டித்ததுடன், புதுமைக் கருத்துக்களையும் ஆணித்தரமாக வற்புறுத்தியுள்ளார். பாரதியாரின் இறைபக்தி ஏனைய இறை அடியார்களைப் போன்று இறைவனின் அருட்பெருங் குணங்களையோ பெருமைகளையோ ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையிலான தொடர்பையோ பாடுவதை முதன்மையான நோக்கமாகக் கொள்ளாது இந்துக்கள் மட்டுமன்றி, மனிதவர்க்கம் முழுவதும் சகல துறைகளிலும் விடுதலை பெற்று உயர்நிலையெய்தி வாழ்வாங்கு வாழவேண்டும் என்ற ஒப்பற்ற பெருநோக்கை முதன்மையாகக் கொண்டது.

"மண்பயனுற வேண்டும் வானகம் இங்கு
தென்படவேண்டும்"

"கவலைதுறந்து இங்கு வாழ்வதே வீடு"

என்பன பாரதியாரின் மணிவாக்குகள். மன்னர்களையும் பொய்ஞ்ஞான மதக்குரவர்களையும் மதிக்காத பாரதியைத் தெய்வங்களும் சிறிது அச்சத்துடனேயே அணுகுகின்றன. தம்மை மறவாத சிந்தையராய்ச் செயற்படும் பக்தர்களுக்குக் காட்சிகொடுக்கும் தெய்வங்கள் பொதுவாகப் பக்தர்களைநோக்கி 'எம்மைப் பாடுக' என வேண்டியதாகவே அறிகின்றோம். ஆயின் பாரதிக்குக் காட்சி கொடுத்த தெய்வங்களோ 'எம்மைப் பாடுக' என வேண்டாது வேறுவகையில் வேண்டுகின்றன, அதனைப் பாரதியாரே வெளியிடுவதை நோக்கலாம்:

**நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்**
**நையப் பாடென் றொருதெய்வம் கூறுமே**
**கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்**
**கொண்டு வையமுழுதும் பயனுறப்**
**பாட்டிலே அறம் காட்டெனும் ஓர்தெய்வம்**
**பண்ணி லின்பமும் கற்பனை விந்தையும்**
**ஊட்டி யெங்கும் உவகை பெருகிட**
**ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே.**

என்கிறார்.

பாரதியார் வெறுமனே தேசியக் கவிஞரல்லர். பல்வேறு துறைகளிலும் அவரது சிந்தனைக்கதிர்கள் பாய்ந்திருப்பதை அவதானிக்க முடியும். இந்துமதத்தின் மூலவேராகத் திகழும் வேதங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை, இந்துமதப் பெரியார்களின் தத்துவங்கள், நாயன்மார், ஆழ்வார் பாடல்கள் முதலியவற்றை ஆழ்ந்து கற்றுத் தெளிந்தவர். இந்துமதத்தின் பூர்வநிலையையும் இடைக்காலத்து நிலைமைகளையும் ஊன்றி நோக்கிய பாரதியார் எதிர்காலத்தில் அது செல்ல வேண்டிய வழியையும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் சுட்டிக் காட்டியுள்ளார். "நமது தேசத்தில் பூர்வசாஸ்திரங்களுக்கும் நடைமுறைகளுக்கும் விரோதமான ஆசாரங்கள் பல பிற்காலத்தில் வழக்கமாய் விட்டன." (பாரதியார் கதைகள், சென்னை, 1977—பக். 211) எனவும், "நமது சாஸ்திரங்களெல்லாம் செல்லரித்துப் போய்விட்டன. தேசத்து ஞானக் களஞ்சியத்திற்குக் காப்பாளிகளாக இருந்த பிராமணர் மடைத்தவளைகளைப்போலச் சிற்சில மந்திரங்களைச் சம்பந்தமில்லாமல் யாதொரு பொருளும் அறியாமற் கத்துகிறார்களே யல்லாது, உண்மையான ஞானப்பெருமை இவர்களுக்கு லவலேசமும் இல்லாமல் போய்விட்டது. இந்நாட்டின் கலைகள் அனைத்தும் மறைந்துபோய் விட்டன. வீரியம் போய் விட்டது. பலம், சுகம், செல்வம் முதலிய நற்பொருள்கள் எல்லாம் அகன்றுவிட்டன. மனங்குன்றி, உடல் சோர்ந்து, உண்ண உணவின்றிக் கண் குழிந்து போயிருக்கும் அடிமை ஜாதியார் இந்நாட்டில் மகாபரிதாபகரமான வாழ்க்கை நிகழ்த்துகின்றார்கள்." (பாரதியார் கதைகள் பக். 17) என மனம் நொந்து கூறும் பாரதியார் தாம் காண விழைந்த கிருதயுகத்தையும் அன்றைய (இன்றும் பொருந்துவதே) நிலையையும் ஒப்பிட்டுப் பர்வதகுமாரியின் வாயிலாகப் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்: "மானுடா! உங்கள் உலகத்திலே வாழ்வோர் சோற்றுக்கும் ஆடைக்குமாகப் பொய் பேசுகிறார்கள்; வஞ்சனை செய்கிறார்கள்; நடிக்கிறார்கள்; ஏமாற்றுகிறார்கள்; திருடுகிறார்கள்; ஹிம்சைகள் செய்கின்றார்கள்; கொலை புரிகிறார்கள்; உடலை விற்கிறார்கள்; அறிவை விற்கிறார்கள்; அடிமைகளாகி ஆத்மாவை விற்கிறார்கள்; மானுடா, உங்கள் உலகத்திலே ஏழைகளாயிருப்போர் பெரும்பாலும் மானமற்ற அடிமைகள். அவர்கள் அற்ப சுகத்தின்பொருட்டு எது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமாயினும் செய்வார்கள். செல்வரா யிருப்போரில் பெரும்பாலோர் திருடர்கள்; உங்கள் உலகத்திலே எளியோராயிருப்போர் வெறுத்தற்குரிய நீச குணமுடையார்; வலி யோராயிருப்போர் காலால் மிதித்து நசுக் குதற்குரிய தீக்குணமுடையார்.......... எங்கள் உலகத்திலே மரணமில்லை; பொய்யில்லை; மேலும் தீய நடிப்பு, நீசப்பாங்கு, வேஷம் போடுதல், ஒன்று நினைத்து வேறொன்று பேசுதல்—இந்த மகாபாதகக் குணமில்லை. இவற்றால் விளையக்கூடிய துன்பங்கள் அனைத்து மில்லை..........'' (பாரதியார் கதைகள்: பக்-45)

இந்துமதத்தில் இடைக்காலத்திற் புகுந்து கொண்ட பொய்ம்மைக் கருத்துகள் ஒருபுறம் இந்துமதத்தைச் சிறிது சிறிதாகச் சீர்கே டடையச் செய்ததுடன், மறுபுறம் இந்து மக்களின் வாழ்க்கைச் சீர்கேட்டுக்கும் வழி வகுத்தன. உலகவாழ்வையும் உலகியல் இன் பங்களையும் துச்சமாக மதிப்பதும் தூற்றி ஒதுக்குவதும் உலகவாழ்வு அநித்தியமானது; காண்பதெல்லாம் வெறும் மாயை என மாயா வாதம் பேசுவதும் சமூகத்தின் முக்கிய கூறான பெண் இனத்தை அவமதித்து அடிமைப் படுத்திச் சமய வாழ்விலிருந்து அவர்களைப் புறக்கணித்து ஒதுக்குவதும் துறவறத்தை வற்புறுத்துவதும் இந்துமதத்துக்குரியன வல்ல; இவை இந்துமதத்தில் இடைக்காலத் திற் புகுந்து கொண்டவை; அர்த்தமற்றவை; வன்மையாகக் கண்டிக்கப்பட்டு அகற்றப்பட வேண்டியவை. இந்துமதத்தில் இடைக்காலத் திற் புகுந்துகொண்ட இத்தகைய குறை பாடுகளையும் இவற்றால் இந்துக்களது வாழ் வில் ஏற்பட்ட மாபெரும் தீங்குகளையும் கூர்ந்து கவனித்த பாரதியார் இந்துமதம் எதிர்காலத்திலே தொடர்ந்து சிறப்புடன் விளங்க வேண்டுமானால், கிருதயுகம் மலர வேண்டுமானால் இத்தகைய குறைபாடுகள் அவசியம் களையப்பட வேண்டியன என்பதை உணர்ந்து அவற்றைத் தமது கவிதைகளில் வடித்துக் காட்டியதோடல்லாமற் கட்டுரை களிலும் வெளிப்படுத்தினார். கிருதயுகத்தைக் கேடின்றி நிறுத்த விரதங் கொண்டுழைத்த பாரதியார் தெரிவித்துள்ள கருத்துக்கள் இங்கு ஆழ்ந்து நோக்கத் தக்கவை.

உலகவாழ்வின் செம்பாதியாக விளங்கும் பெண் இனத்தை அடக்கி ஒடுக்கிக் கொடு மைக்குள்ளாக்கி அடிமைப்படுத்தல் மிருகத் தனமான செயலாகும். அதற்கேற்ற வகை யிலேயே இடைக்காலத்தில் இந்துமதத்திற் புகுந்துகொண்ட கருத்துக்களும் அமைந்தன. இவற்றினால் ஏற்பட்ட—ஏற்பட்டுக் கொண் டிருக்கும் தீய விளைவுகள் அநேகம். ''நமது ஹிந்து தர்மத்தையும் மந்திர மகிமையையும் இடைக்காலத்து மூடராஜாக்களும் அயோக் கியப் பூஜாரி, பண்டார மந்திரவாதிகளும் எவ்வளவு கேலிக்கிடமாகச் செய்துவிட்டார் கள்.'' (பாரதியார் கதைகள் — பக். 364). ''தர்மம் பெண்ணால் ஏற்படுத்தப்பட்டது. விரதம், தவம், பூஜை, ஆகாரம், வீடு, பள்ளிக்கூடம் அனைத்தும் ஏற்படுத்திக் கொடுத்தது பெண். தர்மம் பெண்ணால் உண்டானது. பெண் தாய். பெண்ணைத் தன் னில் பாதியென்று கருதாமல் தனக்கு அது பகுதிப்பட்டிருக்கவும் வேண்டும். ஆனால்தான் அதைத் தன் பகுதியாகத் தானாக, நேசிக்க வும் மாட்டேன் என்று ஆண் நெடுங்கால மாகச் சொல்லி வருகிறது. அதற்காகப் பெண் பழிவாங்குகிறது. ஆணைப் பழிவாங்கி அந்தத் துயரத்தில் தானும் மடிகிறது. சிவன் பாதி, சத்தி பாதி போலச் சரிபாதியாக எப் போது ஆண் பெண்ணை ஒப்புக்கொள்ளு கிறதோ அப்போது ஆணுக்குப் பெரிய வலிமை சித்திக்கிறது. கலியுக முடிவில் இது முற்றிலும் பரிபூரணமாக நிகழும்.'' (பாரதி யார் கதைகள்—பக். 385). என நம்பிக்கை யுடன் கூறும் பாரதியார் வேறோரிடத்தில் மிளகாய்ப்பழச் சாமியார் (பெண் சாமியார்) மூலம் வெளிப்படுத்தியுள்ள கருத்தும் இங்கு நோக்கத்தக்கது. '' ஹா, ஹா பொறுத்துப் பொறுத்துப்பொறுத்துப் பொறுத்துப் போது மடா, போதுமடா போதும்! உலகத்திலே நியாயக்காலம் திரும்புவதாம். ருஷியாவிலே கொடுங்கோல் சிதறிப் போய்விட்டதாம். ஐரோப்பாவிலே ஏழைகளுக்கும் பெண்களுக் கும் நியாயம் வேண்டும் என்று கத்துகிறார்க ளாம். உலக முழுமைக்கும் நான் சொல்லு கிறேன். ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியா யம் சொல்லுக்கடங்காது. அதை ஏட்டிலே எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருமில்லே. பறையனுக்குப் பார்ப்பானும் கறுப்பு மனுஷனுக்கு வெள்ளை மனுஷனும் நியாயம் செய்ய வேண்டுமென்று சொல்லு கிறீர்கள். பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதையெல்லாம்விட முக்கிய மென்று நான் சொல்லுகிறேன். ..................விப சாரிக்குத் தண்டனை இகலோக நரகம். ஆண் மக்கள் வியபிசாரம் பண்ணுவதற்குச் சரியான தண்டனையைக் காணேம்..........'' (பாரதியார் கதைகள்—பக். 388). பெண்ணின் இன்றி யமையாமை பற்றிப் பாரதியார், மாதர் களின் உதவியின்றி ஒரு தேசமும் எவ்வித மான அபிவிருத்தியும் அடையமுடியாது. ஈஸ்வரனுக்கே தேவிதான் சக்தியென்று மத வாதிகள் சொல்லும் உண்மைப் பொருளை மறந்துவிடக்கூடாது. சக்தியாகிய தேவி இல்லாத விஷயத்தில் புருஷன் ஒன்றும் செய்ய முடியாதென்பது மத விவகாரங்களில் மாத்திரமன்று எல்லா விவகாரங்களிலும் உண்மையேயாகும்.'' (பாரதிதரிசனம்; 1977, இரண்டாம் பாகம்—பக். 195) எனக் கூறி யுள்ளமை சிந்திக்கத்தக்கது.

இடைக்காலத்திலிருந்து இந்து மதத்திலே துறவறம் முக்கியமான தொன்றுகப் போற் றப்பட்டது. இத்துறவறம்பற்றிய கருத் துடன் பின்னிப் பிணைந்தனவாகவே பெண் வெறுப்பு, மாயாவாதம் ஆகியன பற்றிய கருத்துக்களும் இடம் பெற்றன. இந்துக்கள் மத்தியிலே, துறவறம் என்று கூறினுலே உலகப் பற்றுக்களைத் துறந்து பெண்களை வெறுத்துக் காவியுடை கமண்டலங்களுட னும் தொழிலொன்றுமற்றுச் சோம்பித் திரி வது என்னும் அபிப்பிராயம் நிலவுகிறது.

துறவிகளாக வாழ்ந்தோரில் அநேகர் உலகத்து அப்பாவி மக்களின் மேம்பாட்டிற் காக உழைக்காது மடங்களிலும் மரப் பொந்துகளிலும் மலைக்குகைகளிலும் புக லிடம் தேடித் தம்மை மட்டும் உயர்த்திக் கொள்ள முயன்றனர். அத்துடனமையாது பெண்களை மாயப் பொய்பல கூறும் வஞ்சகப் பிறவிகள், பேய் பிசாசுகள், ஆண்களின் ஆன்மீக முன்னேற்றத்திற்குக் குறுக்கே நிற் கும் மறலிவிட்ட தூதுவர்கள், உலக பாவங் களின் சின்னங்கள் என்றெல்லாம் வசைமாரி பொழிந்து நச்சுக் கருத்துக்களைப் பரப்பும் திருக்கைங்கரியங்களிலும் ஈடுபட்டனர். பெண்கள் உலகபாவங்களின் சின்னங்களா கையால் அவர்கள் இறைவன் பாதம் அடைய முடியாது; மகரிஷிகளாகவோ முனிபுங்கவர் களாகவோ உயரமுடியாது என்ற கருத்தை யும் பரப்பினர். இவையாவும் அநீதியானவை; இந்துமதத்துக்கு அழிவை ஏற்படுத்துபவை; கிருதயுக மலர்ச்சிக்குத் தடைக்கற்களாக நிற்பவை என்பதை நன்குணர்ந்த பாரதியார் இத்தகைய மூடக்கருத்துகளை வன்மையாகக் கண்டித்துத் தக்க ஆதாரங்களுடன் விளக்கி உண்மையைத் தெளிவுபடுத்தியமை உற்று நோக்கத்தக்கது.

''ஸ்திரீகளை மிருகங்களாக வைத்து நாம் மாத்திரம் மகரிஷிகளாக முயலுதல் மூடத் தனம்'', ''பூர்வீக வேதரிஷிகள் எல்லோரும் பத்தினிகளுடன் வாழ்ந்ததாகவே முன்னூல் கள் சொல்லுகின்றன. பௌத்தமதத்தி லிருந்துதான் ஹிந்துமதமும் பிற மதங்களும் ஒரேயடியாக உலகத்தைத் துறந்து விடுவ தாகிய நித்திய சந்நியாச முறையைக் கைக் கொண்டனவென்று கருதுகிறேன். வேத ரிஷி கள் மோக்ஷத்துக்குச் சாதனமாகச் செய்த வேள்விகளிலெல்லாம் அவர்களுடன் மனைவி யருமிருத்தல் அவசியமாகக் கருதப்பட்டது... காதல் தவறுன வழிகளில் செல்லும்போதும் உண்மையினின்றும் நழுவும்போதும் மாத் திரமே, அது இவ்வுலகத்தில் பெருந் துன்பங் களுக்கு ஏதுவாகிறது. உண்மையான காதல் ஜீவன்முத்திக்குப் பெரிய சாதனமாகும்...... இன்பமயமான இவ்வுலகத்திலே காணப்படும் எல்லா இன்பங்களைக் காட்டிலும் காத லின்பமே சாலவும் சிறந்தது. அதில் உண் மையும் உறுதியும் கொண்டு நின்றுல், அது எப்போதும் தவருததோர் இன்ப ஊற்றுகி மனித வாழ்வை அமரவாழ்வுக்கு நிகராகப் புரிந்து விடும்......'' (பாரதியார் கதைகள், பக். 231, 233). ''பெண்டு பிள்ளைகளையும் சுற்றத்தாரையும் இனத்தாரையும் நாட்டா ரையும் துறந்து செல்பவன் கடவுளுடைய இயற்கை விதிகளைத் துறந்து செல்வோன் வலிமையில்லாமையால் அங்ஙனம் செய்கி ருன். குடும்பத்தை விடுவோன் கடவுளைத் துறக்க முயற்சிபண்ணுகிருன்... இல்லா ளகத் திருக்க இல்லாத தொன்றில்லை—கற்புடைய மனைவியுடன் காதலுற்று, அறம்பிழையாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்தலே இவ்வுலகத்தில் சுவர்க்க வாழ்க்கையை ஒத்ததாகும். ஒருவனுக்குத் தன் வீடே சிறந்த வாசஸ்தலம். மலையன்று. வீட்டிலே தெய்வத்தைக் காணத் திறமையில்லாதவன் மலைச்சிகரத்தை யடுத்ததொரு முழையிலே கடவுளைக் காணமாட்டான்.'' (பாரதியார், பகவத்கீதை, மொழிபெயர்ப்பு, முன்னுரை—பக். 37–38). ''பாரததேசத்தில் புத்தமதம் ஜீவகாருண்யம், சர்வசன சமத்துவம் என்ற இரண்டு தர்மங்களையும் நெடுந்தூரம் ஊன்றும்படி செய்தது. ஆனால் உலக வாழ்க்கையாகிய ஜகத்தின் ஒளி போன்றவளாகிய பத்தினியைத் துறந்தவர்களே மேலோர் என்று வைத்து, அவர்களுக்குக் கீழே மற்ற உலகத்தை அடக்கிவைத்து உலகமெல்லாம் பொய்மயம் என்றும், துக்கமயம் என்றும் பிதற்றிக்கொண்டு வாழ்நாளைக் கழிப்பதே ஞானநெறியாக ஏற்படுத்தி, மனித நாகரிகத்தை நாசஞ்செய்ய முயன்றதாகிய குற்றம் புத்தமதத்துக்கு உண்டு'' (பாரதியார், பகவத்கீதை, மொழிபெயர்ப்பு, முன்னுரை, பக்.—46). என வரும் பாரதியாரின் கூற்றுகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை.

உலகவாழ்க்கை அநித்தியமானது; உலக இன்பங்கள் சிற்றின்பங்கள்; வாழ்க்கையின் ஒளிவிளக்காகத் திகழும் பெண் பாவங்களின் சின்னம்; துறவு வாழ்க்கையே மேலானது; உலகம் மாயை; உலக வாழ்க்கையைத் துறப்பதே வீடுபேற்றுக்கு வழி என்னும் கருத்துகள் உலகவாழ்க்கையைச் சீரழியச் செய்வதுடன் இந்து மதத்தையும் உயிர்த் துடிப்பற்றதாகச் செய்யவல்லவை. அதே சமயம் இத்தகைய கருத்துக்களைப் பயன்படுத்தி சமூகத்தின் ஒருசாரார் அப்பாவி மக்களை ஏமாற்றிச் சமயத்தின் பெயராலும் தெய்வங்களின் பெயராலும் சுகபோக வாழ்க்கை வாழ்ந்தனர்; வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்துமதத்திலே ஒருதேவைக்கும் உதவாத போலித் துறவிகளும் உருத்திராட்சப் பூனைகளும் பண்டாரங்களும் மகரிஷிகளும் யோகிராஜ்களும் சாமிஜீக்களும் லட்சக்கணக்கில் உள்ளனர். இவர்கள் சமூகத்துக்குச் சேவை செய்வதற்குப் பதில் பெரும்பாலும் சமூகத்துக்குப் பாரமாகவே இருக்கிறார்கள்; வீண்பொழுது போக்கிச் சோம்பித்திரிகின்றார்கள். இவ்வுலகத்திலேயே இப்பிறவியிலேயே அமரவாழ்வையும் கிருதயுக மலர்ச்சியையும் வேண்டிநின்ற பாரதியார் இத்தகைய கருத்துக்களைச் சாடியதில் வியப்பில்லை. வான்மறை செய்த வள்ளுவரும் பெண்ணின் பெருமையையும் இன்றியமையாமையையும் சிறப்புற உரைத்துள்ளார். எனினும் தெய்வத்தைத் தொழாது கணவனைத் தெய்வமாகத் தொழவேண்டும்; அதுவே பெண்ணுக்கு அழகும் வலிமையுமாகும் என வலியுறுத்தினாரேயொழியப் பெண்ணை முதன்மைப் படுத்தினாரில்லை. அது போன்று இல்லற வாழ்வை எவ்வளவுதான் ஏற்றிப் போற்றினாலும் துறந்தார் பெருமையை வானுற ஓங்கி ஒலிக்கின்றார். ஆயின் பாரதியாரோ ஜகத்தின் ஒளிவிளக்காகப் பெண்ணைக் கொண்டதுடன் ஆண்வர்க்கத்தை நோக்கி, 'காதல் செய்யும் மனைவியே சக்தி கண்டீர்; கடவுள் நிலை அவளாலே எய்தல் வேண்டும்' என முழங்குகின்றார். காதல் என்று கேள்விப்பட்டாலே காதைப் பொத்திக் கொண்டோடும் போலிச் சமயப் பெரியார்களும் வேடதாரிகளும் நிறைந்த சமய உலகிற் காதலின் மேன்மையைப் பாரதியார் அழுத்திக் கூறுகின்றார். கந்தபுராணம் வள்ளியம்மை திருமணப் படலத்தைக் கோவில்களில் ஆண்டுதோறும் பயபக்தியுடனும் ஆனந்தத்துடனும் படிப்பார்கள்; கந்தன் — வள்ளி காதலை மிக்க தூய்மையானது; உயர்ந்தது எனப் பெருமையுடன் பிரசங்க மாரி பொழிவார்கள் ; 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்' என இராமன் — சீதை காதலைக் காவியக் கவிநயத்துடன் படித்து இன்புறுவார்கள். ஆயின் நடைமுறை வாழ்க்கையிற் காதலையும் அதற்குரிய பெண்ணையும் தூற்றி ஒதுக்கிக் காலிற் போட்டு மிதிப்பார்கள். காதல் என்பது காவிய, புராணக் கதாநாயகர்களுக்கும் தெய்வங்களுக்கும் மட்டுமே உரியது; சாதாரண மக்களுக்கு கிடையாது என்ற பாவனையிற் கொக்கரிப்பார்கள். வயதுவந்த ஆணும் பெண்ணும் உள்ளத்தூய்மையுடன் ஒருவரையொருவர் காதலித்துத் திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு 'ஓடுகாலிகள்', 'கொண்டோடிகள்' என்றெல்லாம் நாமகரணம் சூட்டி மகிழும் பெரியோர்கள் இன்றும் எம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இத்தகையோரின் கருத்துக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுக்குச் சாட்டையடி கொடுக்கும் வகையி லேயே பாரதியாரின் மேற்கண்ட கூற்றுக்கள் அமைந்துள்ளன.

"வேத காலத்தில் இந்தத் துறவுவழி ஹிந்துக்களுக்குள்ளே கிடையாது. வேத காலத்தில், சந்நியாசம் நமக்குள்ளே இருந்தி ருப்பதாகச் சுவாமி விவேகானந்தர் சொல்லி யிருக்கிறார். வசிஷ்டர், வாமதேவர் முதலிய வேதரிஷிகள் அத்தனை பேரும் மணம் புரிந்து கொண்டு மனைவி மக்களுடனேயே இன்புற்று வாழ்ந்தனர். — மகாபாரதத்திலும் மற்றப் பூர்வ புராணங்களிலும் வேதரிஷிகளைப் பற்றிய கதைகளும் சரித்திரங்களும் ஒரே சித்தாந்தமாக வேதரிஷிகளுக்குத் துறவறம் என்ற விஷயமே இன்னதென்று தெரியாது என்ற என் வார்த்தையை நிலை நிறுத்துகின் றன. மேலும், சுவாமி விவேகானந்தர் வேதத்தின் பிற்சேர்க்கைகளாகிய உபநிஷத் துகளையே முக்கியமாகப் பயின்றவர். இந்த உபநிஷத்துகள் வேதாந்தம் என்ற பெயர் படைத்தன. அதாவது வேதத்தின் நிச்சயம், இவை வேதரிஷிகளால் சமைக்கப்பட்டன வல்ல. ஸம்கிதைகள் என்று மந்திரங்கள் சொல்லப்படுவனவே உண்மையான வேதங் கள். அவையே ஹிந்து மதத்தின் வேர் (பாரதியார், பகவத்கீதை, மொழிபெயர்ப்பு, முன்னுரை; பக். 42) 'இனி புத்தமதம் இழைத்த பெருந்தீங்கு யாதெனிலோ இடைக்காலத்து மாயாவாதத்தை நம்முள்ளே எழுப்பிவிட்டது. உபநிஷத்துகளிலும் வேதத் திலும் 'மாயா' என்ற சொல் பராசக்தியைக் குறிப்பது. இடைக்காலத்தில் மாயை பொய் யென்றதொரு வாதம் உண்டாயிற்று இதனால் ஜகத் பொய்; தேவர்கள் பொய், சூரிய நக்ஷத் திராதிகள் பொய்; மனம் பொய்; சைதந்யம் மாத்திரம் மெய்; ஆதலால், இந்த உலகத் துக் கடைமைகள் எல்லாம் எறிந்துவிடத் தக்கன. இதன் இன்பங்கள் எல்லாம் துறந்து விடத்தக்கன என்றதொரு வாதம் எழுந்தது. இவ்வுலக இன்பங்களெல்லாம் அசாசுவதம்; துன்பங்கள் சாசுவதம். இத்தகைய உலகத் தில் நாம் எந்த இன்பங்களையும் தேடப்புகு தல் மடமையாகும். எனவே, எந்தக் கடமை களையுஞ் செய்யப் புகுதல் வீண்சிரமமாகும்' என்ற கட்சி ஏற்பட்டது. ஆனால், இவர்கள் எல்லா இன்பங்களையும் துறந்து விட்டதாக நடிக்கிறார்களேயன்றி, இவர்கள் அங்ஙனம் உண்மையிலே துறக்கவில்லை. இவ்வுலகத்தில் ஜீவர்கள் எல்லா இன்பங்களையும் துறப்பது சாத்தியமுமில்லை. கடமைகளைத் துறந்து விட்டுச் சோம்பேறிகளாகத் திரிதல் சாத் தியம். அது மிகச் சுலபமும் கூட. இந்தச் சோம்பேறித்தனத்தை ஒருபெரிய சுகமாகக் கருதியே அநேகர் துறவுபூணுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகின்றது, (பாரதியார், பகவத்கீதை, மொழிபெயர்ப்பு, முன்னுரை; பக்.49) எனக் கூறும் பாரதியார் தமது கவி தைகளிலும் மாயா வாதக் கருத்துகளால் இந்துமதத்துக்கும் இந்துக்களுக்கும் ஏற்படக் கூடிய பெருந்தீங்குகளையும் அவை அகற்றப் பட வேண்டியதன் அவசியத்தையும் வற்பு றுத்தியுள்ளார்.

பாரதியார் தாம் காணவிழைந்த கிருத யுகத்தின் மலர்ச்சிக்கு மேற்கூறியவை மட்டு மன்றி மக்களிடம் மண்டிக்கிடக்கும் அறி யாமையாகிய இருள் அகலவேண்டும்; உள் ளத்திலே உண்மையொளி துலங்கவேண்டும்; சமூகத்தில் மலிந்துள்ள மூடநம்பிக்கைகள், மூடபக்தி, குறுகிய மனப்பான்மை, நயவஞ் சகம், பொறாமை, குரூரப் பண்புகள் இவை யாவும் அகன்று மனித உள்ளம் பரந்து விரிந்ததாகப் பண்பட்டதாக விளங்க வேண்டும்; சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், அவற்றால் ஏற்படும் உரைக்க வொண்ணா அவலங்கள், கொடுமைகள் யாவும் அகன்று பொதுவுடைமை மலர வேண்டும், மக்கள் சகலதுறைகளிலும் விடுதலை பெறவேண்டும் என்னும் கருத்துகளையும் ஆணித்தரமாகத் தமது ஆக்கங்கள் யாவற்றி லும் வற்புறுத்தினார். அவற்றின் பொருட்டுத் தமது சொந்த வாழ்விலும் இறுதிவரை அய ராது பாடுபட்டுழைத்தார். இந்துமத புரா ணங்களிலும் ஸ்மிருதிகளிலும் நிறைந்திருந்த பொய்ம்மைகளையும் மூடக் கருத்துக்களையும் 'புராணங்கள்,' 'ஸ்மிருதிகள்' என்னும் தலைப்பு களிலமைந்துள்ள பாடல்களிலும் பிறபகுதி களிலும் வன்மையாகவும் கண்டித்த பாரதி யார், மக்கள் மத்தியில் நிறைந்துள்ள மூடக்கருத்துக்கள் அவர்களை அறியாமை இருளில் மூழ்கடித்து அவர்களது முன்னேற் றத்துக்குத் தடையாக அமையுமாற்றையும் அவை அகற்றப்பட வேண்டியதன் அவசியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையும் தமது கட்டுரைகள் பலவற்றிலே தெளிவுபடுத்தியுள்ளார். பாரதியார் ஓரிடத்திலே, 'சாதாரணமாக ஒருவனுக்குத் தலைநோவு வந்தாலுங்கூட, அதற்குக் காரணம், முதல்நாள் பசியில்லாமல் உண்டதோ, அளவு மீறித் தூக்கம் விழித்ததோ, மிகக் குளிர்ந்த அல்லது மிக அசுத்தமான நீரில் ஸ்நானம் செய்ததோ என்பதை ஆராயும் முன்பாகவே அது பூர்வ ஜன்மத்தின் கர்ம பயனென்று ஹிந்துக்களிலே பாமரர் கருதக் கூடிய நிலைமை வந்துவிட்டது. உலகத்து வியாபார நிலைமையையும் பொருள் வழங்கும் முறைகளையும் மனிதததந்திரத்தால் மாற்றிவிடலாம் என்பதும் அங்ஙனம் மாற்றுமிடத்தே செல்வ மிகுதியாலும் செல்வக் குறைவாலும் மனிதர்க்குள்ளே ஏற்படும் கஷ்டங்களையும் அவமானங்களையும் பசிகளையும் மரணங்களையும் நீக்கிவிடக்கூடும் என்பதும் தற்காலத்து ஹிந்துக்களிலே பலருக்குத் தோன்றவே இடமில்லை. பிறர் சொல்லிய போதிலும் அது அவர்களுக்கு அர்த்தமாவது சிரமம். ஏனென்றால் பணவிஷயத்தில் ஏற்பட்ட பயங்கரமான பேதங்களையும் தாரதம்மியங்களையும் பாரபக்ஷங்களையும் கண்டு அதற்கு நிவக்ஷணம் தேட வழிதெரியாத இடத்திலேதான் பெரும்பாலும் இந்தப் பூர்வ ஜன்மகர்மவிஷயம் விசேஷமாகப் பிரஸ்தாபத்துக்கு வருகிறது. அற்பாயுள் நீண்ட ஆயுள், நோய் நோயின்மை, அழகு அழகின்மை, பாடத் தெரிதல் அது தெரியாமை, படிப்புத் தெரிதல் அது தெரியாமை — முதலிய எல்லாப் பேதங்களுக்கும் பூர்வஜன்மத்தின் புண்ணிய பாவச் செயல்களையே முகாந்தரமாகக் காட்டினார்களெனினும் பணவிஷயமான வேறுபாடுகளே இவையெல்லாவற்றைக் காட்டிலும் மனிதர்களுக்கு உள்ளக் கொதிப்பையும் நம்பிக்கைக் கேட்டையும் விளைவித்து, அவர்களை இந்த ஜன்மத்தின் துக்கங்களுக்குப் பூர்வஜன்மத்திலே காரணம் தேடுவதும் அடுத்த ஜன்மத்தில் பரிகாரம் தேடுவதுமாகிய விநோதத் தொழிலே தூண்டின, (பாரதியார், பகவத்கீதை, மொழிபெயர்ப்பு, முன்னுரை—பக். 48). எனக் கூறியுள்ளமை இந்துமதத்திற் பற்றுள்ள அத்தனை பேரும் ஆழ்ந்து நோக்கத்தக்கவை. தீவிர பக்திமானை பாரதியாரின் ஆழ்ந்தகன்ற தெளிந்த அறிவியற் கண்ணோட்டத்தையும் உண்மையை நேர்நின்று நோக்கும் அசுரத் துணிவையும் காணலாம். முற்போக்குச் சிந்தனைகளோ மறுமலர்ச்சிக் கருத்துகளோ பரவாத காலப்பகுதியில் இற்றைக்கு ஏறத்தாழ அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பே இக்கருத்துக்களைத் தாம் பகவத் கீதைக்கு எழுதிய நீண்ட சிறப்பு வாய்ந்த முன்னுரையிலே தெரிவித்துள்ளார்.

இந்துமதத்தில் இடைக்காலத்தில் வேரூன்றத் தொடங்கிய பிறப்பினடிப்படையிலான சாதிப் பாகுபாட்டினால் ஏற்பட்ட கொடுமைகள், சிறுமைகள், அவலங்கள் முதலியன எண்ணிலடங்காதன. அதனால் இந்துமதத்துக்கும் இந்துக்களுக்கும் அன்றுமட்டுமன்று இன்றும் தொடர்ந்து ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அழிவுகள் சொல்லில் அடங்காதன. அவற்றை இங்கு விரிப்பில் அதுவே தனிக்கட்டுரையாக விரியும். இன்று இந்தியாவிலும் ஈழத்திலும் வாழும் தாழ்த்தப்பட்ட இந்துக்கள் உயர்சாதி இந்துக்களின் சாதித் திமிரிலிருந்தும் கொடுமைகளிலிருந்தும் விடுதலை நாடி வேறு மதங்களுக்கு மாறிக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். பாரதியார் இதனை அன்றே கூர்ந்து கவனித்து எச்சரிக்கையாகவும் மனம் நொந்தும் பின்வருமாறு கூறினார். '' 1200 வருடங்களுக்கு முன்பு வடநாட்டிலிருந்து முகமதியர்கள் பஞ்சாப் நாட்டில் பிரவேசித்த போது நம்மவர்களின் இமிசை பொறுக்க முடியாமல் வருந்திக் கொண்டிருந்த பள்ளர் பறையர் பேரிகைகொட்டி, மணிகள் அடித்துக்கொண்டு போய் எதிரிகளுக்கு நல்வரவு கூறி அவர்களுடன் கலந்து கொண்டதாக இதிகாசம் சொல்லுகின்றது. ஹிந்து ஜனங்களின் தொகை வருஷந்தோறும் அதி பயங்கரமாகக் குறைந்துகொண்டு வருகிறது. மடாதிபதிகளும் ஸந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்தமடைந்து வருகின்றனர். ஹிந்து ஜனங்கள்! ஹிந்து சனங்கள்! நமது இரத்தம், நமது சதை, நமது எலும்பு, நமது உயிர் — ஹிந்துஸ்தானத்து ஜனங்கள் — ஏனென்று கேட்பாரில்லாமல் பசிப்பிணியால் மாய்ந்து போகின்றனர்.'' (பாரதியார் கதைகள், பக். 455).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருதயுகம் என்றால் எத்தகையது என்பது பற்றிப் பாரதியாரே தமது கவிதைகளிற் பல இடங்களிலும் தெளிவான விளக்கம் கொடுத்துள்ளார். குறிப்பாக, விநாயகர் நான்மணிமாலை, 'புதிய ருஷ்யா' என்னும் தலைப்புகளிலமைந்த பாடற்பகுதிகளில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் நோக்கத்தக்கவை. முற்போக்கு உள்ளம் படைத்த பாரதியார் 1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் ஏற்பட்ட மாபெரும் அக்டோபர்ப் புரட்சியைத் தாம் காண விழைந்த கிருதயுகத்தின் மலர்ச்சியாகவே கண்டார்; அன்னை பராசக்தியின் கடைக்கண் அருளினாலேயே கொடுங்கோன்மை அகன்றது எனவும் நம்பினார். கவிதைகளில் மட்டுமன்றித் தாம் எழுதிய கட்டுரைகளிலும் கதைகளிலும் கூட கிருதயுகம்பற்றி விரிவாக விளக்கியுள்ளார். ''பாரதநாட்டில் இப்போது கலியுகம். ஆனால் இன்னும் இரண்டு மூன்று தலைமுறைகளில் கலியுகம் நீங்கிக் கிருதயுகம் பிறக்கப் போகிறது'' (பாரதியார் கதைகள், பக். 71). ''எந்த ஜந்துவும், வேறு எந்த ஜந்துவையும் ஹிம்சை பண்ணாமலும் எல்லா ஜந்துக்களும் மற்றெல்லா ஜந்துக்களையும் தேவதாரூபமாகக் கண்டு வணங்கும்படிக்கும் விதியுண்டானால் அதுதான் கிருதயுகம்'' (பாரதியார் கதைகள், பக். 344) எனத் தெரிவித்துள்ளார். இவ்வுலகத்திலேயே இப்பிறவியிலேயே எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தி அமரவாழ்வு வாழவேண்டும்; அவ்வாறு மக்கள் வாழ்வாங்கு வாழுங் காலகட்டமே, சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளோ அவற்றின் அடிப்படையிலான ஆக்கிரமிப்புக்களோ சுரண்டலோ கொடுமைகள் துயரங்களோ அற்று போலித்தனமும் ஏமாற்றும் ஒழிந்து சகலதுறைகளிலும் மக்கள் விடுதலை பெற்று அன்பும் சகோதரத்துவமும் சமத்துவமும் உடையவர்களாக மக்கள் வாழும் யுகமே கிருதயுகமாகும். இத்தகைய கிருதயுகத்தினைக் கேடின்றி நிலை நிறுத்தவே பாரதியார் வாழ்நாள் முழுவதும் விரதம் மேற்கொண்டாரேயொழியத் தான் மட்டும் சிவலோகத்தையோ வைகுண்டத்தையோ அடைந்து பேரின்பப் பெருவாழ்வு பெறுவதற்காகவல்ல. பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் இவ்வேளையிலாவது பாரதியாரது இலட்சியங்களைச் செயற்படுத்த முயல்வது இந்துக்கள் ஒவ்வொருவரதும் தலையாய கடமையாகும்.

நமது தேசத்தில் ஒருவன் நற்செய்கைகள் செய்து முன்நிற்பானேயானால் அவனைப் புண்படுத்தும் புலிகள் பல புறப்படுகின்றன.

— பாரதி

(பாரதிதரிசனம்; இரண்டாம் பாகம்; 1977, பக். 5)

⁂

## பிரார்த்தனை

எம் பெருமானே! உன்னிடம் எனது பிரார்த்தனை இதுவே.

1. என் இதயத்தின் வெறுமையை நீக்குவாயாக
2. என் இன்ப துன்பங்களை எளிதிற் தாங்கச் சக்தி அருள்வாயாக.
3. எனது அன்பு சேவையிலே கனியும்படி செய்யும் ஆற்றல் அருள்வாயாக,
4. தீனர்கள் என் தமரல்லர் என்று ஒருகாலமும் புறக்கணியா வண்ணமும், ஆணவமுள்ள வலிமையின் முன்னே தலை வணங்கிடா வண்ணமும் எனக்கு ஆற்றல் அருள்வாயாக.
5. நாள்தோறும் தோன்றும் சிறுமைகள் நீங்கி என் உள்ளம் உயர்வடைய வல்லமை அருள்வாயாக.
6. உன் திருவுள்ளக் குறிப்பறிந்து என் வலிமையை எல்லாம் உனக்கு நிவேதிக்க அருள்புரிவாயாக.

— இரவீந்திரநாததாகூர்

(கீதாஞ்சலியில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With The Best Compliments

of

# Jayanthy's

WHOLESALE & RETAIL DEALERS
IN TEXTILES

106, Colombo Street,

KANDY

DIAL: 2464

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்ஷிண கைலாசம்

## (பதின்மூன்றும் நூற்றுண்டு வரையான வரலாறு)

கலாநிதி சி. பத்மநாதன்

இலங்கையின் கிழக்குக் கரையிலே திரிகூடகிரி எனவும் கோணபர்வதம் எனவும் வழங்கும் குன்றிலே கோணேஸ்வரம் அமைந்திருந்தது. வானளாவிய கோபுரங்களும் மணிமண்டபங்களும் அமையப்பெற்ற திருக்கோணேஸ்வரம் அளவிலே, கலைவனப்பிலே, செல்வ வளத்திலே இலங்கையிலே ஈடிணையற்ற கோயிலாக விளங்கியது. ஈழத்து இந்துக் கோயில்களிலே தக்ஷிண கைலாசமாகிய திருக்கோணேஸ்வரத்தைப்பற்றிமட்டுமே ஒரு மரபு வழியான இலக்கியம் வளர்ச்சி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கோணேசர் கல்வெட்டு, தக்ஷிண கைலாச புராணம், திருக்கோணசல புராணம் முதலிய நூல்கள் திருக்கோணேஸ்வரத்தைப் பற்றிய புராணக்கதைகளையும் மரபுவழிக் கதைகளையும் வரலாற்றமிசங்களையும் தொகுத்துக் கூறுகின்றன. இவற்றுட் கோணேசர் கல்வெட்டு என்பதே மிக முக்கியமானதாகும். அதனைக் கவிராசர் என்ற புலவர் எழுதியுள்ளார். அவர் பதினைலாம் நூற்றுண்டிலே வாழ்ந்தார் எனச் சிலர் கருதுகின்றனர். அந்நூலின் அமைப்புக் காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்றது. அத்துடன் பிற்சேர்க்கைகளும் நூலுடன் பிற்காலத்திலே இணைத்துக்கொள்ளப்பட்டன. அதனுற் கோணேசர் கல்வெட்டு பத்தொன்பதாம் நூற்றுண்டுவரை உருவிலே சிறிது சிறிதாக மாற்றமும் வளர்ச்சியும் அடைந்து வந்தது. ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம் கோணேசர் கோயில் பற்றிய தலபுராணமாகும். புண்ணிய தலங்களுக்குப் பத்தர்கள் பெருமளவிலே யத்திரை போகின்ற வழக்கம் ஏற்பட்ட காலத்திலே தலச்சிறப்பினை உணர்த்துவதற்கெனவே தலபுராணங்கள் எழுதப்பட்டன, பன்னிரண்டாம் நூற்றுண்டிலேயே தலயாத்திரைகள் தமிழகத்து இந்துக்களின் சமயவாழ்க்கையிற் பிரதான அம்சமாகின. ஸ்ரீ தக்ஷிண கைலாச புராணம் பதினைலாம் நூற்றுண்டில் எழுதப்பெற்றிருத்தல் கூடும். பத்தொன்பதாம் நூற்றுண்டில் எழுதப்பட்ட திருகோணசல புராணம் அதனிலும் விரிவான முறையிலே எழுதப்பட்டது.

தக்ஷிண கைலாசம், மச்சகேஸ்வரம் என்பன கோணேஸ்வரத்தின் மறுபெயர்களாகும். அப்பெயர்களின் உற்பத்தியினை விளக்கும் வகையிலான புராணக்கதைகளுள்ளன. 'ஆதிசேடனும் வாயுபகவானும் தம்முள் மாறுபட்டு இகலிய நாளில், இருவரும் தத்தம் வலிமையைக் காட்ட முயன்று மகாமேருவின் கொடுமுடிகளை ஆதிசேடன் தன் பணமுடிகளால் மூடிக்கொள்ள, வாயுபகவான் தன்வலி மேம்பாடுற மேருவின் சிகரங்களில் மூன்றைப் பிடுங்கிக் கடலில் வீசிவிட, அவைகளில் ஒன்று இலங்கையில், வீழ்ந்து திருகோணமலையாக அமைந்தது' என்பது ஒரு புராணக்கதை. இமயத்திலுள்ள கைலாய மலையின் ஒரு கூறே கோணபர்வதம் என்ற நம்பிக்கையின் காரணமாக அது தக்ஷிண கைலாசம் என்ற பெயரைப் பெற்றது.

திருமால் மச்சாவதாரத்திலே தென் கயிலாயத்தை அடைந்து அங்கு மீன்வடிவிலிருந்து நீங்கித் தனது சுயரூபத்தில் மகேசுரனை வணங்கியதனுலே தக்ஷிண கைலாசமானது மச்சகேஸ்வரம் என்ற பெயரினையும் பெற்றது. அக்கதை தக்ஷிணகைலாச புராணத்திலே மேல்வருமாறு கூறப்பட்டுள்ளது.

'ஆய தென்கயிலாயத்தின் றென்புற மணுகி
மாய மச்சமா முடலையக் கடல்வழி வைத்துத்
தூய தன்னுருக்கொண்டரன் சந்நிதி துன்னிச்
சேய கங்கணம் முன்வைத்து வணங்கினன்
திருமால்.'

'மல்கு மச்சமாம் கேசவன் பெயரினை மலையும்
புல்கு மச்சகே சுரமெனத் திருப்பெயர் புகன்றுர்.'

கோணேஸ்வரம் என்பது தலத்தின் பெயர்களுட் பிரசித்தி பெற்றதாகும்; பழங் காலத்திலிருந்து இன்றுவரை நிலைபெற்று வருவதோடு அதுவே பொதுவழக்கிலுமுள்ள தலப்பெயராகும். கோணேஸ்வரம் என்ற கோயிற் பெயருக்கும் திருகோணமலை என்ற இடப்பெயருக்கும் இடையிலான தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஆராய்வதன் மூலம் திருகோணமலை பற்றிய சில வரலாற்றுச் செய்திகளை அறிந்து கொள்ளலாம், கோகர்ணம் என்பது திருகோணமலையின் புராதன பெயராகும். பிராகிருத மொழிவழக்கிலே கோகர்ணம் என்ற சொல் கோகண்ண என்ற உருவில் வரும். பாளிமொழி நூல்களிலே திருகோணமலை கோகண்ண என்றே குறிப்பிடப்பட்டுள்ளது, சிங்கள நூல்கள் சில திருகோணமலையினை கோணுகம எனக் குறிப்பிடுகின்றன. கோகண்ண என்பது மருவிக் கோண ஆகியதென்று சிந்திக்க இடமுண்டு. பதின்மூன்றும் நூற்றாண்டிலே எழுதப்பெற்ற சோடகங்கனுடைய சமஸ்கிருதமொழிக் கல்வெட்டிலே திருகோணமலை **கோகர்ண** என்றே குறிப்பிடப் பெற்றுள்ளது.

கோகர்ணம் என்ற பெயரைக் கொண்ட மூன்று தலங்கள் இந்தியாவிலிருந்தன. அவையனைத்தும் சைவசமய வரலாற்றிலே மிகப் பிரசித்திபெற்ற தலங்களாகும். கலிங்க தேசத்தில் மகேந்திர மலைத் தொடரிலே கோகர்ணம் என்ெருரு சிவஸ்தலமிருந்தது, அங்கு எழுந்தருளியிருந்த சிவனின் முகூர்த்தத்தைக் கோகர்ண சுவாமி என்று அழைத்தார்கள். கலிங்கத்திலாண்ட கீழ்த் திசைக் கங்கர்கள் கோகர்ணசுவாமியைத் தங் குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டார்கள். அவர்களுடைய சாசனங்களிலே அவர்களுக்கும் கோகர்ண சுவாமிக்கும் இடையிலான தொடர்பு சிறப்பித்துக் கூறப் பட்டுள்ளது,

நேபாள தேசத்திற் கிராதர் எனப்படுவோர் வாழுகின்ற பசுபதி என்ற பிரதேசத்திற் கோகர்ண என்னும் சிவஸ்தலம் ஒன்றுள்ளது. வங்காளத்துப் பாலவமிசத்தைச் சேர்ந்த தர்மபாலனுடைய படைகள் வட இந்தியாவிலே திக்குவிசயம் மேற்கொண்டபொழுது அவை கேதார(ம்), கோகர்ண(ம்) என்ற புண்ணிய தலங்களையுந் தரிசித்துச் சென்றதாகச் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. அக் கோகர்ண(ம்) நேபாளத்திலுள்ள தலம் என்று கருதப்படுகின்றது. கோகர்ணம் என்ற பெயரையுடைய இன்னுமொரு சிவஸ்தலம் இந்தியாவின் மேற்குக் கரையிலே துளுவ நாட்டிலே உள்ளது. அதனைப்பற்றி ஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளனர், அங்குள்ள சிவனின் பெயர் பஹாபலிநாதர்; அம்மையின் பெயர் கோகர்ண நாயகி.

இலங்கையின் கிழக்குக் கரையிலுள்ள கோகர்ணத்துச் சிவனைக் கோணைநாதக், கோணேஸ்வரர் (கோகர்ணேஸ்வரர்), கோகர்ண நாதர் எனப் பலவாறு குறிப்பிடுவது வழக்கம். இந்தியாவிலே கோகர்ண என்ற பெயரைக் கொண்ட மூன்று சிவஸ்தலங்கள் இருப்பினும் கலிங்கத்து மகேந்திர மலையிலுள்ள சிவனுரின் மூர்த்தமே கோகர்ண ஈஸ்வரர் என்ற பெயரைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது, திருகோணமலையிலும் மகேந்திரமலையிலும் வீற்றிருக்கும் சிவனின் தோற்றம் ஒரே பெயரினைக் கொண்டிருந்தமை தற்செயலாக ஏற்பட்டவொன்ருகாது. இரு தலங்களும் அமைந்துள்ள பகுதிகளுக்கிடையிலே நெருங்கிய வாணிப கலாச்சாரத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன வென்றும் அவற்றின் விளைவாக ஒரே பெயரைக் கொண்ட சிவபெருமானுடைய உருவத்தைக் கோயிலிலே தாபித்து வணங்கும் முறையினைச் சைவர்கள் ஏற்படுத்திஞர்கள் என்றும் சிந்திக்க வேண்டியுள்ளது.

இந்தியாவின் கிழக்குக் கரையிலுள்ள பகுதிகளோடு ஏற்பட்டிருந்த வாணிபத் தொடர்பின் காரணமாகத் திருகோணமலையில் இந்து சமுதாயமும் இந்துக் கோயில்களும் புராதன காலத்தில் வளர்ச்சி பெற்றன என்று கருதலாம். மகாசேனனுடைய ஆட்சியிலே ( -302) கோகர்ணத்திலும் கிழக்குக் கரையிலுள்ள வேறு சிலவிடங்களிலும் இந்துக் கோயில்கள் காணப்பட்டன. அவற்றையெல்லாம் அழித்துவிட்டு அவற்றினிடங்களிலே பௌத்த விகாரங்களை மகாசேனன் அமைப்பித்தான். 'தேவாலயங்களை அழித்துக் கோகர்ணம், ஏரகாவில், கலந்த என்ற பிராமணனுடைய கிராமம் ஆகியவற்றிலே மூன்று விகாரங்களை' அரசன் கட்டுவித்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது. மகாவம்சத்தின் உரை நூலான வம்சத்தப்பகாசினி கிழக்கிலுள்ள கடற்கரையிலே கோகண்ண காமத்திற்கு அணிமையிலே கோகண்ணவிகாரம் கட்டப்பட்டதென்றும் குறிப்பிடுகின்றது. மேலும், இம்மூன்றிடங்களிலும் தேவாலங்கள் அமைந்திருந்தனவென்றும் அவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த சாசனத்திற்குத் தடையாக விருந்தன என்றும் அந்நூல் குறிப்பிடுவதுடன் சிவலிங்கம் போன்ற வழிபாட்டுச் சின்னங்களை அழித்து மகாசேனன் இலங்கை யெங்கும் பௌத்தத்தினை நிலைபெறச் செய்தான் எனவும் கூறுகின்றது. மகாசேனனின் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் கிழக்குப் பகுதியிலே திருகோணமலையிலும் வேறிடங்களிலும் சைவாலயங்கள் நிலைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்க வொன்றாகும். கிழக்கிலங்கையில் அக்காலகட்டமளவில் வாழ்ந்த மக்களிடையே குறிப்பிடத்தக்களவு தொகையினர் சைவர்களாயிருந்திருப்பர். அநுராதபுர காலத்திற்குரிய தொல்பொருட் சின்னங்கள் இலங்கையின் வரட்சி வலயத்திற் சைவ வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியவர்கள் ஆங்காங்கு வாழ்ந்தமைக்குச் சான்றாகின்றன.

## வாயு புராணத்துக் கோகர்ணம்

இந்தியாவிலே குப்தராட்சிக் காலத்திலெழுந்த புராணங்களுள் ஒன்றாகிய வாயு புராணம் மலயதீவு என்ற நாட்டின் கிழக்குக் கரையிலுள்ள கோகர்ண என்ற சிவனுடைய பெயரைக்கொண்ட சிவாலயத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. வாயுபுராணத்திலே வர்ணிக்கப்பட்டுள்ள மலயதீவு பல வகையான மணிகளும் இரத்தினங்களும் பொன்னும் கடல்படு திரவியங்களும் கிடைக்கின்ற நாடு; அது மிலேச்சர், ராக்ஷஸர்கள் முதலியோரை மிகுதியாகக் கொண்டுள்ளது; அங்கே லங்காபுரி என்ற இராக்கதரின் நகருள்ளது. அங்கே அகஸ்திய பவனமும் திரிகூடநிலையமும் அமைந்திருக்கின்றன. இவ் விபரங்களெல்லாம் இலக்கியங்களிலுள்ள இலங்கையைப் பற்றிய மரபுவழியான வர்ணனைகளைப் பெரிதும் ஒத்துள்ளதால் வாயுபுராணத்திலே குறிப்பிடப்பட்டுள்ள 'பெருஞ் சிவாலயம்' இலங்கையிலுள்ள கோணேஸ்வரம் என்று கொள்வது எவ்வகையிலும் பொருந்தும். வாயுபுராணம் எழுதப்பட்ட காலத்தில் வடஇந்தியச் சைவர்களினாலே பராட்டுதற்குரிய முறையிலே கோணேஸ்வரத்தின் புகழ் பரந்திருந்ததென்று கருதவேண்டியுள்ளது. வாயுபுராணக் குறிப்பானது திருகோணமலையின் பழைய பெயரான கோகண்ண என்பதை விளங்கிக் கொள்வதற்குத் துணைபுரிகின்றது. கோகர்ண சுவாமியின் திருத்தலம் அங்கு அமைந்திருந்தமையினாலே கோகர்ணம் என்ற தலப்பெயர் உற்பத்தியாகியது என்று கருதலாம். கோகர்ணம் என்பது பாளிமொழியிலுள்ள நூல்களிலே கோகண்ண எனக் குறிப்பிடப் பெற்றது.

## தேவாரத்திற் கோணேஸ்வரம்

வாயுபுராணத்திற் குறிப்பிடப்படுமளவிற்குப் புகழ்பெற்றிருந்த கோணேஸ்வரத்தின் மீது ஏழாம் நூற்றாண்டிலே ஞானசம்பந்தர் பதிகம் பாடியுள்ளமை வியப்பிற்குரியதன்று. ஞானசம்பந்தரின் காலத்திற் கோணேஸ்வரம் கடலோரமாகவுள்ள கோணவரைதனிலே அமைந்திருந்தது. 'கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை யமர்ந்தாரே' என்ற தேவார வாக்கியத்தினாலே இது உறுதியாகின்றது. ஞானசம்பந்தர் கோணேஸ்வரத்தைப் பற்றிய பாடல்களிலே அக்கோயிலின் பெயரைக் குறிப்பிடாது அது அமைந்திருந்த தலத்தினையே ஒவ்வொரு பாடலிலும் சிறப்பித்துக் கூறுகிறார். திருகோணமலை 'குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்' பதியெனத் தேவாரத்திலே வர்ணிக்கப்பட்டுள்ளது. அருகிலே அமைந்த கடலுஞ் சுற்றாடல்களிலே காணப்பட்ட பொழில்களும் தலத்திற்குச் சிறப்பைக் கொடுத்தன. சந்தனமும் அகிலும் மணியும் முத்தும் அங்கு காணப்பட்டதாக ஞானசம்பந்தர் பாடியுள்ளார். வாணிபத்தின் பொருட்டு இப்பொருள்கள் அங்கு கொண்டுவரப்பட்டமையினை அடிப்படையாகக் கொண்டும் அவர் இவ்விதமாகப் பாடியிருத்தலுங் கூடும். தேவார காலத்துத் திருக்கோணேஸ்வரம் காவும் பொழிலும் சூழப்பெற்றிருந்தது. அங்கு கனிமரச்சோலைகளன்றி நிழல்தரு மரச்சோலைகளும் பூம் பொழில்களுமே காணப்பட்டன. மௌவல், மாதவி, புன்னை, வேங்கை, வண்செருந்தி, செண்பகம், குருந்து, முல்லை முதலியன வளர்த்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. சம்பந்தரின் காலத்திற்குப் பின்பு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் கழிந்த பின்னரே இலக்கிய வழக்கிலும் சாதன வழக்கிலும் கோணேஸ்வரத்தைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோழராட்சியிற் கோணேஸ்வரம்

இலங்கையிலே சோழராட்சி ஏற்பட்டிருந்த காலத்திலே திருக்கேதீஸ்வரம் சோழர்களின் ஆதரவைப் பெற்றிருந்தமைக்குச் சில சான்றுகளுள்ளன. கோணேசர் கோயிலின் சுற்றுப்புறத்திலே முதலாம் இராசராசனுடைய மெய்க்கீர்த்தியின் வாசகத்தைக் கொண்ட சாசனத்தின் உடைந்த பகுதியொன்று இப்போ காணப்படுகின்றது. சோழவதிகாரிகள் கோயிலுக்குக் கொடுத்த தானமொன்றினைப் பதிவுசெய்தற் பொருட்டு இச்சாதனம் எழுதப்பட்டதென்று கருதலாம். மாளுக்கேணியிலே சிதைந்த நிலையிலுள்ள சோழ — இலங்கேஸ்வரதேவனின் கல்வெட்டில் மச்சகேஸ்வரம் பற்றிய குறிப்புள்ளது. அதன் பெரும்பகுதி கிடைக்காதமையினுலே சாசனம் எந்நோக்கத்திற்காக எழுதப்பட்டதென்பதை நன்குணரமுடியவில்லை ஆயினும் அது மச்சகேஸ்வரம் பற்றிக் குறிப்பிடுவதாற் சோழ — இலங்கேஸ்வரனே அவனுடைய அதிகாரிகளோ கோணேசர் கோயிலை முன்னிட்டு மேற்கொண்டவோர் ஏற்பாட்டைக் குறிப்பிடுவதற்கே அது எழுதப்பட்டதெனச் சிந்திக்கலாம்.

சோழர் காலத்திற்குரியதான நிலாவெளிக் கல்வெட்டிற் கோணேஸ்வரம் பற்றிய சில வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த குறிப்புக்கள் வருகின்றன, அக்கல்வெட்டின் வாசகம் மேல்வருமாறு அமைந்துள்ளது,

ஸ்ரீ கோணபர்வதம் திருக்கோணமலை ம(த்)ஸ்ய கேஸ்வரமுடைய மஹாதேவர்க்கு நிச்சலழி(வு)க்கு நிவந்தமாக சந்திராதித்தவற் செய்த உராகிரிகாம கிரிகண்ட கிரிகாம(த்து) நீர்நிலமும் புன்செய்யும்(இடங்களும்)...தேவாலயமும் மேனேக்கின மரமும் கீழ் நோக்கின கிணறும் உட்பட இன்னிலத்துக் கெல்லை கிழக்குக் கழி எல்லை தெற்கெல்லை கல்லு குடக்கு எத்தகம்பெ எல்லை வடக்கெல்லை சூலக்கல்லாகும். சுடர்கோணமாமலை த(னி)ல் நீலகண்டற்கு நிலம் இவ்விசைந்த பெருநான் கெல்லையிலகப்பட்ட நிலம் இரு நூற்று ஐம்பத்தாறு வேலி. இது பன்மயேசுர ரக்ஷ.

இக்கல்வெட்டு மச்சகேஸ்வரம் என்னுங் கோயிலுக்கு நித்திய செலவிற்கென 250 வேலிநிலம் கொடுக்கப்பட்டமையினைக் குறிப்பிடுகின்றது. மச்சகேஸ்வரம் என்பது கோணேஸ்வரத்தின் மறுபெயராகும். பரந்த அளவிலான நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளமையால் அரசனொருவனே அல்லது உயர்தரத்திலுள்ள அரசியதிகாரியொருவனே இத்தேவதானத்தைக் கோயிலுக்குக் கொடுத்திருந்தான் என்று கொள்ள வேண்டியுள்ளது. இத்தானம் கோயிலுக்கு வழங்கப்பட்ட காலப்பகுதியிலே பெருமளவிலான சொத்துடைமைகளைப் பரிபாலிக்கத்தக்க முறையிலே கோணேசர் கோயில் நிர்வாக அமைப்புக்களைக் கொண்டிருந்தது என ஊகிக்கலாம். கோணேசர் கோயில் ஆலயவேற்பாடுகளையும் சொத்துடைமைகளையும் கவனிப்பதற்கெனப் பல நிறைவேற்றுக் குழுக்களைக் கொண்டிருந்தமை பற்றிக் கோணேசர் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றமை இங்கு கவனிக்கத்தக்கது

## கஜபாகு மகாராசனுடைய திருப்பணிகள்

கஜபாகு என்ற அரசனொருவன் திருக்கோணேஸ்வரத்துடன் கொண்டிருந்த தொடர்பினைப் பற்றிக் கோணேசர் கல்வெட்டு மேல்வருமாறு எடுத்துரைக்கின்றது.

### குடிமை வரவு

'இரவிகுல மதனில் வரு கயவாகு மகாராசன் சோழவள நாட்டா லழைபித்தது கொல்லன், குயவன், நாவிதன், ஏகாலி, வள்ளுவன் இவர்களிலைந்து குடி. இவர்களுக்குக் குடிநிலம், விளைபுலம் முதலான சர்வ காரியங்களுங் கொடுத்துக் குடிமையென்று திட்டம் பண்ணி அவர்க்கடுத்த வஸ்திர பூஷணங்களுங் கொடுத்து அரசனுரைத்த கட்டளை: வன்னிபம், இருபாகை முதன்மை, தானம், வரிப்பத்து, இவர்கள் இவர்கள் சொன்ன கட்டளைப்படி நீங்கள் நடக்கவேண்டியது, இந்தக் குடிமைகள் இது கனகசுந்தரப் பெருமாள் பத்ததியிற் பதிப்பித்த முறைமையாக நடக்கவேண்டியது.'

### கயவாகுராசனுபயம்

திருமருவு கயவாகு மகாராசனும், தனது படை மனுஷரும், மாவலிகங்கையருகாக வெகுவிசாலமான வெளியந்திருத்தி, அதற்கடுத்த அணைகளுங் கட்டுவித்து 1650 அவண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்விதைப்புத் தறையும் திட்டம்பண்ணிப் பத்துக்கொன்று அடையுமிடுப்பித்து, அதற் கருகாக தென்னை 1200, புன்னை 1200, பசு வினம் 1200, மேதியினம் 1200 ம் பலவித மான புஷ்பஞ் சோலைகளுஞ் செய்வித்து, ஆதியாகிய கோணநாயகரே! இகபரமிரண்டு மறியாமல் நரசென்மமாகப் பிறந்த அடியேன் எனது சிற்றறிவினால் தேவரீருடைய தபனிய வாலயத்தை அழித்து வேரங்கட்டுவேனென்று சொன்ன பிழையைப் பொறுத்துக்கொள்ள வேணுமென்று விழுந்து நமஸ்காரம் பண்ணி இதுவெல்லாங் கோணேசருக்கென்று தாரைவார்த்துக் கொடுத்துக் குளக்கோட்டு மகாராசா இருநாளைக்கு இரண்டவண அரிசி திட்டம் பண்ணினது. இப்போ அதிகமாக நாளொன்றுக்கு ஓரவண அரிசியும் அதற் கடுத்த செலவு கட்டளை பண்ணி, நாளொன் றுக்கு மூன்றவண அரிசி நைவேத்தியம் வைத்துப் பூசை நடக்கும்படி திட்டம் பண்ணி கனகசுந்தரப் பெருமாள் கணக்கி லும் பதிப்பித்துச் செப்பேடு வரைந்து கொடுத்து, வன்னிபம், இருபாகை முதன்மை முதலாகச் சகலரையும் அழைப்பித்து...... ...... எங்கள் குலத்துக் கயவாகு மகாராசாவென் பவர் முனீச்சுரப் பகுதியில் ஆலயமுந் திட்டம் பண்ணி, திருக்காளேசர் சிவாலயமுமுண்டு பண்ணித், அநவரதகாலமும் பூசை நடப் பித்து வருகிற நாளையில், திரிகைலாய நாதர் பெருமைகேட்டுவந்து, பாவநாசச்சுனையிற் றீர்த்தமும் படிந்து சிவாலயத்தைப் பிர தக்ஷிணம் பண்ணிக் கோணநாயகர் திருப்பாத தரிசனமுங் கண்டு தங்கக்கட்டியாற் றுலா வாரமுமேற்றி மாணிக்கம் பதித்த பூரண சந்திரப் பதக்கமுஞ் சாத்துவித்து 1800 பொன் கொடுத்து அபிஷகமும் பண்ணுவித் துச் சிறிது திரவியமும் அறைமுதலிருப்பாக வைத்து இருபாகை முதன்மைக்கும் கோயிற் றெழும்புசெய்பவர்களுக்கும் மனப்பூர்வமாக வெகு நகைகளுங் கொடுத்துக் குருகுலக் கணக்கிலும் பதிப்பித்து, தென்னை, புன்னை, மா, இருப்பை, பூகம் ஆயிரமாயிரம் நிரைத்த பூங்காவனங்களு முண்டு பண்ணிக் கொடுத் துப்போட்டுத் தன் நகருக்குப்போய் நெடு நாளிராச்சியம் பண்ணியிருக்கிற நாளையில் ஆதியாகிய கோணநாயகரருளினால் மனுநேய கஜவாகென்றொரு புத்திரன் பிறப்பான்.'

வசனரூபமாகவுள்ள இக்கதையிலே (1) கஜபாகு மகாராசன் கோணேசர் கோயிலைத் தரிசித்து வழிபட்டமை, (2) அங்கு துலாபாரஞ்செய்து பொன்னும் ஆபரணங் களுங் கோயிலுக்குக் கொடுத்தமை, (3) குடி களை வரவழைத்துக் கோயிற் சேவைகளைத் திட்டம் பண்ணியமை, (4) நிலங்களைத் திருத்தி அவற்றைத் தானம் பண்ணியமை ஆகிய நான்கு விடயங்களும் எதுவித கால வரையறையின்றியும் விரித்துரைக்கப்பட்டுள் ளன. கஜபாகுவின் திருப்பணிபற்றிய வர லாற்றுச் செய்திகள் இக்கதையிலே ஒழுங் கற்றவகையிலும் சில திரிபுகளோடும் ஜனரஞ் சகமான முறையிலே கூறப்பட்டுள்ளன.

சிங்கள வரலாற்று மரபுகளிலுஞ் சாசனங் களிலுங் காணப்படும் குறிப்புக்கள் பொல நறுவையிலே பன்னிரண்டாம் நூற்றாண் டிலே (1132 – 1153) ஆட்சி செலுத்திய கஜ பாகு இந்துமத நிறுவனங்களுக்குப் பெரிதும் ஆதரவளித்தான் என்பதற்கு ஆதாரமாயுள் ளன. அவனைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'பொய்ச் சமயவாதிப் பிரபுக்களை அந்நிய நாட்டால் வரவழைத்து இராச்சியத்தை நிரப் பினான்' எனச் சூளவம்சம் கூறுகின்றது. எனவே பௌத்த சங்கத்தவர்களின் அபிமா னத்திற்கும் நலனுக்கும் ஒவ்வாத சமயக் கொள்கைகளை கஜவாகு கடைப்பிடித்தான் என்பது தெளிவாகின்றது. அரசன் லக்ஷபூசை செய்வதற்குக் கந்தக் கடவுளின் படிமமொன் றை அமைத்துக் கொடுத்தமைக்காக ஹினபி என்ற சிற்பாசாரியனுக்கு நிலம் தானமாகக் கிடைத்தமை பற்றி கஜபாகுவின் கபுறவது ஓயாக் கல்வெட்டுக் குறிப்பிடுகின்றது. மேலும் கந்தளாயிலுள்ள பிரதேயம் ஒன்ற னுக்கு கஜவாகு ஆதரவளித்தமைக்கு இரு கல்வெட்டுக்கள் சான்றளிக்கின்றன. கஜபாகு மன்னன் தனது ஆட்சிக் காலத்தின் முடி விலே கந்தளாயில் ஒரு அரண்மனை அமைத்து அங்கு தங்கியிருந்தான். அவன் இந்து நிறுவனங்களுக்கு ஆதரவளித்திருந்த மையாலும் வடகிழக்குப் பகுதிகளிலே நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையா லும் கோணேசர் கல்வெட்டிலே அவனுடைய திருப்பணிகளைப் பற்றியுள்ள கதைகள் வர லாற்றமிசங்கள் பொருந்தியன என்று கொள்ள வேண்டும். அரசன் கோணேஸ் வரத்திற்குச் சென்று வழிபட்டமை, அங்கு துலாபாரஞ் செய்தமை, பொன்னும், பொரு ளும், நிலமுங் கோயிலுக்குத் தானங் கொடுத் தமை, கோயிற் றெழும்புகளை மீண்டும் ஒழுங்கு படுத்தியமை ஆகிய விடயங்கள் ஆதாரபூர்வமானவை எனக் கொள்ளத்தக் கவை. ஆயினும், இவற்றைப் பற்றிய விபரங் கள் சில மாறுபாடுகளுடன் மிகைப்படுத்தப் பட்டு விபரிக்கப்பட்டுள்ளன எனக் கருத வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பளிப்பு

# CHANDRA STORES

41, Bazzar Street,

Kurunegala.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாடு

## பாரதி, கவிமணி, பாரதிதாசன்

சி. தில்லைநாதன்

முருக வழிபாடு திராவிட மக்கள் மத்தியில் நீண்ட காலமாக நிலவிவருகிறது. சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாகரிகம் தழைத்த சிந்துவெளியில் முருகவணக்கம் பரவியிருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் முருக வழிபாடுபற்றிய குறிப்புக்கள் நிறைய உள்ளன. கூட்டு வாழ்வு தொடங்கிய பிரதேசமென்று கருதப்படுவதும் இயற்கை அழகு மிளிர்வதுமான குறிஞ்சி நிலத்தின் தெய்வமாகத் தமிழ் மக்கள் முருகனைக் கொண்டனர்,

"சேயோன் மேய மைவரை உலகமும்"

என்று தொல்காப்பியமும்,

'விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிளவ"

என்று திருமுருகாற்றுப் படையும் கூறுகின்றன. முருகனையும் அவனை வழிபடு முறைகளையும் பற்றித் திருமுருகாற்றுப்படையும் பரிபாடலும் மிகவும் விரிவாகக் கூறுகின்றன. புறநானூறு, அகநானூறு, மதுரைக்காஞ்சி, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை முதலான நூல்களிலும் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன.

ஆறுமுகன், ஆலமர் செல்வன், அணிசால் மகன், இறைவன், ஏழுலகுமாளி, கடப்பந்தாரோன், கடம்பமர் செல்வன், கடம்பன், கதிர்வேலோன், குமரவேள், குமரன், செய்யோன், செவ்வேலோன், செவ்வேள், சேய், சேயோன், சேவலங்கொடியோன், நெடியோன். நெடுவேள், பெருவிறல், மலைமகள்மகன், மால் மருகன், முருகவேள், முருகன், வேல்வலான், வேலன், வேலாற்று மொய்ம்பன், வேலோன், வேள் முதலான பெயர்கள் பதினெண்மேற்கணக்கு நூல்களிற் பயின்று வருகின்றன.

முருகனுக்குரிய மிகப்பழமையான, திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலை ஆகியவற்றை நக்கீரர் திருமுருகாற்றுப்படையிற் பாடியுள்ளார்.

"ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமல ரேத்திப் பெரிதுவந்து
ஏரகத் துறைதலு முரியன்"

எனத் திருவேரகத்தில் உறையும் முருகனை அவர் பாடினர். அவ்வடிகளில், ஒன்பது புரிகளையுடைய மூன்றாகிய பூணூலை அணிந்த அந்தணர் அதிகாலையில் நீராடி ஈர உடையினை அரையில் அணிந்தவாறு உச்சிமேற் கரங்குவித்தும், ஆறெழுத்து மந்திரத்தை நாப்பிறழும்வரை ஓதியும், நறுமணமலர்களைத் தூவியும் முருகனை வழிபட்ட காட்சி தத்ரூபமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை கூறியவற்றைக் கொண்டு சங்ககாலத்திலும் அதற்குமுன்பும் முருக வணக்கம் ஆழ அகலப் பரவியிருந்தமை போதரும். அதன்பின் சமண, பௌத்த மதங்கள் பரவிய காலத்திலும், பெருங் கோயில்கள் நிர்மாணிக்கப்பட்ட சோழப்பேரரசர் காலத்திலும், முருகவழிபாடுபற்றிய செய்திகள் அருகியே காணப்படுகின்றன. ஆயினும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சைவத்திருமுறைகள் முதலானவற்றிலுள்ள செய்திகள் அவ்வழிபாடு மக்கள் மத்தியிற் குன்றிப் போய்விடவில்லை என்பதனை உறுதிப் படுத்தும்.

சோழப் பெருமன்னர் காலத்தெழுந்த தெனக் கொள்ளப்படும் கந்தபுராணம் முருகனது வெற்றிவரலாற்றைக் கூறுவதாகும். சிவனது மைந்தனாக முருகன் கூறப்படினும் சிவனே முருகனது வடிவினைத் தாங்கினன் என்றும் கூறுப்படுகிறது.

"ஆதலின் நமதுசக்தி
அறுமுகனும் யாமும்
பேதகமன் றனம்போற்
பிரிவிலன் யாண்டுநின்றான்"

''அந்திக்கு நிகர்மெய் அண்ணல்
அருள் புரிந்து அறிஞ ராயோர்
சிந்திக்கும் தனது தொல்லேத்
திருமுகம் ஆறும் கொண்டார்''

என்ற அடிகள் அதனை உறுதிப்படுத்தும்.

'அருவமும் உருவும் ஆகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்ருய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே'
(கந்தபுராணம்)

உலகம் உய்யும்பொருட்டு வந்துதித்த முருகன் சைவத்தையும் தமிழையும் அந்நியப் படையெடுப்புகளிலிருந்து காப்பாற்ற வேண்டிய அவசியமேற்பட்ட நாயக்ககாலப் புலவர்களுக்கு நம்பிக்கை அளிப்பவனுனன். அருணகிரிநாதர், குமரகுருபரர் முதலான புலவர்கள் சைவத்தினதும் தமிழினதும் காவலனுகவும் கதியாகவும் முருகனைப் போற்றினர்.

அன்பர்களுக்கு எளியனுகவும் அழகு, காதல், இளமை, வெற்றி ஆகியவற்றின் உறைவிடமாகவும் முருகன் போற்றப்பட்டான். வெற்றியும் அழகும் தருபவனுக வழிபடப் பட்டான்.

''யாம் இரப்பவை பொருளும்
பொன்னும் போகமுமல்ல நின்பால்
அருளு மன்பும் அறனும் மூன்றும்''

என்று பழைய பரிபாடல் கூறினுலும், காதலனைக் கரம்பிடிக்கவும் சுற்றம் சிறக்கவும் பாதுகாப்புக் கிடைக்கவும் முருகன் பரவப் பட்டதை அந்நூல் காட்டும். உலகியல் அகவாழ்விலும் புறவாழ்விலும் இன்பம் வேண்டியும் வெற்றி வேண்டியும் சங்ககாலத் தமிழ் மக்கள் முருகனை வழிபட்டனர். உணவு, உடை, உறைவிடம், தொழில், அறிவு, அழகு, உண்மை ஆகியவை மனிதவாழ்வில் வேண்டப்படுபவை. அவற்றை வழங்குமாறு அன்று முதல் இன்றுவரை மனிதர் இறைவனை வேண்டுவது கண்கூடு. உலகியல் விடுதலையும் முன்னேற்றமும் வேண்டும் குரல் மேலோங்கிய இருபதாம் நூற்ருண்டுத் தமிழ்க் கவிஞர் மூவர் முருகனை எவ்வாறு நோக்கினர் என்பதை இங்கு கவனித்தல் சுவையுடைத்தாகும்.

இந்நூற்றுண்டின் தமிழ் மக்களது இதயத் துடிப்பினை உணர்த்துபவை மகாகவி சுப்பிரமணிய பாரதியின் பாடல்கள். தெய்வத்தை அவன் வழிபடும் நோக்கத்தைத் தெளிவாக உணர்த்துபவையாக விநாயகர் நான்மணி மாலைப் பாடல்களைக் கொள்வது சாலும். பல்வேறு பெயர்களால் வழங்கப்படும் 'உலகெலாங் காக்கும் ஒருவனுக' விநாயகனைக் கண்ட பாரதி நாட்டினைத் துயரின்றி நன்கமைத்திடவும், உள்ளத்தைப் பிழையின்றி ஆளவும், மதியொடு துயரின்றி வாழவும், கலியைக் கொன்று கிருத யுகத்தினைக் கேடின்றி நிறுத்தவும், செல்வமும் நீண்ட ஆயுளும் பெறவும் வேண்டினுன்.

''கடமை யாவன, தன்னைக் கட்டுதல்
பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்''

என்று பிரகடனஞ் செய்தான்.

எண்ணிய முடிதல் வேண்டும் என்று ஏங்கிய பாரதிமுன் அவற்றை முடிக்கவல்லவனுக முருகன் தோன்றினுன். அத்தகையவனுகவே சங்ககாலத்திலும் முருகன் கருதப் பட்டான். பாண்டியன் இலவந்திகைப்பள்ளித் துஞ்சிய நன்மாறன் புகழினைப் பாடப் புகுந்த புறநானூற்றுப் புலவரான மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுரும்,

''முருகொத் தீயே முன்னியது முடித்தலின்'' என்ருர். நினைத்ததை முடிக்கும் வல்லமையால் முருகனை நிகர்த்தனன் என அரசனுருவன் அங்கு விதக்கப்பட்டான்.

முருகனைத் துதிக்கும் பாடல்களில் பாரதியும்,

''சுற்றி நில்லாதே போ! — பகையே!
துள்ளி வருகுது வேல்''

''வெற்றி வாகையே சுமக்கும் வேல்''

''........................................ —தமிழ்ப்
பாவலர்க் கின்னருள் செய்குவான், — இந்தப்
பாரில் அறமழை பெய்குவான், —நெஞ்சின்
ஆவ லறிந்தருள் கூட்டுவான், —நித்தம்
ஆண்மையும் வீரமும் ஊட்டுவான்''

என்றெலாம் பாடுகின்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முருகா! முருகா?' என்ற தலைப்பில் அவன் யாத்த கவிதை உணர்ச்சியும் ஓசை நயமும் சிறந்தது. அந்தக் கவிதையைப் பற்றி வெ. சாமிநாத சர்மா தமது 'நான் கண்ட நால்வர்' என்ற நூலிற் பின்வருமாறு கூறுவர்:

"பாரதியார் ஒரு சமயம் சென்னை ராயப்பேட்டை மோபரீஸ் ரோடிலுள்ள குகானந்த நிலையத்திற்கு வந்திருந்தார். அப்பொழுது கலியாணசுந்தர முதலியாரும் நானும் வேறுசில நண்பர்களும் அங்கிருந்தோம். மாலை நேரம். நிலையத்து மண்டபத்தில் குமரக் கடவுளின் திருவுருவப்படம் வைக்கப்பட்டிருந்தது. "முருகா, முருகா, முருகா" என்று தொடங்கும் பாடலை உணர்ச்சி ததும்பப் பாடினார். மாலை நேரத்து மஞ்சள் வெயில் அந்தப் படத்தின்மீது லேசாகப் படிந்து முருகனுடைய திருவுருவத்திற்குத் தனிச் சோபை கொடுத்தது. "வருவாய் மயில் மீதினிலே வடிவேலுடனே வருவாய்" என்ற சரணத்தை அவர் பாடி அதையே திரும்பத் திரும்பச் சொன்னபோது, அந்தக் குமரவடிவம் அவரை நோக்கி மெதுவாக வருவது போலவே இருந்தது. நாங்கள் அனைவரும் பரவசர்களானோம். அந்தக் காட்சி என் நெஞ்சத்தை விட்டு அகலவே அகலாது. முதலியார் இந்த நிகழ்ச்சியைப் பற்றி அடிக்கடி கூறி ஆனந்தப்பட்டிருக்கிறார்." அந்தக் கவிதையில்,

"தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும்"

'சுருதிப் பொருளே வருக!
துணிவே கனலே வருக!
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல்"

"தருவாய் தொழிலும் பயனும்"

என்றெலாம் பாரதி முருகனை வேண்டினான். முருகனைப் பாடும் பாரதி பாடல்களை மேலோட்டமாக நோக்கும்போது அவற்றில் உலகியற் கவலைகளையெல்லாம் போக்க வல்லதொரு நம்பிக்கையுறுதி கம்பீரமாகத் தொனிப்பதை அவதானிக்கவியலும். பாரதியைச் சூழ்ந்திருந்த சஞ்சலங்களையும் துன்பங்களையும் மறக்க உதவுபவையாக அப்பாடல்கள் அமைந்திருக்கலாம். இக உலக வாழ்வில் நலமும் புகழும் தொழிலும் தனமும் அறமும் துணிவும் பாரதி கேட்டுநின்றமையும் உற்று நோக்கப்படவேண்டியதாகும்.

பாரதி காலத்திலும் அவனுக்குப் பின்னரும் வாழ்ந்தவரான கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை திருச்செந்தூர் முருகனிடத்துப் பக்தி மிக்கவர்.

"உன்னிடத்தி லன்றி, உலகில் எவரிடம் போய்"
என்னுடைய சங்கடத்தை யானுரைப்பேன்? "

" ஏழை எளியேன் எதற்காவேன் "

" வீடும் கனமும் விளைநிலமும் தோப்புகளும்
மாடும் சதமாகுமா ? "

" உன்றன் அடியினை யன்றிவே றொருதுணை
அறியேன்"

" உன்னடி நிழலிலே ஒதுங்கிடச் சிறிதிடம்
என்னுயிருக் குதவ ......... சித்தம் இரங்கி
அருளையா ! "

என்றெல்லாம் கவிமணி முருகனை நோக்கிப் பாடுகின்றார். நாயக்கர் காலப் பாணியிலான ஒரு நிந்தாஸ்துதியும் அவர் முருகன் மீது புனைந்துள்ளார். சிரங்கு நோயிற் சிரமப்பட்ட போது, "சிரங்கு மறைந்திடத் தா நீவரம்" என்று முருகனை வேண்டினார். கவிமணியின் பாடல்களைப் பொதுவாக நோக்குமிடத்து, ஆற்றாமையும் இயலாமையும் கழிவிரக்கமும் அவற்றிலே தொனிப்பதையும், கையறுநிலையில் அவர் ஈடேற்றம் வேண்டி நின்றமையினையும் அவதானிக்காமலிருக்க இயலாது.

"எங்கெங்கு காணினும் சக்தியடா தம்பி ஏழுகடல் அவள் வண்ணமடா" என்ற பாடலின் மூலம் பாரதியின் கவனத்தைக் கவர்ந்து அவனாலே தமிழ்க்கவிதையுலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பாரதிதாசன் முதன் முதல் வெளியிட்ட நூல் ஸ்ரீ சுப்பிரமணியர் துதியமுது ஆகும். பாரதிதாசன் ஆரம்ப காலத்திற் கொண்டிருந்த தீவிர தெய்வ பக்திக்குச் சான்றான அந்நூல் மயிலம் சுப்பிரமணியர்மீது பாடப்பட்டு 1926இல் வெளியிடப்பட்டதாகும். அதனைப் பாரதிதாசன் மீள வெளியிடா தொழிந்தனராயினும், 1967 நவம்பர், டிசம்பர் மாதங்களில் வெளியான 'குயில்' தொகுதிகளின் வாயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாக அதனைப் பற்றி ஓரளவு அறிந்து கொள்ளவியன்றது.

விநாயகர் காப்பு, விநாயகர் துதி, சிவ பெருமான் துதி, உமைதுதி, திருமால் துதி, சரஸ்வதி துதி, அவையடக்கம் ஆகியவற்றோடு நாட்டுச்சிறப்பு, மயிலமலைச் சிறப்பு ஆகிய அங்கங்கள் பொருந்த தலைவி தூது போதல், மனதுக்கினிய துரைத்தல், தலைவி பாங்கியிடம் கூறல், பாரத நாட்டின் விடுதலை வேண்டல், நெஞ்சுக் குறுதி கூறல், நெஞ்சுக்கு நீதி கூறல், தலைவி வண்டினைத் தூதுபோக்கல், நெஞ்சுக்குத் தெளிவு கூறல் ஆகிய பகுதிகளாக அந்நூல் அமைந்திருந்தது. இவ்வமைப்பு முறையினைக் கொண்டு பழைய மரபுகளுக்கிணங்க இயற்றப்பட்ட இந்நூல் முருகன் புகழை எவ்வாறு அமைத்திருக்குமென்பதனை ஊகித்துக் கொள்ள வியலும்.

''வாழ்க குகன்பாத மலர்வேல் மயில்சேவல்
ழ்க தனியின்பம் தொல்புவிவான்–விழ்கபுனல்
மல்க வளம்செந்நெல் வளர்கஅறம் வேள்வி
வெல்கஇனி மைத்தமிழின் விறு.''

என்ற செய்யுளுடன் நூல் முடிந்தது. இச் செய்யுள் ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்'' என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தை நினைவுபடுத்தினுலும், தமிழ் வீறு பாரதிதாசனுக்குச் சிறப்பாய் உரியதாகும்.

பாரத நாட்டின் விடுதலை வேண்டல், நெஞ்சுக்குறுதி கூறல், நெஞ்சுக்கு நீதி கூறல் ஆகிய பகுதிகள் அக்காலத்திற் பாரதிதாசன் விடுதலை இயக்கத்திற் கொண்டிருந்த ஈடுபாட்டினைக் காட்டுவனவாகும். பாரதத்தின் விடுதலைக்காகப் பாரதி பராசக்தியையும் சர்வேசனையும் வேண்டியது போலவே பாரதிதாசன் முருகனை வேண்டினுர்.

''விழ்தலும் யாம் வாழ்தலுமே
வேலவா உன்கையிலுண்டு'' என்றும்,

''ஆழ்கடல் புவிமேல் எமக்கினிதான
பாரத பூமியைநீ
அட்டதிக்கும் போற்றிடும் வண்ணம்
ஆக்கு வாய்'' என்றும்,

'திரிபுரம் எரித்தவன் மகனைப் பணிந்தால்'
விடுதலைகிட்டும் என்றும்

அதர்மம் தலையெடாது என்றும் பாடியுள்ளார் பாரதிதாசன். முருகனைத் துதித்துப் பாரதிதாசன் பாடியுள்ளவற்றை அவ்வகையிலமைந்த கவிமணியின் பாடல்களோடு ஒப்பிடுமிடத்து உணர்ச்சியனுபவச் சிறப்பும் கவியாற்றலும் சமகால உணர்வும் பாரதிதாசனிடத்து உயர்ந்து விளங்குவது புலனுகும்.

1930ஆம் ஆண்டுக்குப் பின் சுயமரியாதை, பகுத்தறிவு, தனித்தமிழ், திராவிடக் கழக, திராவிட முன்னேற்றக்கழக இயக்கங்களில் இரண்டறக்கலந்த பாரதிதாசன் தெய்வநம்பிக்கையையும் வழிபாட்டையும் கண்டித்தும், கிண்டல் செய்தும் பல பாடல்களை இயற்றியுள்ளார். குன்றின்மீது நின்று கண்ட இயற்கை அழகு மிளிரும் காட்சியைப் பாடியவிடத்து,

''முன்பு கண்ட காட்சி தன்னை
முருகன் என்றும் வேலன் என்றும்
கொன் பயின்றுர் சொல்வர், அஃது
குறுகும் கொள்கை அன்றே தோழி!''

என்றதன்மூலம், குறிஞ்சிநில இயற்கை அழகினை முருகனுய் உருவகித்தல் அஞ்சியவர்களின் குறுகிய செயல் என்றுர். பின்னர் ''ஒரு கடவுள் உண்டென்போம் உருவணக்கம் ஒப்போம்'' என்றும், ''அறிவொன்றே தெய்வம்'' என்றும், ஊர் பேர் பெண்டு இல்லாத ஒரு கடவுளே அனைத்துக்கும் வித்து, அதுவே தமிழர் கடவுள் என்றும் கூறினுர். பல தெய்வ வணக்கங்களைக் கொண்டிருந்த தமிழ் மக்களுடைய வரலாற்றைப் பாரதிதாசன் முறையாகப் புரிந்து கொண்டாரா என்ற கடாவினை விடுத்து அவர் கடவுட் கருத்தினை மறுத்தமைக்கான காரணங்களை நோக்குவதே பயனுடையதாகும். பொதுவாக நோக்குமிடத்து, பிற்காலங்களிற் செல்வர்களுக்குத் துணைபோன கடவுட் கொள்கை கடையர், செல்வர் என்ற பேதங்கள் வளரக் காரணமாயிற்றென்றும், மானிட சக்தியையும் இன்ப நாட்டத்தையும் செயலூக்கத்தையும் கட்டுப்படுத்திற்றென்றும் பாரதிதாசன் கருதியதாய்த் தெரிகிறது. அவரது விளக்கங்களோடும் கருத்துக்களோடும் உடன்படாதவர்களும், பாரதிதாசன் மனிதாபிமானத்தினுலும் சீர்திருத்த ஆர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்திஞலும் தூண்டப்பட்டமையினை மறுப்ப தற்கில்லை.

தொகுத்து நோக்குமிடத்து, பாரதி, கவிமணி, பாரதிதாசன் ஆகிய மூவரும் முருகனது தோற்றத்தையும் வரலாற்றையும் பொறுத்தவரையில் மரபுவழிச் செய்திகளையே உரைத்தாலும், அனுபவ உணர்வுகளிலும் அழுத்திச் செல்லும் விடயங்களிலும் அவர்கள் வேறுபடுகின்றனர். பண்டைப் புலவர் பலரைப்போலக் கவிமணி உலக நிலையாமையையும் உடல் நிலையாமையையும் கூறுவதோடு தான் நோயிலிருந்தும் துன்பத்திலிருந்தும் ஈடேற இரக்கிருர். அதர்மம் ஒழிந்து அறமும் தமிழும் சமூகமும் ஓங்கவேண்டுமெனும் வேட்கை கொண்ட பாரதிதாசன் அவற்றின் உயர்வுக்கு மதம் முட்டுக்கட்டையாகக் கிடப்பதாய் அஞ்சி அதனைத் தாக்கலானுர். பாரதியைப் பொறுத்தவரையில், பகை யாவற்றையும் தகர்க்கும் அவனது நம்பிக்கைமிகு தரிசனப் பாதையிலே தடையாக நின்றவை வேதங்களாயினும் சாத்திரங்களாயினும் ஒதுக்கப்பட்டன. பாரிலுள்ள மக்களெல்லாம் பசியும் பிணியும் ஒழிந்து நீதியும் செல்வமும் தழைத்து வாழவேண்டுமென்னும் வேட்கையாற் கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்தச் சங்கற்பம் பூண்ட பாரதி அதற்காகவே தேசவிடுதலையினையும் தெய்வ அருளையும் வேண்டினுன். அதற்கிணங்கவே அவன் முருகனைத் துதிக்கிருன்;

"நீறுபடக் கொடும்பாவம்
பிணிபசி யாவையும்—இங்கு
நீக்கி அடியரை நித்தமும்
காத்திடும் வேலவா!"

⁂

ஒருவனுக்கு வேண்டுவதெல்லாம் இறைவனது அருளே. ஒருவர் அதற்காகவே பிரார்த்தனை செய்யவேண்டும். கடவுளின் காட்சி பெறவில்லை என்பதால் சாதனையைத் தளர்த்திவிடாதே தூண்டில் போடுபவன் தூண்டிலோடு வந்து அமர்ந்த ஒவ்வொருநாளும் பெரிய மீனையா பிடித்துவிடுவான். அவன் காத்துக் கொண்டிருக்கவேண்டும். பலமுறை ஏமாற்றமுமடைகிருன்.

— ஸ்ரீ சாரதாதேவியார்

* * *

எக்கருமத்தைச் செய்யும்பொழுதும் ஊக்கத்தோடுஞ் சிரத்தையோடும் மனமகிழ்ச்சியோடுஞ் செய்து பழகுதல்வேண்டும். அப்படிச் செய்து பழகிவந்தால் மன உறுதி உண்டாகும். அஃதாவது மனம் ஏகாக்கிர சித்தத்தைப் பொருந்தும். பொருந்தவே ஆன்மசக்தி அதிகரிக்கும். நினைத்த காரியம் நினைத்த மாத்திரத்திலே உண்டாகும்.

— யோகர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. Sinnathurai & Co.

## 25, Stanley Road,

## JAFFNA.

*Phone: 7357*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாவையும் திருவெம்பாவையும்

## ஓர் ஒப்பீடு

துரை மனோகரன், எம். ஏ.
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்

ஆண்டாளின் திருப்பாவையும் மாணிக்க வாசகரின் திருவெம்பாவையும் பாவை நோன்பினை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டவை. இந்நோன்பு மார்கழி மாதத்து மதிநிறைந்த நன்னாளாகிய திருவாதிரைத் தினத்தினை ஈற்றாகக் கொண்ட பத்துத் தினங்கள் அனுட்டிக்கப்படுவது. நாடு செழிக்கவும் நல்ல துணைவர் கிடைக்கவும் இளம் பெண்கள் இந்நோன்பினை அனுட்டித்தல் மரபு. விடியற் காலையில் எழுந்து தம்மைத் தூய்மைசெய்து நீராடுந் துறைக்குச் செல்லும் கன்னியர், அங்கு ஈர நுண் மணலால் மலைமகளை (காத்தியாயினி தேவியை) உருவகித்துப் பாவைசெய்து நீராடி வழிபடுவர். சங்கத்து நூல்களில் இது தைந் நீராடல் என வழங்கப்படலாயிற்று. ஆயின் பின்னர் மாதத்தின் பொருத்தத்துக்கேற்ப மார்கழி நீராடல் எனப் பெயர் பெறலாயிற்று. காத்தியாயினி தேவியையிட்டு நோற்கப்படுவதால் இது அம்பா ஆடல் எனவும் வழங்கப்பட்டது. சக்தியைப் பாவை வடிவிற் பாவையர் போற்றுவதாயுள்ள பாவை நோன்புக்குச் சைவ, வைணவ வடிவம் கொடுத்துத் தத்தம் பத்தியனுபவ வெளியீட்டுக்குச் சாதனமாக ஆண்டாளும் மாணிக்கவாசகரும் பயன்படுத்தியுள்ளனர். ஆயின், பாவை நோன்பானது சத்தியைப் போற்றுவது என்ற அடிப்பொருளை மாணிக்க வாசகர் உள்வாங்கிய அளவுக்கு ஆண்டாள் அக்கறைப்படவில்லை என்றே தோன்றுகின்றது. ஆண்டாள் எட்டாம் நூற்றுண்டையும் மாணிக்கவாசகர் ஒன்பதாம் நூற்றுண்டையும் சேர்ந்தவர் என்ற வரலாற்று அடிப்படையில் திருப்பாவை திருவெம்பாவையை விடக் காலத்தால் முந்தியது என்பது தெளிவாகின்றது. மாணிக்கவாசகரின் திருவெம்பாவைக்கு ஆண்டாளின் திருப்பாவை முன்னோடிநூலாக அமைந்திருத்தல் வேண்டும்.

அமைப்புரீதியில் இரு பாவைப்பாடல்களுக்குமிடையே சிலவேற்றுமைகள் உள்ளன. திருப்பாவையின் அமைப்பை ஐந்து கட்டங்களாக வகுத்து நோக்க இயலும். திருப்பாவையின் முதல் ஐந்து பாடல்களும் கோபிகையொருத்தி தன் தோழிகளை விளித்துப் பாவை நோன்பின் சிறப்பைப் பாடுவதாக அமைந்துள்ளன. இதன் அடுத்த கட்டமாக, ஆறு முதல் பதினைந்து வரையிலான பாடல்களும், துயிலும் தோழியரை மற்றவர்கள் நீராட எழுப்புவதாக அமைந்தன. பதினாறு முதல் இருபத்தொன்று வரையிலான அடுத்த கட்டப் பாடல்கள் கண்ணனின் வளர்ப்புத் தந்தையான நந்தகோபரின் இல்லத்துக்குச் சென்று கோயில் காப்போன், வாயில் காப்போன், நந்தகோபர், யசோதை, நப்பின்னை ஆகியோரையும் இறுதியில் பலராமனையும், கண்ணனையும் துயிலெழுப்புவதாக அமைந்தன. இருபத்திரண்டு முதல் இருபத்தைந்து வரையிலான பாடல்கள் கண்ணனது அருளினை யாசித்து நிற்பதாக அமைந்தவை. இறுதிக்கட்டமாக இருபத்தாறு முதல் இருபத்தொன்பது வரை அமைந்த பாடல்கள் கோபியர் தங்களுக்கும் கண்ணனுக்குமிடையிலான இடையறா உறவினையும், அவனுக்குத் தாம் மீளாவடிமைநிலை கொண்டிருத்தலையும் நினைவுறுத்துவன.

இருபது பாடல்களைக் கொண்ட திருவெம்பாவையின் முதல் எட்டுப் பாடல்களும் கன்னியர் ஒருவரையொருவர் துயிலெழுப்புவதாக அமைந்தவை. எட்டுப் பாடல்களிலும் துயிலெழுப்பப்படும் பெண்களும், முதன் முதற் துயிலெழுப்புபவளுமாகிய ஒன்பது கன்னியரும் ஒன்பது சக்திகளாகிய மனோன்மணி, சர்வபூத்தமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்பவரைக் குறிக்குமெனச் சைவ அறிஞர் கருதுவர். ஆதலின் சமய நோக்கில் திருவெம்பாவை சத்தியை வியந்தது எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகின்றது. இதனையடுத்த பாடல்களில் ஒன்பதாம், பத்தொன்பதாம் பாடல்களில் இறைவனது அடியவரே தமக்குத் துணைவராகக் கிடைக்கவேண்டும் என்ற வேண்டுதல்கள் கூறப்படுகின்றன. பத்தாம் பாடல் கோயிலிலே தொண்டு செய்யும் பெண்களை விளித்துப் பாடுவதாக அமைந்துள்ளது, இறைவனது பெருமை கூறி அவனது ஊர், பெயர், உற்றார், அயலவர், அவனைப் பாடும் முறை ஆகியவற்றைத் துயிலெழுந்து சென்ற கன்னியர் உசாவுவதாக அப்பாடல் அமைந்தது. அடுத்த இரு பாடல்களும் இறைவனின் பெருமைபேசி நீராடுவதாக அமைந்தன. அடுத்தவை இரண்டும் நீராடும் நீர்த்துறையை இறைவன் – இறைவிக்கு ஒப்பிட்டுப் போற்றிக் கன்னியர் நீராடுவதாகஅமைந்தவை. பதினைந்தாம் பாடலில் இறைவனிடத்து மனம் பதித்த தலைவியொருத்தியின் நிலை கூறப்படுகிறது. அடுத்துவரும் பாடல் இறைவியையும் மழையையும் ஒப்பிட்டுச் சிறப்பிக்கின்றது. அடுத்த இரு பாடல்களிலும் இறைவனின் பெருமை பேசப்பட்டு, இறுதிப் பாடலில் எல்லோரும் சேர்ந்து அவனது திருப்பாதங்களைத் துதிப்பதாக அமைந்துள்ளது.

திருப்பாவையின் இறுதிப் பாடல் திருக்கடைக் காப்புச் செய்யுளாக அமைந்து அப்பிரபந்தத்தைப் பாடுவார் பெறும் பேறு தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், திருவெம்பாவையின் இறுதிப்பாடல் அவ்வாறு அமையவில்லை. இறைவனது திருப்பாதங்களின் பெருமையை விளக்குவதற்கு அதனை மாணிக்கவாசகர் மனதாரப் பயன்படுத்தியுள்ளார். இரு பாவைகளினதும் இறுதிப் பாடல்கள் இரு அடியவரதும் பக்தியடிப்படையை நுண்ணிதாக வேறுபடுத்திநிற்கின்றன எனலாம். மாணிக்கவாசகரிடத்தும் ஆண்டாள் இடத்தும் இறைவனை அடையத் துடிக்கும் பேராவல் நிறைந்திருப்பினும் மாணிக்கவாசகரிடத்து இறைவனின் அன்புக்குத் தாம் பாத்திரராவரோ என்ற தாழ்வுச் சிக்கல் இருந்தது. ஆனல் ஆண்டாளிடத்து மனேவுறுதி நிறைந்திருந்தது. அத்தகைய மனேவுறுதியின் பிரதிபலிப்பாகவே திருப்பாவையின் இறுதிப்பாடல் அமைந்துள்ளது எனலாம்.

ஆண்டாளும் மாணிக்கவாசகரும் ஒருமைப்படும் இடங்களும் குறிப்பிடத்தக்கன உள. கன்னியர் ஒருவரையொருவர் துயிலெழுப்புவதாக அமைந்த பகுதிகள் அத்தகையன. அவற்றில் ஏறத்தாழ ஒரேமாதிரியான சொற்களையும் தொடர்களையும் இரு கவிஞரும் பயன்படுத்தியுள்ளனர். சான்ருக, "எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந் தெண்ணிக்கொள்" என்ற திருப்பாவை அடிகளும், "வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ? எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம்" என்ற அடிகளும், "எங்களை முன்னமெழுப்புவான் வாய்பேசும் நங்காய் எழுந்திராய்!" என்ற திருப்பாவை அடிகளும், "மானேநீ நென்னலை நாளைவந் துங்களை நானே யெழுப்புவன் என்றலும் நாணுமே போன திசைபகராய்" என்ற திருவெம்பாவை அடிகளும் ஒப்பிடத்தக்கன. இவ்வகையில், நாடகபாணியில் அமைந்த பாடல்கள் இரு பாவைகளிலும் சுவைமிக்கவை. ஆயின், இவ்வித நாடகபாணி உரையாடல் திருப்பாவையில் ஒரு பாடலில் மட்டுமே (15) இடம் பெற, திருவெம்பாவையில் மூன்று பாடல்களில் (2, 3, 4) அமைந்துள்ளது, இரு பாவைகளினதும் நாடகப் பாங்கு அமைப்புக்குச் சான்ருகத் திருப்பாவைப் பாடலொன்றையும் திருவெம்பாவைப் பாடலொன்றையும் உரையாடல் அமைப்புக்கேற்பப் பிரித்துப் பார்க்கலாம்.

"எல்லே! இளங்கிளியே!
இன்ன முறங்குதியோ?"

"சில்லென் றழையேன்மின்
நங்கைமீர்! போதர்கின்றேன்"

"வல்லையுன் கட்டுரைகள்
பண்டேயுன் வாயறிதும்"

"வல்லீர்கள் நீங்களே
நானேதா னாயிடுக"

"ஒல்லைநீ போதா
யுனக்கென்ன வேறுடையை?"

"எல்லாரும் போந்தாரோ?"

"போந்தார்போந் தெண்ணிக்கொள்"

"வல்லானை கொன்ருனை
மாற்ருரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப்
பாடேலோ ரெம்பாவாய்."

(திருப். 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' முத்தன்ன வெண்நகையாய் !
முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன்
அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்
வந்துன் கடைதிறவாய்! ''

'' பத்துடையீர் ! ஈசன்
பழஅடியீர் ! பாங்குடையீர் !
புத்தடியோம் புன்மைதீர்த்
தாட்கொண்டாற் பொல்லாதோ ? ''

'' எத்தோநின் அன்புடைமை ?
எல்லோம் அறியோமோ ?
சித்தம் அழகியார்
பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும்
எமக்கேலோர் எம்பாவாய் ''

(திருவெம். 3)

இரு பாவைப் பாடல்களிலும் தத்தம் தெய்வங்களுக்குரிய அம்சங்களுடன் மழை மேகத்துக்குரிய இயல்புகளை ஒப்பிட்டுக் கூறுவதாக அமைந்த பாடல்கள் இரு கவிஞரதும் கவித்துவத்தின் கொடிமுடியைக் காட்டி நிற்கின்றன. திருப்பாவையில் ''ஆழிமழைக் கண்ணா! ? என மழைத்தெய்வத்தை வேண்டி கண்ணனின் வண்ணம்; அவனது சக்கரம், சங்கு, சார்ங்கம் என்னும் வில் ஆகியவற்றோடு, முறையே மழைமேகத்துக்குரிய கரு நிறம், மின்னல், இடிமுழக்கம், பெருமழை ஆகிய அம்சங்களை ஒப்பிட்டு ஆண்டாள் பாடியுள்ளார். திருவெம்பாவையில் சிவபிரானின் தேவியினது நிறம், அவளது இடை, சிலம்பு, திருப்புருவம், அவனது இன்னருள் ஆகிய வற்றோடு முறையே மழைமேகத்துக்குரிய கருநிறம், மின்னல், இடிமுழக்கம், வானவில், பெருமழை ஆகிய கூறுகளையும் ஒப்பிட்டு மாணிக்கவாசகர் கூறியுள்ளார், இரு பாடல்களிலும் ஒரே அடிப்படையில் தெய்வாம்சங்களை மழைமேகத்துக்கு உவமித்துக் கூறியிருப்பினும், மாணிக்கவாசகர் '' திருப்புருவம் என்னச் சிலைகுலவி '' என இறைவியின் திருப்புருவங்கள் போன்று வானவில் விளங்கியமையைக் குறிப்பிட்டமை திருவெம்பாவையில் மேலதிக உவமையாக அமைந்து சிறப்புத் தருகின்றது.

திருப்பாவையில் பாவைநோன்பு நோற்கும் முறை பற்றிக் கூறப்பட்டுள்ளது. '' நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம் செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம் '' என விளக்கமாகச் செப்பப்பட்டுள்ளது. திருவெம்பாவையில் நோன்பு நோற்கும் முறைபற்றி தெளிவில்லை. ஒருவரையொருவர் துயிலெழுப்பி நீராடி, இறைவனை வணங்கி வேண்டுவதாக அது அமைந்துள்ளது. 'ஓங்கி யுலகளந்த உத்தமன்பேர்'' பாடிலுல் கிடைக்கும் உலகியல் நன்மைகள் திருப்பாவையிற் பேசப்படுகின்றன. தீங்கின்றி நாடெங்கும் திங்கள் மும்மாரி பெய்யும், செந்நெல் விளையும், மலர் பூக்கும், வள்ளல் பெரும் பசுக்கள் குடம் நிறைக்கும். நீங்காத செல்வம் நிறையும். ஆயின், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையில்உலகியல் நன்மைகள் கூறப்படவில்லை;ஆன்மீக நயங்களே விதந்துரைக்கப்படுகின்றன.

இரு அடியார்களாலும் தத்தம் தெய்வங்களின் பெருமைகள் சிறப்புறச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ''யசோதை இளஞ்சிங்கம்'', '' பாற்கடலுட் பையத் துயின்ற பரமன்'', ''ஓங்கி யுலகளந்த உத்தமன் '', ''தூய பெருநீர் யமுனைத் துறைவனை ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கைத் தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை '', '' வெள்ளத் தரவிற் துயிலமர்ந்த நாரணன்'', '' நாற்றத் துழாய்முடி நாரணன் '' என வரும் திருப்பாவைத் தொடர்கள் புராணக் கதையம்சங்களுடன் இணைந்து சுவை மிக்கனவாயுள்ளன. அத்தோடு, '' மாரி மழை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப் போதருமா போல'' கண்ணனும் எழுந்தருளவேண்டும் என ஆண்டாள் குறிப்பிடும் உவமை மிகச் சிறந்து விளங்குவதோடு கண்ணனின் பெருமையைப் புலப்படுத்தற்கும் பெரிதும் துணையாகின்றது. திருவெம்பாவையில் '' முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே '', '' பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை '', '' தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார் கழல் '' ஆகிய தொடர்கள் மாணிக்கவாசகருக்கே உரித்தான சொற்றிறத்தைக் காண்பிக்கின்றன.

ஆண்டாள் புராண, இதிகாச, பாகவதக் கதைமரபில் இடம்பெறும் கண்ணன் வளர்ந்த ஆயர்பாடியைத் தம் திருப்பாவைக்குப் பகைப்புலமாகச் சித்திரிக்கும் வேளையில், மாணிக்கவாசகர் தம் சமகாலப் பின்னணியைக் கொள்கின்றார். ஆயினும் மாணிக்கவாசகர் பகைப்புலச் சித்திரிப்பில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை என்றே தோன்றுகின்றது. ஆண்டாள் கண்ணன் வரலாற்றோடு தொடர்புபட்ட ஒரு கதை நிகழுமிடத்தைத் தம் கருத்து வெளிப்பாட்டுக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தமையால் பகைப்புலத்தைச் சிறப்பாகச் சித்திரிக்க வேண்டிய தேவையும், அதற்கேற்பத் திறமையும் ஒருங்கே கொண்டவராக விளங்கினர். சான்ருக, ''காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து வாச நறுங்குழலாய்ச்சியர் மத்தினுல் ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ? ''கீழ்வானம் வெள்ளென்றெருமை சிறுவீடு மேய்வான் பரந்தன காண்'', ''உங்கள்புழைக்கடைத்தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய்நெகிழ்ந் தாம் பல்வாய் கூம்பினகாண்'', ''செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்ருர்'' போன்ற ஆண்டாளின் சித்திரிப்புகள் கதைக்களன் பற்றிய அவரது பிரக்ஞையைப் புலப்படுத்தி நிற்கின்றன. மாணிக்கவாசகர் உணர்ச்சிச் செறிவுக்கே முதன்மை கொடுப்பவராதலின் பகைப்புலச் சித்திரிப்பிற் பெரிதும் ஈடுபாடு காட்டவில்லை.

திருப்பாவையில் கண்ணன் பெருமை பேசி, நோன்பு நோற்று வழிபடும் அடியாராகக் கோபியர் இடம்பெற்றுள்ளனர். அக் கோபியருள் ஒருத்தியாகவே ஆண்டாள் தம்மைப் பாவித்துக் கொள்கின்ருர். ஆனுல், திருவெம்பாவையில் சிவபிரானது முழுமுதற் தன்மையும் சக்தியைச் சிறப்பிப்பதுமே முக்கியத்துவம் பெறுகின்றன. தம் காலத்துக் கன்னியரையே அடியாராக மாணிக்கவாசகர் காட்டுகின்ருர். அவ்விளம் பெண்களின் வேண்டுதல்கள் புதியவை. 'உன்னைப் பிராணுகப் பெற்றவுன் சீரடியோம் உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்; அன்னவரே எங்கணவ ராவார்; அவருகந்து சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்'' என வரும் அடிகள் அத்தகைய புதிய வேண்டுகோள்களாக அமைந்தவை. ஆயின், திருப்பாவையில் இடம் பெறும் அடியவராகிய கோபியரின் வேண்டுதல்களோ, பழைய உறவின் தொடர்பு அறுபடாமல் தொடர்ந்திருக்க வேண்டுவதேயாகும். சான்ருக, ''குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்றன்னே டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது'', ''இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னே டுற்ருேமே யாவோ முனக்கேநா மாட்செய்வோம்'' எனவரும் அடிகளைக் குறிப்பிடவேண்டும். கோபியர் கண்ணனையே கணவனுக வரித்தமையால், திருவெம்பாவைப் பெண்கள் வேண்டுவது போன்ற துணைவர்பற்றிய வேண்டுதல் தேவையற்றுப் போயிற்று. சுருங்கக்கூறின் மாணிக்கவாசகரினது திருவெம்பாவைப் பெண்களின் வேண்டுகோள் இறைவனின் அடியவரைத் துணைவராகப் பெறுதலாகவும், ஆண்டாளினது திருப்பாவைக் கோபியரின் வேண்டுதல் கண்ணனேடு தாம் கொண்ட உறவினை 'உறுதிப்படுத்தலாகவும் அமைந்துள்ளன. கண்ணனைப் பாடிப் போற்றி அடிமையாவதனுல் கோபியர் பெறும் சன்மானம், பல்கலனும் அணிதல், ஆடையுடுத்தல், ''பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக் கூடியிருந்து'' உண்ணல் ஆகியவை என ஆண்டாள் குறிப்பிடுகின்ருர்.

திருமாலின் அவதார விசேடங்கள் — குறிப்பாகக் கண்ண, இராமாவதாரங்கள்— ஆழ்வார்களின் கவித்துவத்துக்கு வரப்பிரசாதகமாக அமைந்துவிட்டன. வேண்டும் வகையில் உலகியல் வழக்கில் இறைவனது அவதார மகிமையைச் சித்திரித்துவிடக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு இருந்தது. அதனுல் ஆண்டாள் தம் திருப்பாவையைக் கண்ணுவதாரத்தை மையமாகக்கொண்டு உலகியல் வழக்கிற் பாடுவதற்குச் சந்தர்ப்பமிருந்தது. தெய்வம் என்ற உன்னத மகிமைக்குப் பங்கம் ஏற்படாதவாறு மனித நிலையிலும் கண்ணனின் அவதாரச் சிறப்பைப் பாடத்தக்க பெருவாய்ப்பை ஆண்டாள் மிகைபடாமற் பயன்படுத்தியுள்ளார். ஆனுல், சைவ சமயக் கோட்பாடுகளுக்கேற்ப இறைவனை அவதாரம் எடுப்பித்து, மனிதநிலைக்கு ''இறக்குவது'' இயலாத தொன்று. அதனுல் திருவெம்பாவையில் இறைவனது முழுமுதல் தன்மைக்குப் பங்கம் ஏற்படாதவாறு பேணவேண்டிய கடப்பாடும் கட்டுப்பாடும் மாணிக்கவாசகருக்கு இருந்தது. அந்த வரையறைக்குள் நின்றுகொண்டே தம் பக்திச் செறிப்பை உணர்த்தவேண்டிய நிலைப்பாடு அவருக்கு இருந்தது.

ஆண்டாளும் மாணிக்கவாசகரும் ஒரு புறம் அடியாராகவும், மறுபுறம் கவிஞராகவும் நின்று இரு பாவைப் பாடல்களையும் பாடியுள்ளனர். இதன் காரணமாக, தத்தம் சமய உண்மைகளுக்குப் புறம்போகாமலும் இலக்கியத் தரத்தினின்று தவிர்ந்துவிடாமலும் தம்மைக் காத்துக்கொண்டுள்ளனர். இத்தகைய அவர்களது பத்திச் சிறப்பும், திறமையுமே, சைவ இலக்கியத்தில் திருவெம்பாவை உள்ளிட்ட திருவாசகத்தையும். வைணவ இலக்கியத்தில் திருப்பாவை உள்ளிட்ட ஆண்டாள் பாசுரங்களையும் பெருமதிப்புடைய இலக்கியச் செல்வங்களாக்கி விட்டன. பரந்த தமிழிலக்கியப் பரப்பிலும் ஆண்டாளும் மாணிக்க வாசகரும் உன்னத இடத்தைப் பெற்றுவிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்திசெய்து பிழைக்கச் சொன்னவ்

கலாநிதி அ. சண்முகதாஸ்
தலைவர், மொழி பண்பாட் டாய்வுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பா**ரதி பிறந்து நூறு வருடங்களாகி விட்டன. புதுமைக் கவிஞன், புரட்சிக்கவிஞன், சுந்தரக் கவிஞன், ஞானக்கவிஞன் என்றெல்லாம் போற்றப்படுகின்ற அந்த மகாகவி மனிதனின் வாழ்வுக்கு நெறி வகுத்துத் தந்த கவிஞனுவான். தமிழகத்திலே தோன்றினாலும் உலகம் முழுவதும் இன்று நினைவுகூரக்கூடியவகையிலே புகழ் பெற்றவன். பாரதியின் வாழ்வு நெறி கவிதைகளை யாத்த கவிஞன் என்ற பெருமையை மட்டுமன்றி பாரதி நெறியாளனுகவும் அவனைப் போற்ற உதவியது.

அந்நியராட்சியிலிருந்து பாரத மாதவினை விடுவிக்க அரும்பாடுபட்டவர்களுள் பாரதியும் ஒருவன். விடுதலை வேட்கை கொண்ட ஒருவன் அந்த விடுதலையைக் காணப் பல்வேறு வழிகளைத் தேடினுன். அதற்காகக் கவிதையைத் தனக்குத் தொழிலாக்க எண்ணங்கொண்டான். உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே இனிமையுண்டாகும். பாரதி தன் மனத்திலே மகா சக்தியைக் கண்டவன். தனக்குமுன்னே வாழ்ந்தவர்களது வாழ்வுநெறியைத் தானும் பாடமாகக்கொண்டவன்.

எனக்குமுன்னே சித்தர்பலர் இருந்தா ரப்பா
யானும் வந்தேன் ஒருசித்தன் இந்த நாட்டில்
மனத் தினிலே நின்றிதனை எழுது கின்றுள்
மனேன் மணியென் மகாசக்தி வையத்தேவி.

என்ற அவன் பாடல் மனத்திலே அவன் தெய்வநிலை கண்டதை உணர்த்துகின்றது. சாதாரணமான மனிதனுக வாழும்போதே மனத்தில் மகாசக்தியை இருத்தி வழிபடுகின்ற உரமான மனவலிமை படைத்தவனுகப் பாரதி விளங்குகின்ருன். தன் வாழ்வில் அனுபவித்த இன்பதுன்பங்களையெல்லாம் எண்ணிப்பார்த்துத் தன் வாழ்வுநெறியைச் செம்மைப்படுத்தியுள்ளான். இந்நாட்டு விடுதலைக்கு வீட்டு விடுதலையே முதலில் வேண்டப்படுவது என்பது பாரதியின் அசையாத நம்பிக்கையாக இருந்தது. அந்த நம்பிக்கையை அனைவர் மனதிலும் ஊட்ட வேண்டியது தன் கடமையென உணர்ந்தான். பராசக்தி தன்னைப்பற்றியே பாடும்படி கேட்கிருளெனப் பாரதி கூறுகின்ற வார்த்தைகள் பாரதியின் பக்தி நிலையை விளக்குகின்றன.

''நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானிலத்தார் மேனிலை எய்தவும்''

எனப் பாடிய பாரதி தன் கவிதைகள் யாவற்றையும் பராசக்திக்கே அர்ப்பணமாக்குகிருன். பாரதிக்கு முன்னே பக்திசெய்து வாழ்ந்த பலரை நாமறிவோம். பல சமய நெறிகள் மூலம் மானிட வாழ்வைச் செம்மைப்படுத்த முனைந்த பக்தி நெறியாளர்கள் காலத்துக்குக் காலம் தோன்றியுள்ளனர். பல சமயங்களும் போதித்த அந்த நெறிகள் பலவாக இருந்தபோதும் அவையாவும் இறைவனை யடைதல் என்ற நிலையிலே ஒற்றுமைப் பட்டிருந்தன.

பக்தி என்பது பகவானிடத்தில் செலுத்தப்படுகின்ற ஒப்பற்ற அன்பாகும். பகவான் மீது அன்பு உண்டாகும்போது அது உலகத்துள் சகலர் மீதும் கொள்கின்ற அன்பாகின்றது. இத்தகைய பக்தர் நிலையைப்பற்றிக் கூறும்போது ''அது ஆறு கடலையே நோக்கிச் செல்லும்; தாமரை சூரியனையே நோக்கி வளரும்; உயிர் யமனையே நோக்கிப் போகும்; அதுபோல ஆன்மா திருமாலையே நோக்கிச் செல்லும்'' என ஒரு ஆழ்வார் கூறிச் சென்றுள்ளனர். ''நாமறியாமலே நம்மீது மிக்க பிரீதியுள்ள ஒருவன் நமக்கு எல்லா நன்மைகளையும் எப்போதும் எந்நிலையிலும் மறைந்துநின்று செய்து வருகின்ருன். அவனையுணர்ந்து அவன்மீது நாமும் பிரீதி செய்தால் அவன் கண்காணவந்து நமக்கு வேண்டியவற்றை யெல்லாம் தருவான்'' என்று ஆசாரியார்கள் கூறுகின்றனர். இத்தன்மையான பக்தியை நாம் உணர்வதற்கு ஒன்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகள் கூறப்பட்டிருக்கின்றன. முதலிலே ஒருவனிடம் நமக்குப் பிரீதி உண்டாக்க வேண்டுமானுல் அவன் பெருமையான குணங்களேயும் அவைகளை விளக்கும் செயல்களை யும் பற்றித் தெரிந்தவர்கள் சொல்ல நாம் கேட்கவேண்டும். இதுவே கேட்டல் அல்லது சிரவணம் எனப்படும். அதன் பின்னர் இத் தெய்வ குணங்களை உணர்த்தும் கடவுளது நாமங்களை வாய்விட்டு உரைக்கவேண்டும். இது நாமஞ் சொல்லல் அல்லது கீர்த்தனம் எனப்படும். அதன்பின்னர் அந்த நாமங்க ளால் உணர்த்தப்படும் பெருமையான கடவு ளது குணங்களை மனத்தில் அடிக்கடி நினைக்க வேண்டும். இது ஸ்மரணம் எனப்படும். இம் மூன்றையும் செய்கின்ற ஒருவனுக்கு இறை வன் ஒருவன் இருக்கிறுன் என்ற நம்பிக்கை யும் அவன் உருவம்பற்றிய சிந்தனையும் எழும். அதன் மூலம் அவன் இறைவனைத் தனக்கு எல்லாப் புலன்கள் வழியாகவும் அனுபவத்திற்குரிய பிரியமான ஒரு வடிவ முள்ளவனுக மனத்திலே அமைத்து விடுகின் றுன். அதன் மூலம் அந்த இறைவனுக்குச் சேவை செய்யவேண்டும் என்ற நிலை ஏற்படு கின்றது. சிறு தொண்டுகள் செய்து இறை வன்மீதுள்ள பிரியத்தை வெளிப்படுத்த முற் படுதல் பாதஸேவனம் எனப்படும். இதன் பின்னர் இறைவன் பாதத்தை நீர் மலர் முதலியவற்ருல் பூஜிக்கத் தோன்றும். இதுவே அர்ச்சனம் எனப்படும். இது செய்து வழி படுவது வந்தனமாகும், இறைவன் மீதுள்ள நம்பிக்கையால் இச் செயல்கள் வலுக்க அவ னேடு நெருங்கிப்பழக அவன் எம்மை சூழ்பவன் என்ற நம்பிக்கை ஏற்படும். எம்மை அவனது அடிமையாக்குந் தன்மை பிறக்கும். இது தாஸ்யம் எனப்படும். இந்த உறவு முற்றும்போது நாம் கொண்டுள்ள அசையாத நம்பிக்கையால் அவனைச் சமமான தோழனுகக் கருத முற்படுவோம். இந் நட் பாகும் நிலையே ஸக்யம் எனப்படும். இந் நிலையின் முடிவில் நாம் எல்லாவற்றையும் அவனுக்காகவே அர்ப்பணிக்கின்ற நிலையை எய்துகின்ருேம். இது ஆத்ம நிவேதனம் எனப்படும். இவ்வொன்பது நிலைகளும் எம் பக்தி நிலைகளின் வளர்ச்சியாகவும் வாழ்வு நெறியாகவும் அமைந்துள்ளன. இதனையே அப்பர் சுவாமிகள் தன் அனுபவமாகத் திருத் தாண்டகத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானுள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்ருள் அகலிடத்தார் ஆசா ரத்தை
தன்னை மறந்தாள் தன்னுமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.''

இத்தகைய நிலைகளினுல் பெறப்பட்ட பக்தி வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உதவுகின்றது. இவ் உண்டாகின்ற பக்தி வைதிபக்தி அல்லது ஆரம்பபக்தி எனப்படும். இது அபரபக்தி என்றும் அழைக்கப்படும். இம் முறைப்படி இறைவன் மீது அன்பு செலுத்தி வருவதால் நாளடைவில் அவனைக் காண வேண்டும் என்ற அவா உண்டாகின் றது. அந்த இறைவனை அடைவதற்காக பரதவிக்கின்ற நிலை ஏற்படுகின்றது. இதுவே ராகபக்தி, பரபக்தி எனப்படும். அன்பு உள்ளத்திலே பொங்கி வழியும்போது அது சாஸ்திர விதிகளையும் கடந்துவிடும். அபர பக்தி சாதனபக்தியாக அமைய பரபக்தி சாத்திய பக்தியாகின்றது. இதுவே பிரேம பக்தி என்றும் அழைக்கப்படும். அன்பு பூரணமாகும்போது உண்மையான ஞானம் தானுகவே உண்டாகும். அன்பும் அதனேடு குடிகொண்டிருக்கும்.

பக்தர்கள் பற்றிக் கூறும்போது பகவத் கீதையில் கண்ணபிரான் நான்கு வகையான பக்தர்களைக் குறிப்பிடுகிருர். துன்பம் வந்த போது அதை நீக்குவதற்காகப் பகவானைத் துதிப்பவர்களை '' ஆர்த்தர் '' என்ற முதலா வது வகையாக்குகின்ருர். மோட்சத்தில் விருப்பமுடையவராகி அதனை நிறைவேற்று வதற்காகஇறைவனைத்துதிப்பவர்''ஜிந்நாஜீ'' என்ற வகையினுள் அடங்குவர். உத்தவரை இதற்கு உதாரணமாகக் கூறுவர். தமது எளி மைத்தன்மையை நீக்கி செல்வம் பெற வேண்டும் என்று இறைவனை வணங்குபவர் ''சார்த்தார்த்திகள்'' என்ற வகையிலடங்கு வர். அரசுரிமை பெற்று வாழும் பொருட்டு தவஞ் செய்து பகவானை வழிபட்ட துருவர் இதற்கு உதாரணமாவர். மெய்ஞ்ஞானம் பெற்று யாதொன்றையும் கேளாது உள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னத்து இயல்பாகவே பொங்கும் பரிவினால் இறைவனை வணங்குபவர் ''ஞானி'' எனப் படுவர். இதற்குதாரணமாக பிரகலாதரைக் குறிப்பிடுவர். பகவானைத் தன்னுயிராகக் கருதும் ஞானியைப் பகவானும் தமது உயிராகவே கருதுகின்றார். இதுவே பிரேம பக்தியின் எல்லையாகும்.

பாரதியும் பக்திநெறி பற்றிச் சிந்திப்பதற்குத் தனக்கு முன்னே இருந்த பக்தி நெறியாளர்களது வாழ்க்கை முறைகளையும் பாடல்களையும் துணையாகக் கொண்டுள்ளான். பக்தி பெற்றிருந்த வடமொழிக் கல்வியறிவும் பிறப்பும் இதற்கு உதவியாக அமைந்தன. வேதங்களைப் பற்றியும் உபநிடதங்களைப்பற்றியும் பக்தி இலக்கியங்களைப் பற்றியும் பாரதி நன்கு விளக்கிக் கொண்டவனாக தனது பக்தி நெறியையும் புதுமையாக வகுத்துச் சென்றுள்ளான். தனது காலத்திலே நிலவிய பல்வேறு சமயநெறிகளையும் ஆராய்ந்து பொதுமையான நெறியொன்றை வகுத்த இராமகிருஷ்ண பரமஹம்சரைப் போலப் பாரதியும் நெறியைப் பரப்ப முற்பட்டான். இடையறாத அன்பினாலும் தியானத்தினாலும் எல்லாம் வல்ல ஈசனை அடைய முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டக் கவிதைகளை இயற்றினான். உண்மையின் பேர் தெய்வம் என்போம். உண்மையே வெல்லும் என்ற உபநிடதக் கருத்துக்களைப் பாரதி மற்றவர்க்கும் விளக்குகின்றான். ''உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்'' என்று கவிதை பாடினான். ''தமிழருக்கு'' என்னும் கட்டுரையில் வேதங்களை நம்பு. அவற்றின் பொருளைத் தெரிந்துகொண்டு பின் நம்பு. புராணங்களைக் கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல நடந்து கொள்ளாதே. தமிழா உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க்கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக்கொள்கைகள் லௌகீகக் கொள்கைகள் வைதிக நடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடங்கொடுத்து விட்டால் இவற்றை நீக்கி விடு. வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும் கட்டிடத்திலும் எதிலும் எப்போதும் நேர்மை இருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிப்பதை இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக்கெல்லாம் உயிர். உண்மை சாஸ்திரங்களுக்கெல்லாம் வேர். உண்மை பரமாத்மாவின் கண்ணாடி. ஆதலால் தமிழா எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

இவ்வாறு பாரதி ஞானத்திற்கு ஆதாரமாக உள்ளது உண்மை என்பதைத் தெளிவு படுத்தியுள்ளான்.

உண்மையான பக்தன் எல்லாவற்றையும் தன் ஆன்மாவிலும் தன் ஆன்மாவை எல்லாவற்றிலும் காண்பவன். அவன் எவரையுமே வெறுப்பதில்லை. அது போலவே பாரதியும் பகைவனுக்கும் அருள் செய் என்று தன் நெஞ்சுக்கு நீதி புகட்டுகிறான்.

பகைவனுக்கு அருள்வாய் — நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய்
உள்ள நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில்
உள்ள நிறைவாமே — நன்னெஞ்சே
தெள்ளிய தேனிலோர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனாமோ ?—நன்னெஞ்சே
வாழ்வை நினைந்தபின் தாழ்வை நினைப்பது
வாழ்வுக்கு நேராமோ ?— நன்னெஞ்சே
தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிபவனென்று
சாத்திரங் கேளாயோ—நன்னெஞ்சே
அன்னை பராசக்தி அவ்வுரு வாயினள்
அவளைக் கும்பிடுவாய்—நன்னெஞ்சே.

இக்கவிதை மூலம் பாரதி பக்தி நெறியினைப் புதுமைப்படுத்தியது மட்டுமன்றி யாவர்க்கும் பொதுமையானதாக ஆக்கி விடுகின்றான். அறநூல்கள் கூறும் நீதிகளை ஆத்மஞானத்தால் உணர்ந்த பின் கவலைகள் இல்லையென்பது அவனது அசையாத நம்பிக்கையாகும். இந்த ஞானம் பிறந்தால் மரணத்திற்கும் அஞ்சவேண்டியதில்லை. ''காலா உனை நான் சிறு புல் என்றே நினைக்கின்றேன்'' எனப் பாரதி அஞ்சாமற் கூறுகிறான். இத்தகைய அஞ்சாமை உணர்வுக்கு ஆதாரமாக இருப்பது பக்தியே.

பயனெண் ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்
துயரிலாது என்னைச் செய்து விட்டாள்
துன்பம் என்பதைக் கொய்து விட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாரதியின் குரல் தான் பெற்ற இன் பத்தைப் பிறரும் பெற வைக்கின்றது. பக்தி யின் சிறப்பை அவன் மேலும் எடுத்து விளக்குகின்முன்.

பக்தியினுல் – இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கேளடி
சித்தந் தெளியும் – இங்கு
செய்கை அனைத்திலும் செம்மைபிறந்திடும்
வித்தைகள் சேரும் – நல்ல
வீரருறவு இடைக்கும் – மனத்திடைத்
தத்துவம் உண்டாகும் – நெஞ்சில்
சஞ்சலம் நீங்கி உறுதி விளங்கிடும்
கல்வி வளரும் – பல
காரியம் கையுறும் வீரிய மோங்கிடும்
அல்லல் ஒழியும் - நல்ல
ஆண்மையுண்டாகும் அறிவுதெளிந்திடும்
சொல்லுவதெல்லாம் – மணச்
சொல்லினைப்போலப்பயனுள்ளதாகும்மெய்
வல்லமை தோன்றும் - தெய்வ
வாழ்க்கையுற்றே இங்கு வாழ்ந்திடலாம்.

இந்தப் பாடலில் பாரதி கூறுகின்ற அனுபவங்கள் அவன் தான் பெற்ற அனுப வங்களாக இருக்கலாம். ஆனல் அவை மற்ற வர்க்கும் பயன் தருபவை என்பதை அவன் துணிந்து கூறக் கூடியதாக இருந்தமைக்குக் காரணம் நமது முன்னேர்கள் பலரது வாழ்வு நெறியுமாகும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

என்ற வள்ளுவர் வாக்கினைப் பாரதி தனது காலத்து அனுபவங்களால் உணர்ந்திருக் கிருன். ராமகிருஷ்ணர், அரவிந்தர், விவே கானந்தர் போன்றவர்களது வரலாறு அவ னுக்கு இதனை உணர்த்தியது. இதனுலே பக்தி பற்றிக் கூறும்போது மற்றவர்களைப் பற்றி அவன் சிந்திக்கவேண்டியிருக்கவில்லை அதை விடப் பாரதி பெற்றிருந்த கல்வியறிவின் விளக்கம் அவனுக்குத் துணை நிற்கின்றது. பகவத்கீதை படித்துப் பாரதி பயன்பெற்ற வனுகிருன் கீதையைத் தமிழாக்கவும் செய் திருக்கிருன். கீதை பற்றிக் கூறும்போது,

பகவத் கீதை தர்மசாஸ்திரம் என்று மாத்திரமே பலர் நினைக்கின்ருர்கள். அதாவது மனிதனை நன்கு தொழில் புரியும்படி தூண்டிவிடுவதே அதன் நோக்க மென்று பலர்கருதுகிருர்கள். இது சரியான கருத்தன்று. அது முக்கியமாக மோட்சசாஸ் திரம். மனிதன் சர்வ துக்கங்களிலிருந்தும் விடுபடும் வழியைப் போதித்தலே இந் நூலின் முதற்கருத்து.......... கண்ணபிரான் கீதையில் திரும்பத் திரும்ப தொழில் செய், தொழில் செய், தொழிலை விட்டு விடாதே, தொழில் செய், தொழில் செய் என்று போதிக்கின்ருர். இதனின்றும் அதனை வெறுமனே தொழில்நூல் என்று கணித்து விட்டார்கள். இங்கு தொழில் செய்யும் படி தூண்டியிருப்பது முக்கியமன்று. இதனை அந்த நிலையிலிருந்து என்னமாதி ரியாகச் செய்ய வேண்டுமென்று பகவான் காட்டியிருப்பதே மிக மிக முக்கியமாகக் கொள்ளத்தக்கது. பற்று நீங்கித் தொழில் செய், பற்றுநீக்கி, பற்றுநீக்கி, பற்றுநீக்கி, இதுதான் முக்கிய பாடம்................ தொழி லின் வலைகளில் மாட்டிக்கொள்ளாதே. இவற்ருல் இடர்ப்படாதே. அவற்ருல் பந் தப்படாதே. தளைப்படாதே. இதுதான் முக்கியமான உபதேசம்.

என்று விளக்கிக் கூறுகின்ருர். பழைய சாஸ் திரங்களையும் இதிகாசங்களையும் நாம் அறி வின்மையால் பிழைபட விளங்கிக் கொள்வ தையே பாரதி இங்கு சுட்டிக்காட்டுகின்ருன். சனுதனமான இந்துமதம் கூறும் நெறிகள் யாவும் வாழ்வுக்குகந்த நெறிகள் என்பதைப் பாரதி பலருக்குமுணர்த்த எண்ணினுன். பயனில்லாத உழைப்பையே பக்தி நெறி யாக்கி, வாழும் நெறியாக்க முன் வந்தான். சுயநலத்தை விட்டுப் பரநலத்திற்காக நாம் என்று உழைக்கத் தயாராகுவோமோ அன்று தான் நாம் ஞானம் பெற்றவர்களாகின்ருேம். நம்வாழ்வின் துன்பங்களைக் களைய இது ஒரு நல்வழியாகும். இதனைப் பக்தியோகத்திலே பகவான் கிருஷ்ணனும் கூறிச் சென்றுள்ளார்.

எவ்வுயிரையும் பகைத்தல் இன்றி அவற் றிடம் நட்பும் கருணையும் உடையவனுய் யான் என்பதும் எனது என்பதும் நீங்கி இன்பத்தையும் துன்பத்தையும் நிகராகக் கொண்டு பொறுமையுடையவனுய்................ உள்ளவனே எனக்குத் தொண்டன், எனக்கு இனியவன்.

இங்கு நான் எனது என்று யாதும் இன்றி அடைகின்ற நிலையாகிய முத்தி நிலையை நாம் காணமுடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதுஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறைஉறை சிவனே
எந்தையே ஈசா உடல்இடம் கொண்டாய்
யான்இதற்கு இலன்ஓர் கைம்மாறே''

என்ற மணிவாசகரது திருவாசகம் பாரதிக்கு முன்பாகப் பக்தி நெறியின் தன்மையை விளக்குகின்றது. இறைவன் பற்றிய அனுபவம் உலகமுள்ள வரையும் நிலைத்து நிற்கும் தன்மையது. பாரதி தான்பெற்ற அனுபவத்தைப் பலரும் பெறவேண்டுமென்ற தாகத்தோடு கவிதைகளைப் பாடினான். பாப்பா தொடக்கம் முதியோர்வரைக்கும் ஏற்றவகையில் பக்தி நெறிக்கு வழிகாட்டியவன் பாரதி.

உயிர்களிடத்து அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேண்டும்
வயிரமுடைய நெஞ்சு வேண்டும் – இது
வாழும் முறைமையடி பாப்பா.

மக்களிடையே வேற்றுமைகள் இருக்கக் கூடாது. அவர்கள் யாவரும் ஒன்றே. அவர்களிடம் அன்பு நிலவினால் குரோதங்களும் பகைமையும் அற்றுவிடும். மனிதர்கள் தாங்கள் வாழும் நிலையிலேயே இறை தத்துவத்தையும் உணர்ந்துகொள்ளமுடியும்.

பக்திக்காக பரமன் அடிகளை அடைவதற்காக வழிசொன்னவர்களிற் பலர் பெண்களை அதற்குத் தடையாகவே எண்ணினர். தமது எண்ணங்களைப் பாடல்களிலும் பொறித்து வைத்தனர். பெண்ணின்பத்தை வெறுத்துப் பாடினர். தமது அறிவீனத்தால் தாம்பெற்ற துன்பங்கள் எல்லாவற்றிற்கும் பெண்களையே காரணமாக்கினர். தமது புலனடக்கத்தை நெறிப்படுத்த முடியாதவர் அதற்குச் சாட்டாகப் பெண்களையே கூறினர். பெண்களை இழித்துரைக்கவும் அவர்கள் தயங்கவில்லை. இடைக்காலத்தில் இத்தகையதொரு நிலைமை ஏற்பட்டதற்கு ஏற்ற காரணம் இருக்க வேண்டும். அதுவே ஆண்கள் தங்கள் மனத்தை யடக்க முடியாத போது பெண்களை அதற்குக் காரணமாக்கியமை எனலாம்.

''காதென்றும் மூக்கென்றும் கண்ணென்றும்
காட்டிஎன் கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை
தன்னை மறலிவிட்ட
தூதென்று எண்ணமல் சுகமென்று
நாரும்இத் துற்புத்தியை
ஏதென்று எடுத்துரைப்பான்
இறைவா கச்சி ஏகம்பனே''

என்ற பாடல் சீரிய ஞானி எனப் பலரும் போற்றுகின்ற பட்டினத்தார் பாடியதாகும். ஆனால் பாரதியோ இதனைத் தெளிவுபடுத்த முயன்றான். உண்மையிலேயே பெண்கள் மாயையின் உருவங்கள்தானா மறலி விட்ட தூதுவர்தானா என்று சிந்தித்தான். பெண்களை வெறுப்பது பேரின்பத்துக்கு ஒரு நாளும் வழியாகாது என்பதை உணர்ந்தான். இறைவன் படைத்தவை யாவுமே தன்னை உணர்த்துவதற்காகவே என்ற தத்துவத்தினை விளக்க எண்ணினான். பழங்காலத்திலே பெண்கள் பெற்றிருந்த உயர்வான நிலையைப்பற்றிச் சிந்தித்தான். சமூக வாழ்விலே ஆண்களுக்கு நிகராக அவர்கள் வைத்து எண்ணப்பட்டிருந்ததை நினைவுக்குக் கொண்டுவந்தான். பிருக தாரண்யக உபநிடதத்திலே யக்ஞவல்யரின் மனைவி மைத்திரேயா மற்றும் கார்க்கி போன்ற பெண்கள் ஆன்ம விசாரணையில் ஈடுபட்டு ஆண்களுக்கு நிகராக வாதம் செய்யும் திறமையுடையவர்களாக இருந்தார்கள். அவர்களின் வழித்தோன்றல்களையும் பெருமைக் குரியவர்களாகவே பாரதி மதித்தான்.

காதல் செய்யும் மனைவியே சக்திகண்டீர்
கடவுள் நிலை அவளாலே எய்தவேண்டும்

என மக்களுக்கு எடுத்துக் காட்டினான். கண்ணனையே தன் காதலியாகப் பாவனைசெய்து பாடினார்.

'' பாயும்ஒளி நீஎனக்கு
பார்க்கும்விழி நானுனக்கு
பண்ணுசுதி நீஎனக்கு
பாட்டினிமை நானுனக்கு''

என்ற அடிகள் பாரதி நடைமுறை வாழ்வினூடாகப் பக்திநிலையைக் கண்டதைக் காட்டுகின்றது.

எமது பிறவியின் நோக்கம் இந்த மாநிலம் பயன்பெற வாழ்வதுதான் என்பதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி எல்லோர்க்கும் உணர்த்த எண்ணி ஞன். பரபக்தியை மக்கள் மத்தியிலே பரப்பு வதற்காகப் பராசக்தியையே வேண்டுகிருன்.

நல்லதோர் வீணை செய்தே — அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி — எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ — இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே.

என்ற அவன்குரல் அவனுக்கு மட்டுமன்றி அனைவருக்குமே பக்திநிலையை வேண்டுவதாக அமைகின்றது. சாதாரண மனிதர்களைப் போலப் பயனற்ற வாழ்வு நடத்த அவர் விரும்பவில்லை.

தேடிச் சோறு நிதம் தின்று — பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி — மனம்
வாடித் துன்பம் மிக உழன்று — பிறர்
வாடப்பல செயல்கள் செய்து — நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி — கொடும்
கூற்றுக்கு இரையெனப் பிறர் மாயும் — பல
வேடிக்கை மனிதரைப் போலவே — யான்
வீழ்வேன் என்று நினைத்தாயோ.

என்று பராசக்தியிடம் பாரதி தன்னம் பிக்கையோடு கேட்பது அவன் பக்தியின் வைராக்கியத்தைக் காட்டுகின்றது. பாரதி யின் அஞ்சாமை, துணிவு, வீரம், தியாகம் என்னும் நல்ல குணங்களைக் கொண்டு வாழ்வு நடத்துவதற்கும் யாரையும் எடுத் தெறிந்து தீமையைக் கண்டிக்கும் திறனுக் கும் அவரது பக்தியுணர்வும் நம்பிக்கையுமே பெருந்துணையாக இருந்தன. பராசக்தி தன்னை பக்திசெய்தே பிழைக்கச் சொன் ஞள் என்று கூறுவதன்மூலம் மாநிலத்து மானிடர் யாவர்க்கும் வாழும் நெறியைக் காட்டியவனுக பாரதி அமைகிருன். அவன் புகழ் பாடுவதை விட அவன் காட்டிய பக்தி நெறியில் வாழ்வதே அவன் வழி வந்த எம் கடமையாகும்.

✱

## பிரார்த்தனை

இறைவனே !

1. உன் திவ்விய தரிசனத்தை எனக்கு அளிக்கவேண்டும். பெண், பொன் இவற்றி னின்றும் என் மனத்தைத் திருப்பவேண்டும்.
2. உன் திருவடித் தாமரைகளில் எனக்குப் பக்தி உண்டாகும்படி அருள் புரிய வேண்டும். உலகை மயக்கும் உன் மாயையால் என் சித்தம் கலங்காதிருக்க அருள்புரிவாய்.
3. உன் தயை நிறைந்த முகத்தைக் காட்டி என்னைக் காப்பாற்று. பொய்ம்மைகளி னின்றும் மெய்ப் பொருளையும், இருளிலிருந்து ஒளியையும் மரணத்திலிருந்து நித்தியத்தையும், நான் பெற எனக்கு அருள்புரிவாயாக.
4. அன்னையே ! நான் பெரியவன், நான் பிராமணனுகப் பிறந்தவன். அவர்கள் பறையர்கள், தாழ்ந்த குலத்திற் பிறந்தார்கள் என்று என் மனத்திற் தோன் றும் எண்ணத்தை ஒழித்துவிடு. அவர்கள் யார்? நீயே பல உருவங்கள் எடுத்து அங்ஙனம் என்முன் விளங்குகின்ருய். உன்னைத் தவிர அவர்கள் வேறல்லரே.
5. அன்னையே ! ஜகன் மாதாவே ! மனிதரிடமிருந்து நான் மதிப்பை வேண்டேன். சரீர சுகங்கள் விரும்பேன். கங்கை யமுனை இரண்டும் ஒன்று சேர்ந்து விளங்கு வதுபோல் என் ஆத்மா உன்னோடு ஒன்றுபடவேண்டும் என்றுமட்டும் பிரார்த்திக்கிறேன். அன்னுய் ! என்னிடம் பக்தியும் கிடையாது, யோகமும் இல்லை. நான் எளியவன். ஆதரவற்றவன். ஒருவரிடமிருந்தும் நான் புகழ்ச் சியை விரும்புவதுமில்லை. உன் திருவடித் தாமரைகளில் என் மனம் பதிந்திருக்க அருள்புரிவாயாக.

— இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19ஆம், 20ஆம் நூற்றுண்டுகளில் தமிழிசை இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

—சச்சி. ஸ்ரீகாந்தா
உயிரிரசாயனத்துறை, மருத்துவபீடம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்

பதினெட்டாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலிருந்து தொடர்ந்த 150 ஆண்டுக்காலத்தைக் ''கர்னடக இசையின் பொற்காலம்'' எனலாம். சங்கீத மும்மூர்த்திகளான, தியாகராஜ சுவாமிகள் (1767—1847), முத்துச்சுவாமி தீட்சிதர் (1776-1835), சியாமா சாஸ்திரிகள் (1762—1827) ஆகியோர் ஒரே காலத்தில் வாழ்ந்து இசைப்பணி புரிந்தனர். இவர்கள் இயற்றிய இசைப்பாக்கள் கிருதிகள் (சாகித்தியங்கள்) எனப் பெயர்பெற்று சிறந்த பெருமையை அடைந்தன. இக்கிருதிகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து சதவீதம் தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளிலேயே அமைந்தன, இவற்றை இயற்றிய மும்மூர்த்திகளும் 'சாகித்திய கர்த்தாக்கள்' எனப் போற்றப்பட்டனர். குரு - சீட பரம்பரையொன்று உற்பத்தியாயிற்று.

19ஆம் நூற்றுண்டிலே தமிழகத்தில் ஆங்கிலேயரின் ஆட்சி நன்ருகக் காலூன்றிக் கொண்டது. சங்கீத மும்மூர்த்திகள், இந் நூற்றுண்டின் முதல் நாற்பதாண்டுகளிற் (ஏறக்குறைய) சீவித்திருந்தார்கள். இவர்கள் வாயிலிருந்து வெளிவந்த ஆக்கங்கள் யாவும் கிருதிகளாகப் போற்றப்பட்டு, இவர்களின் சீடர்களாலே தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளெல்லாம் பரப்பப்பட்டன. சங்கீத மும்மூர்த்திகளுடன் சுவாதித் திருநாள் மகாராசாவும் (1813—1846) சேர்ந்துகொண்டார். இவரின் இசையாக்கங்கள் பெரும்பாலும் சமஸ்கிருத மொழியிலேயே இருப்பினும், தெலுங்கு, மலையாளம், இந்துஸ்தானி, மகாராஷ்டிரம் ஆகிய மொழிகளிலும் தமிழிலும் சில உருப்படிகளை இயற்றியுள்ளார்.

இப்படியே ஒரு புறத்தே கர்னடக இசையானது 19ஆம் நூற்றுண்டிலே பெரும்பாலும் தெலுங்கு, சமஸ்கிருத மொழிகளிலே பாடப்பட்டு வந்த காலத்தில், இன்னெரு புறத்தே தமிழில் இசைப்பாடல்களைப் பாடத் தகுதிபெற்ற தமிழிசைப் புலவர்களுந் தலை தூக்கினர். இவர்களிலே கவிகுஞ்சர பாரதி, கோபாலகிருஷ்ணபாரதி (1810 - 1896), மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826-1889), சென்னிகுளம் அண்ணுமலை செட்டியார், ஆனை ஐயா, இராமசாமி சிவன், கனம் கிருஷ்ணையர், வேதநாயகம் சாஸ்திரியார், வடலூர் இராமலிங்க அடிகள் போன்ருேர் முக்கியமானவர்கள். இவர்கள் அனைவரினதும் தொண்டு பாராட்டற்குரிய தென்ருலும், குறிப்பாக கோபாலகிருஷ்ண பாரதி, வேதநாயகம்பிள்ளை ஆகியோரின் முயற்சிகள் பாமரர்களுக்கிடையே தமிழிசைப் பாடல்களைப் பரப்புவதில் முக்கிய பங்கை வகித்தன. எப்படித்தான் அரிய சிறப்புக்களுடன் விளங்கினுலும், பொதுமக்களுக்கு விளங்காத மொழியிலே பாடப்படும் பாடல்கள், இதயத்தைத் தொடமாட்டாதவை என்பதை உணர்ந்த இவ்விரு இசைப்புலவர்களும் தமிழிலே இசைப்பாடல்களை இயற்றிப் பரப்புவதில் ஊக்கம் காட்டியுள்ளனர். தெலுங்குக் கீர்த்தனைகளைக் கேட்டுத் தலையாட்டிக் கொண்டிருந்த இசையறிஞர்கள் தமிழ்ப் பாடல்களை எதிர்த்தபோதும், தமிழின் எழுச்சியையே குறிக்கோளாகக் கொண்டிருந்த கோபாலகிருஷ்ண பாரதியும், வேதநாயகரும் இவ்வெதிர்ப்புகளுக்கு அஞ்சவில்லை.

**கோபாலகிருஷ்ண பாரதியார்:**

இவர் இயற்றியுள்ள விடுதிக் கீர்த்தனைகளினதும் கண்ணிகளினதும் எண்ணிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

180க்கு மேற்படும். மேலும் அத்துவைதக் கருத்துக்கள் அடங்கிய கீர்த்தனைகளை இயற்றியதுடன், அன்று அபூர்வராகங்களாக விளங்கிய நாடகப்பிரியாவில், ''சிவலோக மென்கிற'' ஆகிரியில் ''அம்பலவாணனை'', சரசாங்கியில் ''மகாதேவசரணம்'', ஜகன் மோகினியில் ''சிவகாமசுந்தரி'', மாஞ்சியில் ''சஞ்சலப்படவேண்டாம்'' போன்ற பல கீர்த்தனைகளை இயற்றினர்.

தியாகராஜசுவாமிகள் ஐந்து கனராகங்களான, நாட்டை, கௌளை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி போன்றவற்றில் பஞ்சரத்தின கிருதிகளை இயற்றியது போல பாரதியாரும், அவற்றிற்குப் பிரதியாக இந்த ராகங்களில் தமிழ்க் கீர்த்தனங்களை இயற்றினர்.

அவையாவன.—

1. 'ஹரஹரசிவ சங்கர கருணாகர'
— நாட்டை

2. 'சரணாகதியென்று நம்பிவந்தேன்'
— கௌளை

3. 'பிறவாத முத்தியைத் தாரும்'
— ஆரபி

4. 'மறவாமல் எப்படியும் நினைமனமே'
— ஸ்ரீராகம்.

மேலும், தமிழிசையுலகிற்கு தமது முக்கிய பங்களிப்பாக சேக்கிழாரின் பெரிய புராணத்தில் 37 செய்யுட்களில் இடம்பெறும் நந்தனாரின் சரித்திரத்தை, எளியநடைகளில் கீர்த்தனைப் பாடல்களாக ஆக்கித்தந்தார். பாமரர்களை இசையுலகில் ஈடுபடவைத்த இவருடைய 'நந்தனார் சரிதக் கீர்த்தனை' களின் முதல் பதிப்பு 1861 நவம்பரில் வெளியாயிற்று. இப்பாடல்களிலே இடம்பெற்றுள்ள, 'தில்லை வெளியினிலே கலந்துகொண்டாரவர் திரும்பியும் வருவாரோ'', ''பறையா – நீ சிதம்பரமென்று சொல்லப்படுமோடா– போகப்படுமோடா'', ''மீசை நரைச்சுப் போச்சே கிழவா ஆசை நரைக்கலாச்சோ?'' போன்ற வரிகள் இன்றும் இறவா வரம் பெற்று விளங்குகின்றன.

அத்துடன், தமிழிசையைப் பாமரர் மத்தியிலே பரப்புவதற்கும், நலுங்கு, ஊஞ்சல், லாலி, கும்மி முதலிய வகைகளிலும் பாரதியார் இயற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'நலங்கிடவாரும் நீர் நடராசமூர்த்தி' எனும் மத்தியமாவதி ராகத்தில் அமைந்த நலுங்குப் பாட்டு இவற்றில் ஒன்றாகும். இவர் இயற்றிய 'சிதம்பரக் கும்மி' யில் வரும் கண்ணிகள் இன்றும், திஸ்ரகதியில் அமைந்த இசை வடிவத்துக்கு ஓர் இலட்சிய உதாரணமாக விளங்குவது கண்கூடு.

உதாரணத்திற்கு:

'சாந்துப் பொட்டுத் தளதளென்ன—நல்ல
சந்தன வாடை குமுகுமென்ன
கூந்த ழலகுக் காரியெல்லாங் — காலைக்
குவித்துக் கும்மி யடியுங்கடி.

'ஆகாய லிங்கத்தைக் கண்டேனடி—யிங்கே
ஆரு மறியாமல் நின்றேனடி
ஏகாந்த மாக இருந்தேனடி — மன
தேக்கந் தொலைந்தது பாருங்கடி.'

எளிய நடை; செறிந்த கருத்து; மனதைக் கவரும் இசைமெட்டு ஆகியவற்றால் கோபாலகிருஷ்ண பாரதி தமிழிசையை வளர்த்தார்.

இவற்றுடன், சங்கீத மும்மூர்த்திகளைப் போல, ஒரு குரு—சீட பரம்பரையை உருவாக்குவதிலும் பாரதியார் முயன்றது பாராட்டுதற்குரியது. பாரதியாரின் முக்கிய சீடர்களாக சிதம்பரம் பொன்னுச்சாமி தீட்சிதர், சிதம்பரம் ஸ்ரீ ராஜரத்தினதீட்சிதர், மாயூரம் இராமசாமி ஐயர், நடேச ஐயர், சுப்பிரமணிய ஐயர் போன்றோர் விளங்கினர்.

**வேதநாயகம்பிள்ளை:**

19ஆம் நூற்றாண்டிலே தமிழகத்திலே வாழ்ந்த சமூகசீர்திருத்தவாதிகளில் வேதநாயகம்பிள்ளையும் ஒருவர். எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து இறைவனைப் பாடி மகிழும் படியாக, வேதநாயகர் 'சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளை'ப் பாடினர். இவற்றைத் தொகுத்து 1878ஆம் ஆண்டிலே வெளியிட்டார். இந் நூலிலே 192 கீர்த்தனங்கள் உள்ளன. இவை ஐந்து பெரும் பிரிவுகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இக்கீர்த்தனைகளிலே நகைச்சுவையுடன் கலந்த அறிவுரைகள் நிரம்பியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணத்துக்கு ஒரு பகுதி:

''கடவுளைத் துதிப்பது போல்வாய் பாடும்
கண்ணுங் கருத்துங் கண்ட இடமெல்லாம் ஓடும்
திடமாகக் கோவிலுக்குள் தேகம்போய்க் கூடும்
சிந்தனை வெளியே திரிந்துதிண் டாடும்.''

இதனில் அமைந்துள்ள ஏளனம், சொல்லழகு, ஓசைநயம், எதுகைமோனைப் பொருத்தம் போன்றவை போற்றத்தக்கவை.

தான் சார்ந்த கத்தோலிக்க கிறிஸ்தவ சமய மக்களும் பாடிமகிழ்வதற்காக வேதநாயகர் 'சத்திய வேதக் கீர்த்தனைகள்' பாடி 1889ஆம் ஆண்டு வெளியிட்டார். இத்தொகுப்பிலே 53 இசைப்பாடல்கள் அடங்கியுள்ளன. இப்படியாகத் தானும் தமிழிசைப் பாடல்களை இயற்றியதுடன் நில்லாது, தன் சமகாலத்தவரான கோபாலகிருஷ்ண பாரதியைப் போற்றும் ஏந்தலாகவும் வேதநாயகர் விளங்கினார். பாரதியார் பாடிய 'நந்தனார் சரிதக் கீர்த்தனைகளைக்'க் கண்டு அவரின் உறவினர் பாரதியாரை, 'பிராமணப் பறையன்' என்று வைதபோது வேதநாயகரோ,

'படிகொண்ட புகழ்த்திரு நாளைப் போவான்
சரித்திரத்தைப் பாருள்ளோர்கள்
கடிகொண்டு வியந்திடக் கீர்த்தன மாகச்
செய்தளித்தான்—கதிர்சேர் திங்கள்
முடிகொண்டான்—கொடிகொண்டான்—
அடிகண்டான்
மடியண்டான் முடிகொண்டானிற்
குடிகொண்டான் கோபால கிருஷ்ணபா
ரதிநாமக் குணமேலோனே''

எனப் புகழ்ந்தார்.

இருபதாம் நூற்றாண்டானது, தமிழிசை வளர்ச்சிக்கு ஏற்றந் தந்த நூற்றாண்டாக அமைந்தது. கோபாலகிருஷ்ண பாரதி, வேதநாயகம்பிள்ளை போன்ற இசைப்புலவர்களை அடியொட்டி, 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோன்றிய சுப்பிரமணிய பாரதி, கனக சுப்புரெத்தினம் (பாரதிதாசன்), கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை போன்ற தமிழ்ப்புலவர்களின் பாடல்கள் தமிழகத்திலே சுதந்திரப் போராட்டத்திற்கும், சமூக சீர்திருத்தத்திற்கும், தமிழின் எழுச்சிக்கும் சிறந்த கருவிகளாகப் பயன்பட்டன.

இருபதாம் நூற்றாண்டிலே தமிழிசை இயக்கத்தை வளர்த்தோரை நான்கு பிரிவுகளாகப் பாகுபடுத்தி நோக்குதல் சிறந்தது.

1. இசை ஆராய்ச்சியாளர்கள்; ஆபிரகாம் பண்டிதர், கலாயோகி ஆனந்த குமாரசாமி, சுவாமி விபுலானந்தர், மதுரை பொன்னுச்சாமிபிள்ளை போன்றோர்.
2. பத்திரிகாசிரியர்களும் சமூக சீர்திருத்த வாதிகளும்: சுப்பிரமணிய பாரதி, பேராசிரியர் கல்கி, டி. கே. சிதம்பர நாத முதலியார், அறிஞர் அண்ணா போன்றோர்.
3. இசைப் புலவர்களும் இசைக் கலைஞர்களும்: சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன், தி. இலக்குமணபிள்ளை, பெரியசாமி தூரன், கே. பி. சுந்தராம்பாள், தண்டபாணி தேசிகர், சிதம்பரம் எஸ். ஜெயராமன் போன்றோர்.
4. இசைஆர்வம்மிக்க புரவலர்கள்: ராஜா அண்ணாமலை செட்டியார் போன்றோர்.

இனி, ஒவ்வொரு பிரிவினரது பங்களிப்பையும் சற்று விரிவாக நோக்குவோம்.

## 1. இசை ஆராய்ச்சியாளர்கள்

**ஆபிரகாம் பண்டிதர்:** தஞ்சையிலே இசைத்தமிழ்ச் சங்கத்திற்கு அடிப்படையிட்டவர் இவராவர். 1916ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலே, தஞ்சாவூரிலே இசை மகாநாடு நடைபெற்றபோது, இம் மாநாட்டிலே தமிழிசை பற்றிய ஐயப்பாடுகளையும், வழக்கில் இல்லாத பண்களையும், இசைப்பாடல்களையும் பண்டிதர், தமது புதல்விகளான மரகதவல்லி, கனகவல்லி ஆகியோரின் துணையோடு பாடியும், வீணையிலே வாசித்துக்காட்டியும் மெய்ப்பித்தார்.

1917ஆம் ஆண்டிலே, தமிழிசைக் களஞ்சியம் போல விளங்கும் ''கருணாமிர்த சாகரம்'' என்னும் ஆய்வுநூலை ஆபிரகாம் பண்டிதர் வெளியிட்டார். இசைப் பேரிலக்கியமாக விளங்கும் இந்நூலின் முதற்பாகம் 1300 பக்கங்களையும் இரண்டாம் பாகம் 352 பக்கங்களையும் கொண்டது. இவ்வரிய நூலானது $11\frac{1}{2}$ அங்குல நீளமும் 9 அங்குல அகல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் உடையதாக அமைந்துள்ளது. இசைத் தமிழில் உள்ள நுண்ணிய கருத்துக்களையும் பெருமைகளையும் இந்நூல் விவரிக்கின்றது.

**கலாயோகி ஆனந்தகுமாரசாமி:**

பல்துறை அறிஞரான இவர், இந்திய இசையில் ஆய்வு செய்தது தமிழிசைக்குச் சாதகமாகவே அமைந்தது எனலாம். ஆந்திர நாட்டிலுள்ள அமராவதி அருகில் உள்ள கோலி எனும் இடத்திலே சில சிற்ப உருவங்கள் தீட்டப்பட்டுள்ளதையும், இவற்றிலே சில யாழ் உருவங்களும் யாழ் வாசிக்கும் பெண்களின் சிற்பங்களும் அடங்கியிருப்பதையும் ஆராய்ந்த ஆனந்தகுமாரசாமி, தமிழ்நாட்டின் பழமையான இசை மரபை முதன்முதலாக உலகிற்கு எடுத்துக்காட்டினார். இதனைப்பற்றி, 1931ஆம் ஆண்டிலே "இந்தியாவின் பழைய வீணை" எனுந் தலைப்பிலே அரிய ஆய்வுரையை ஆனந்த குமாரசாமி எழுதினார். இதனை, விபுலானந்த அடிகளே வியந்து தம் "யாழ்நூலிற்" பாராட்டியுள்ளார். எனவே, யாழ் பற்றிய ஆராய்ச்சிக்கு முதன்முதலில் அத்திவாரமிட்டவர் ஆனந்த குமாரசாமி எனில் மிகையாகாது.

**மதுரை பொன்னுச்சாமி பிள்ளை:**

இவர், மைசூர் சமஸ்தான வித்துவானாக இருந்த நாதசுர வித்துவானவர். 'தில்லானா மோகனாம்பாள்' திரைப்படப்புகழ் மதுரை சேதுராமன் பொன்னுச்சாமி சகோதரர்களின் தாத்தா எனில், பலருக்கு விளங்கும். இவ்வாராய்ச்சியாளர் 1931ஆம் ஆண்டிலே, "பூர்வீக சங்கீத உண்மை" எனும் ஆய்வு நூலை வெளியிட்டார். கடந்த 250 ஆண்டுகளுக்கு மேலாக கர்னாடக இசையில் வழக்கிலிருந்துவரும் வேங்கடமகியினுடைய 72 மேளகர்த்தா முறையை எதிர்த்து, பல்வேறு ஆதார விளக்கங்களுடன், ஆதியில் வழக்கிலிருந்து வந்த 32 மேளகர்த்தா முறை பற்றி இந்நூலில் விளக்கியுள்ளார் பொன்னுச்சாமி பிள்ளையவர்கள்.

"சுமார் 200 வருஷ காலமாய் மயக்கத்திலிருந்து வருவதும் சீர் நேர்மையுடையதல்லாததும், கலப்புற்றதுமான சங்கீதத்தை விலக்கி, கலப்பற்றதும் பூர்வீக உண்மையானதும், அனுபவத்திலுள்ளதுமான இந்து சங்கீத உண்மைச் சித்தாந்தத்தை விளக்கவே இந்நூலை எழுதி வெளியிடலானேன்" என பொன்னுச்சாமிப்பிள்ளை தமது முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். இவருடைய ஆய்வு நூலுக்கு, காரைக்குடிச் சகோதரர்கள் (வீணை சுப்பராமையர், வீணை சாம்பசிவ ஐயர்), சோமசுந்தர பாரதி, ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், கரூர்பிடில் சின்னசாமி ஐயர், திருநெல்வேலி பிடில் சாமளய்யர், நாதசுர வித்துவான் கொரநாடு நடேசபிள்ளை, இலுப்பூர் பொன்னுச்சாமி பிள்ளை, திருச்சி பிடில் தி. கோவிந்தசாமி பிள்ளை, கல்லிடைக்குறிச்சி வேதாந்தமய்யர், புல்லாங்குழல் வித்துவான் பல்லடம் சஞ்சீவி ராவ், நாதசுரவித்துவான் திருப்பாம்புரம் நடராஜசுந்தரம்பிள்ளை போன்ற பல பிரபல இசைவல்லுநர்கள் மதிப்புரை வழங்கியிருப்பது, இந்நூலினுடைய ஆதாரக் கருத்தை இவர்கள் ஏற்றுள்ளனர் என்பதை இசையுலகிற்கு எடுத்துக்காட்டிற்று.

**விபுலானந்த அடிகள்:**

தமிழிசை பற்றிய ஆராய்ச்சிக்கு விபுலானந்த அடிகள் எழுதிய 'யாழ் நூல்' பெருமளவு சிறப்பைப் பெற்றுக் கொடுத்தது என்பதில் ஒருவருக்கும் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. தமது நூலின் பாயிரவியலிலே, அடிகளார் 'யாழ் நூலின்' தோற்றத்தைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

"அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே தமிழ்ப்பகுதித் தலைவராகவிருந்தகாலத்திலே, இசைப்பகுதிக் கல்விமுறையினையும் மேற்பார்வையிடும் கடமை ஏற்பட்டது. அக்காலத்திலே தஞ்சைத் திருவாளர் க. பொன்னையா பிள்ளையவர்களிடம் கர்னாடகசங்கீதமென இந்நாளில் வழங்கும் இசையினது அமைப்பினை ஓரளவிற்கு அறிந்துகொண்டு இவ்வாராய்ச்சியினைத் தொடங்கினேன்.

"1936ஆம் ஆண்டு மாசித் திங்களிலே, பழந்தமிழரின் இசை, சிற்பம், கலையறிவு என்னும் பொருள் பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆதரவிலே ஆறு விரிவுரை செய்தேன். அவ்விரிவுரைகள் பல்கலைக்கழகத்துப் பட்டி மண்டபத்திலே (Senate House)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில மொழியில் நிகழ்ந்தன. பிறமொழியாளர்களும் பலர் வந்து கேட்டார்கள். எல்லா விரிவுரைகளும் 'இந்து' (The Hindu) என்னும் ஆங்கில பத்திரிகையிலே வெளிவந்தன. அவற்றைக் கண்ட அறிஞர் பலர் ஆங்கிலத்திலே நூலுருவாக்கித் தரும்படி என்னைக் கேட்டார்கள்.

''ஐயிரண்டு ஆண்டுகளாக நேரங்கிடைக்கும் போதெல்லாம் முயன்று, குருவருளினுலும், தமிழ்த் தெய்வத்தின் கடைக்கண் நோக்கினுலும் இவ்வாராய்ச்சி நூலினை ஒருவாறு எழுதி முடித்தேன். யாழ்க் கருவியொழிந்த பிற இசைக்கருவிகளைக் குறித்தும், இசையிலக்கணம், இசைப்பாட்டிலக்கணம், இசைக்கலைவளர்ச்சி யென்னும் பொருள்களைக் குறித்தும் ஆராய்ந்து கண்ட முடிபுகள் சில கையிலுள்ளன; காண வேண்டியன இன்னும் பலவுள. இறைவன் திருவருள் பாலிப்பானுயின், ஏற்ற காலத்திலே அம்முடிபுகள் மற்றொரு நூலுருவாக வெளிவருதல் கூடும்......''

1947ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 5ஆம் நாள், தமிழகத்திலே 'யாழ் நூல்' அரங்கேற்றம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. இதற்கு முதல் நாளிலே, அடிகளார் தமது ஆராய்ச்சியின் துணை கொண்டு செய்த யாழ்கள், சுருதி வீணை, பாரிசாத வீணை, சதுர்த்தண்டி வீணை ஆகிய இசைக்கருவிகளுடன் அடிகளாரைக் குதூகலமான முறையிலே தமிழன்பர்கள் ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவித்தார்கள். ஆனுல் அந்தோ பரிதாபம், 'யாழ் நூல்' அரங்கேற்றத்தின் போதே சிறிது நோய்வாய்ப் பட்டிருந்த அடிகளார், ஏறக்குறைய ஆறு கிழமைகள் கழிந்து ஜூலை மாதம் 19ஆம் நாளன்று, தமது 55ஆவது வயதிலே அமரரானுர். எனவே, அவர் தமது நூலின் பாயிரவியலில் குறிப்பிட்டிருந்தபடி, பிற இசைக்கருவிகளைக் குறித்தும், ஏனைய தலைப்புக்களிலும் கண்ட முடிபுகளைத் தமிழுலகிற்கு அவரால் வழங்க முடியாமல் போய்விட்டது.

ஏனைய இசை ஆராய்ச்சியாளர்கள்: விபுலானந்த அடிகளாரின் அடியொட்டி ஆபிரகாம் பண்டிதரின் மகனுன வரகுண பாண்டியன், பேரனுன தன பாண்டியன், மற்றும் சங்கீத பூஷணம் எஸ். இராமநாதன், குடந்தை ப. சுந்தரேசன், இராவ்சாகேப் கு. கோதண்டபாணி பிள்ளை போன்றோர் இசையாராய்ச்சியைத் தொடர்ந்தனர்; தொடர்கின்றனர். இதன் விளைவாக,

1. ''பாணர் கைவழி'' (வரகுணபாண்டியன் எழுதியது, 1950)
2. ''முதல் ஐந்திசைப் பண்கள்'' (குடந்தை சுந்தரேசன் எழுதியது; 1956)
3. ''பழந்தமிழ் இசை'' (கோதண்டபாணி பிள்ளை எழுதியது; 1959)
4. ''சிலப்பதிகாரத்து இசைநுணுக்க விளக்கம் (எஸ். இராமநாதன் எழுதியது; 1956)

ஆகிய ஆய்வு நூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன. சங்கீத கலாநிதி எஸ். இராமநாதன் தனது ஆய்வுநூலை ''Music in Cilappatikaaram'' ''எனுந் தலைப்பில் ஆங்கிலத்தில் எழுதி அமெரிக்காவிலுள்ள வெஸ்லியன் பல்கலைக்கழகத்திலே கலாநிதி பட்டத்தைப் பெற்றுள்ளார்.

## 2. பத்திரிகாசிரியர்களும் சமூக சீர்திருத்த வாதிகளும்

தமிழிசை இருபதாம் நூற்றுண்டிலே பாமர மக்களிடையே பரவுவதற்கு ஊன்றுகோலாக விளங்கியவர்கள் பத்திரிகாசிரியர்களும் சமூகசீர்திருத்தவாதிகளுமே. இவர்களுடைய ஆதாரங்களுடன் கூடிய கருத்துக்களும், பிரசாரமும் தெலுங்கு மொழி இசையை நாடியோருக்கும் அதனைப் புகழ்ந்தோருக்கும் நாராசமாக விருந்தன. அக் காலத்திலே, இக் கூட்டத்தோரின் கை ஓங்கியிருந்தது; இவர்கள், ''இசைக்கு மொழி அவசியமா?'' என ஏளனஞ் செய்தனர்; ''தமிழில் இசைப்பாடல்கள் உண்டா?'' எனத் தட்டிக்கேட்டனர். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும், பட்டி தொட்டிகளிலும் வாதப் பிரதிவாதங்கள் தோன்றின. தமிழிசைக்குச் சார்பாக வாதிட முன்வந்தவர்களிலே சுப்பிரமணியபாரதி, பேராசியர் கல்கி, டி. கே. சிதம்பரநாத முதலியார் (டி. கே சி.), சி. என். அண்ணுதுரை (அண்ணு) ஆகியோர் முக்கியமானவர்கள் இவர்கள் அழகு தமிழிலே ஆதார பூர்வமாக ஆராய்ந்து எழுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். மேடைகளிலும், கருத்தரங்குகளிலும், பட்டிமன்றங்களிலும் முழங்கினர். இவர்கள் எழுப்பிய கருத்துகள், தமிழ்நாட்டின் அப்போதைய இளஞ் சந்ததியினரிடையே பிரபலமாகி, வலுத்த ஆதரவைப் பெற்றன.

### 3. இசைப்புலவர்களும் இசைக்கலைஞர்களும்

இசைப்பாடல்களை இயற்றுவோர் இசைப் புலவர்கள் (வாக்கேயகாரர்கள்) எனப்படுவர். இப்பாடல்களை கச்சேரி மேடைகள், வானொலி மேடைகள், இசைத்தட்டுகள் ஆகியவற்றிலே பாடி, பொதுமக்களிடையே அவற்றைப் பிரபல்யத்திற்குக் கொண்டு வருபவர்கள் இசைக்கலைஞர்கள் ஆவர். தமிழிசை இயக்கத்திற்காக இவ்விரு பிரிவினரும் ஒன்று சேர்ந்து இயங்கியதால் ஏராளமான தமிழ்ப்பாடல்கள் மக்கள் மத்தியில் பிரபலமாகின. உதாரணத்திற்கு, சுத்தானந்த பாரதி இயற்றிய ''இல்லை யென்பான் யாரடா? தில்லையில் போய்ப் பாரடா'' எனும் மோகனராகக் கீர்த்தனையை எம் எம். தண்டபாணி தேசிகர் தமிழ் மணம் கமழ உருக்கத்துடன் பாடினர். இது போலவே, சுத்தானந்த பாரதியாரின் ''எப்படிப் பாடினரோ?,, எனும் கர்நாடக தேவகாந்தாரி ராகப் பாடல்கள் டி.கே. பட்டம்மாள் மூலம் பொதுமக்களிடையே பிரபலமாயிற்று. அத்துடன் சுத்தானந்த பாரதியாரின், ''கண்ணெடுத்தாகிலும் காணீரோ'' (சிம்மேந்திரமத்யமராகம்) பாடலை என்.சி. வசந்த கோகிலமும், ''காரணம் கேட்டு வாடி சகியே'' (பூர்விகல்யாணி ராகம்) பாடலை எம். எல். வசந்தகுமாரியும் இசைத்தட்டுக்கள் மூலம் பிரபலப்படுத்தியுள்ளனர். ''சகல கலாவாணியே'' (கேதார ராகம்), ''தூக்கிய திருவடி'' (சங்கராபரண ராகம்), ''ஆனந்த நடனம் ஆடினர்'' (காம்போதி ராகம்) போன்ற சுத்தானந்த பாரதியின் பாடல்களும் பிரபலமடைந்தன,

இதே போல பாபநாசம் சிவன் இயற்றிய ''காணக்கண் கோடி வேண்டும்'' (காம்போதி ராகம்), ''கா வா வா கந்தா வாவா'' (வராளி ராகம்), ''கபாலி'' (மோகன ராகம்) போன்ற பாடல்களை மதுரை மணி ஐயர் இசைத்துப் பிரபலப்படுத்தினர்.

தமிழிசை இயக்கத்திற்காகத் தீவிரமாகப் பாடுபட்ட இசைக்கலைஞர்களில் எம். எம். தண்டபாணி தேசிகரும், சிதம்பரம் ஜெயராமனும் குறிப்பிடத் தகுந்தவர்களாவர்.

**எம். எம். தண்டபாணி தேசிகர் :**

*1930—1940* காலகட்டத்திலே 'பட்டினத்தார்', 'வல்லாள மகாராஜா', 'மாணிக்கவாசகர்', 'தாயுமானவர்', 'நந்தனர்', 'திருமழிசை ஆழ்வார்', 'ஏகம்பவாணன்' ஆகிய திரைப்படங்களிலே தண்டபாணி தேசிகர் கதாநாயகனை நடித்து, பல பக்திப் பாடல்களை இனிய தமிழிலே பாடினர்; இதனல் எல்லையில்லாத புகழையும் பெற்றார். 'நந்தனர்' திரைப்படத்திலே கோபால கிருஷ்ண பாரதியின் இசைப்பாடல்களைப் பாடி அவற்றுக்கு மெருகூட்டிய பெருமையும் தேசிகரையே சாரும். 1943ஆம் ஆண்டு தமிழிசை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முக்கிய தளபதியாக அமைந்து, தான் பங்குபற்றும் இசைக்கச்சேரிகளில் தனித் தமிழ்ப் பாடல்களை மட்டுமே பாடி தமிழிசையை வளர்த்தவர் தேசிகர்.

**சிதம்பரம் ஜெயராமன் :**

ஜெயராமனும் 1935—1940 காலகட்டத்திலே 'கிருஷ்ணலீலா', 'நல்லதங்காள்', 'துருவன்', 'லீலாவதி சுலோசன' ஆகிய திரைப்படங்களிலே நடித்தவர். அறிஞர் அண்ணவின் திராவிட இயக்கத்தின் பால் தீவிரமாக ஈடுபாடு கொண்டவர். 1967ஆம் ஆண்டிலே 'என் பயணம்' என இவர் எழுதிய சுயசரிதைக் குறிப்பிலே, தமிழிசை இயக்கத்திலே தனக்கிருந்த தீவிர உத்வேகத்தைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

''.....1942ஆம் ஆண்டு; என் நண்பர் ஹார்மோனியஸ்ட் எஸ். வி. வாசுதேவ நாயர் அவர்கள் வந்து என்னை தனக்கு நிதி தேவைக்காக குன்னூரில் நடித்துதர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டதன் பேரில் நடித்தேன். 1942இல் அன்று நான் பாடிய பாடலால் அரஸ்ட் செய்யப்பட்டு பொலீஸ் காவலில் ஒருநாள் முழுவதும் இருந்தோம். காரணம் நானும் வாசுதேவநாயரும் 'வெள்ளையனே வெளியேறு' என்ற பாடலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடியதற்காகக் கைது செய்யப்பட்டோம். விடுதலையானவுடன் எனது நண்பர் வாசுதேவ நாயர் எனக்கு அதிகமான போதனை செய்தார். 'தமிழிசைக் கச்சேரியாக இல்லாமல் தெலுங்குக் கீர்த்தனைகளையும் சேர்த்துப் பாடினால் நாட்டில் வேறு ஒருவருக்குமே இடம் பெறமுடியாது. ஆதலால் விட்டுக்கொடுத்துக் கச்சேரி செய்தால் என்ன?' என்றார். அதற்கு நான், 'தமிழோடு கலந்து தமிழ் மண்ணிலேயே மறைந்தால் அதுதான் என் லட்சியம் நிறைவேறிய ஒன்றாகும். அதுதான் எனது ஆசை' என்றேன். 'வருமானம் குறைந்துவிடுமே' என்றார். நன்றாகச் சிந்தித்து விட்டு 'வீரமரணம் அடைவீர்கள்' என்றார். 'அதுதான் எனது ஆசை' என்றேன். அதன் பின்னர் 1944இல் குடந்தையில் முதல் தமிழ் இசைப் போட்டியில் பாடினேன். அன்றைய 'கல்கி' ஆசிரியர் அவர்களால் எழுதப்பட்ட 'கல்கி'யில் படித்தால் விவரம் தெளிவாகும்.

''......1944இல் இன்றைய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று காஞ்சியில் நடைபெற்ற திரு. பொன்னப்பா அவர்களின் தமிழிசை விழாவில் எனது இசையினைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்து பலரிடமும் என்னைப்பற்றிக் கூட்டத்திற்குப் போகும் இடங்களிளெல்லாம் எனது இசைத்திறனைச் சொல்லி வந்தார்கள். அதேபோல் திரு. கே. ஆர். இராமசாமி அவர்களும் இன்றைய முதலமைச்சர் அவர்களும் ஈ. வி. கே. சம்பத்துடன் மற்றும் பலரும் சிதம்பரத்திற்கு எனது இல்லத்திற்கு வந்திருந்து மறைந்துவிட்ட கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பாடல்களை இசைத்தட்டின் மூலம் மக்களுக்கு அறிமுகம் செய்விக்க வேண்டுமெனக் கோரினர்.''

''....1945இல் சென்னை தமிழ் இசைச் சங்கத்திற்கு உயர்திரு ராஜா முத்தையா செட்டியார் அவர்களுக்குக் கண்டனக் கடிதம் எழுதினேன். விபரம்: 'போலித் தமிழ் இசைக்குப் பணம் செலவிட்டு அவர்களை வளரும்படி செய்யக்கூடாது. 'தமிழ் இசைச் சங்கம்' என்று பெயர் வைத்துக்கொண்டு சகல மொழிப் பாடல்களையும் பாட அனுமதிக்கக் கூடாது. இசைச் சங்கம் என்று பெயர் வைத்துக்கொண்டு எந்த மொழிப் பாடலாக இருந்தாலும் பாடச் செய்யுங்கள். அதனை யாரும் எதுவும் சொல்லமுடியாது. இன்று வரையிலும் அந்த நிலை மாறவில்லை. அத்தோடு என்னையும் அவர்கள் பாட அழைப்பதில்லை.

''.....எத்தனையோ இடர்களின் மத்தியில் எதிர்நீச்சலுடன் செயலாற்றிக் கொண்டே இருப்பவன் யான் என்பதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறேன். தமிழிசைக்கும் தமிழுக்கும் எத்தனையோ திட்டங்களைத் தீட்டி வைத்துள்ளேன். வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் புகுத்திக்கொண்டே இருப்பேன். அதுதான் என் மகிழ்ச்சிக்குரிய லட்சியம்.''

இசைக்கலைஞர்களிலே சிதம்பரம் ஜெயராமனுடைய குரல்வளம் ஓர் அசாதாரண கவர்ச்சி மிகுந்தது என்பது யாவரும் அறிந்ததே. கணீரென்று ஒலிக்கும் வெண்கல ஓசைபோன்ற சாரீரத்தைக் கொண்ட ஜெயராமனின் பாடல்கள் என்று கேட்பினும் கிறுங்கவைக்கும் தன்மை வாய்ந்ததாக அமைந்தது. தமிழிசையின் வளர்ச்சிச்குப் பெரிதும் துணை புரிந்தது. 1945 முதல் 1960 வரையுள்ள காலகட்டத்திலே தமிழ்த்திரைப் படப் பின்னணிப் பாடகர்களில் முன்னணிக் கலைஞராக விளங்கிய இவர், இதன்பின்னர் திரைப்படங்களில் மெல்லிசை, டப்பா இசை, மேற்கத்திய இசை ஆகியவற்றின் தாக்கம் அதிகரித்த பின்னர் ஒதுங்கிவிட்டார்.

## 4. இசை ஆர்வமிக்க புரவலர்கள்

இசைப் புலவர்கள், இசைக் கலைஞர்கள் ஆகியோரை ஊக்குவிப்பதற்குப் போதிய நிதி வசதி படைத்த புரவலர்களின் ஆதரவு தேவைப்பட்டதில் வியப்பேதுமில்லை. தமிழிசை வளர்ச்சிக்காக இருபதாம் நூற்றாண்டில் இப்படியாக அரும்பணியாற்றியவர் அண்ணாமலைச் செட்டியார். அவர்கள் தமிழிசையை இளஞ் சந்ததியாரிடையே வளர்ப்பதற்காக அண்ணாமலை இசைக் கல்லூரியை நிறுவிய பெருமை இவரையே சாரும். அத்துடன், தமது பார்ப்பன நண்பர்களின் பகையையும் பொருட்படுத்தாது இப் பெரியார் 1943ஆம் ஆண்டு மே மாதத்திலே தமிழிசைச் சங்கத்தை நிறுவினர். தமிழிசையை வளர்க்க பண் ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிசைச் சங்கத்தின் ஆதரவிலே முதலாவது தமிழிசை மகாநாடு 1943ஆம் ஆண்டு இறுதியில் பன்னிரண்டு நாட்கள் நடைபெற்றது. இப் பன்னிரண்டு நாட்களில் நடந்த 14 இசைக் கச்சேரிகளிலே, எம். எஸ். சுப்புலட்சுமி, டி. கே. பட்டம்மாள், என். சி. வசந்தகோகிலம், கே. பி. சுந்தராம்பாள், மதுரை மணிஐயர், ஜி. என். பாலசுப்பிரமணியம், எம். எம். தண்டபாணிதேசிகர், எம். கே. தியாகராஜ பாகவதர் ஆகிய எட்டு முன்னணி இசைக் கலைஞர்கள் தமிழிசை மழை பொழிந்தனர். இம் மகாநாட்டிலே இராஜாஜி, ராஜா அண்ணாமலைச் செட்டியார், டாக்டர் சண்முகம் செட்டியார், அறிஞர் அண்ணா, பம்மல் சம்பந்த முதலியார், பேராசிரியர் கல்கி ஆகிய அறிஞர்கள் எழுச்சி உரைகளை நிகழ்த்தினர்

ஐந்தாண்டுகளில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து 20 தமிழிசை நூல்கள் வெளி வந்தன. இதற்கு நிதியுதவி வழங்கியவர் அண்ணாமலைச் செட்டியாரே. இப்புரவலரின் கொடைத் திறம்பற்றி, இசைப் புலவர் சுத்தானந்த பாரதி கூறியுள்ளதாவது,

'' ...... என் இசைப் பாடல்களுக்கு அந்த வள்ளல் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். நான் யாரையும் பொருள் இரப்பதில்லை. ஆயினும் ராஜா ஸார் வலுவில் எனது இசை நூல்கள் அச்சேறவேண்டிய பொருட் செறிப்பைத் தந்தார். அந்தப் பொருளாலேதான் சிதம்பர கீதம், தேவகானம் முதலிய பல நூல்கள் வெளிவந்தன. இன்று கீர்த்தனாஞ்ஜலி, நவரஸ நடனாஞ்ஜலி, கவிக்கனவுகள், புதுயுகப் பாட்டு, குழைந்தைப் பாட்டு, நடனப்பாட்டு, இராகமாலிகை முதலிய பாடல்கள் வெளிவந்து தமிழகத்தில் உலாவுகின்றன.''

இப்புரவலர் 1948ஆம் ஆண்டு ஜூன் 15ஆந் திகதி மறைந்தார்.

## தகவல் உதவு நூல், சஞ்சிகை, மலர்பற்றிய பட்டியல்


1. அண்ணாதுரை, சி. என். — தமிழரின் மறுமலர்ச்சி, முத்தமிழ்நிலையம், சென்னை, 1975. பதின்மூன்றும் பதிப்பு.
2. ஆபிரகாம் பண்டிதர் — கருணாமிர்த சாகரம், 1917.
3. கல்கி — ஆனந்தவிகடன், டிசம்பர் 12, 1933.
4. கோதண்டபாணிபிள்ளை, கு. — பழந்தமிழ் இசை, கழக வெளியீடு, 1959.
5. சண்முக சுந்தரம், வித்வான் வ. — டி. கே. சி. வரலாறு, ஸ்டார் பிரசுரம், சென்னை, 1959. (2ஆம் பதிப்பு)
6. சந்திரசேகரன், கி. — மாமுனிவர் ஆனந்தகுமாரசுவாமி, தீபம், ஏப்பிரல், 1976.
7. சுந்தரேசன், குடந்தை ப. — முதல் ஐந்திசைப் பண்கள். பாரிநிலையம்' சென்னை, 1956.
8. சேசையா, மா. — நீதிபதி வேதநாயகர். வீரமாமுனிவர் கழக வெளியீடு, 15, திண்டுக்கல், 1966.
9. பாரதியார் (அமரகவி) — கலைகள், ஸ்ரீமகள் கம்பனி, சென்னை, 1958.
10. விபுலானந்த அடிகள் — யாழ்நூல், கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடு, 1947.
11. பொன்னுச்சாமிப்பிள்ளை, மதுரை, எம். கே. எம். — பூர்வீக சங்கீத உண்மை, மதுரை, 1930.
12. ஸ்ரீகாந்தா, ச. — தமிழிசைத்தீபம் பகுதி 1. பருத்தித்துறை, 1977
13. ஜெயராமன், சிதம்பரம் எஸ். — 'நீதி' நாடக அரங்கேற்று விழா. தஞ்சை கவின்கலைக் குழுவினர் அளிக்கும் கலைவிழா மலர், 1967.
14. தமிழ் இசை மலர்: — செட்டி நாடு ராஜா சார் அண்ணாமலைச் செட்டியார் நினைவு வெளியீடு, தமிழிசைச் சங்கம், சென்னை, 1948.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியின் ஆலய தரிசனம்

திருமதி கலையரசி சின்னையா

ஆலயத்தின் முக்கியத்துவத்தினையும் நாட்டினது ஊரினது சிறப்புக்கு முக்கிய அம்சமாக ஆலயம் அமைவதனையும் விளக்கும் வகையில் "கோவிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என ஔவையார் கூறினார். திருநாவுக்கரசரும்,

"திருக்கோவி லில்லாத திருவி லூரும்
திருவெண்ணீ றணியாத திருவி லூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிக ளில்லா வூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்
அருப்போடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே."

என்ற பாடலில் ஆலயம் இல்லாத ஊரை அடவி-காடு என்றே கூறுகிறார். இவ்விதம் நாட்டின் சிறப்பிற்குக் காரணமாகக் கூறப்படும் ஆலயம் இறைவனை வழிபடுவதற்குரிய இறைவனை நினைவூட்டுவதற்கேற்ற இடமாகவே சமயப்பெரியார்களாற் போற்றப்பட்டுள்ளது. சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம்,

"செம்மலர் நோன்றாள் சேரலொட்டா
அம்மலங் கழீஇ அன்பொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

எனச் சிவனடியார்களையும் சிவாலயத்தையும் சிவனெனவே வழிபட வேண்டுமென்கிறது. மக்கள் கோயில்களிற் சென்று இறைவனை வழிபட வேண்டுமென்று திருமூலர் பின்வரும் பாடலில் அறிவுறுத்துகிறார்.

"நாடும் நகரமும் நற்றிருக் கோவிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே"

இவற்றைவிட தேவர்களும், யானை சிங்கம் புலி, குதிரை, கருடன், சிலந்தி முதலான அஃறிணைப் பிறவிகள் பலவும் இறைவனை ஆலயங்களில் வழிபட்டு முத்தியடைந்தன எனப் பல புராணங்கள் எடுத்துக் கூறியுள்ளன. இத்தகைய காரணங்களினால் மக்களின் சமய வாழ்க்கையில் ஆலயங்கள் முக்கிய இடத்தினைப் பெற்று இன்று பல்கிப் பெருகியுள்ளன. சிலப்பதிகாரத்தில் சிவன், முருகன், திருமால் முதலான தெய்வங்களின் கோயில்களைப் பற்றிய குறிப்புண்டு. அதனைத் தொடர்ந்து பல்லவர் சோழர் ஆட்சிக்காலங்களில் கோயில்கள் பெருந்தொகையாக எழுந்ததுடன் மக்களின் சமய வாழ்க்கையில் ஆலயம் அமைத்தல், ஆலயத்தில் நந்தவனம் அமைத்தல், விளக்கெடுத்தல், விழாக்கொண்டாடுதல் என்பன புண்ணியத்தைத் தரும் பணிகளாகப் போற்றப்படும் நிலையுமேற்பட்டது. இவ்வகையில் இறைவனை வழிபடுதற்கு ஏற்ற இடமாக, புண்ணியபணிகளைச் செய்யுமிடமாக வளர்ச்சி பெற்ற ஆலயம் பற்றி நவயுகக் கவிஞனை பாரதி எத்தகைய கருத்துக்களைக் கொண்டிருந்தான் என்பதனை இங்கு நோக்குவோம்.

நாட்டின் முக்கிய செல்வங்களுள் ஒன்றாக, நாட்டிற்குச் சிறப்பினை நல்கும் ஒன்றாக ஆலயம் அமைகின்றது. என்ற கருத்தினைப் பாரதி ஏற்றுப் போற்றியுள்ளான் என்பது அவன் பாடல்களிலே தெளிவாகப் புலப்படுகின்றது. பாரத தேசத்தைப் போற்றிப் பாடுமிடத்து "பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம். எங்கள் பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்" எனக் கூறுவதும், வேள்விப் பாட்டில்,

"..............................................
பொன்னவிர் கோயில்களும்—எங்கள்
பொற்புடை மாதரும் மதலையரும்
அன்னநல் லணிவயல்கள்—எங்கள்
ஆடுமாடுகள் குதிரைகளும்
இன்னவை சாத்திடவே—அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம்."

எனச் சக்தியிடம் கோயிலைக் காக்க அருள் வேண்டுவதும், "நாட்டு வணக்கம்" செய்யுமிடத்து "துங்கமுயர்ந்து வளர்கெனக் கோயில்கள் சூழ்ந்தது மிந்நாடே" எனப் பெருமிதத்துடன் பாடுவதும் பாரதி ஆலயத்திற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குக் கொடுத்த முக்கியத்துவத்தினைக் காட்டு கின்றன. மேலும் ஆலயங்களை அமைத்தல் புண்ணியமான பணி என்ற கருத்தினையும் பாரதி வெளிப்படுத்தியுள்ளான்.

“இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்”

எனக் கூறும்போது ஆலயம் அமைத்தலை யும் பாரதி புண்ணியமான பணியாகவே கருதியுள்ளான். அதனாலேதான் “விநாயகர் நான்மணிமாலை”யில் “நின்னலியன்ற துணைபுரிவாயேல் பொன்னா லுனக்கொரு கோயில் புனைவேன்” எனக் கூறினான்.

ஆலயங்கள் நாட்டின் சிறப்பிற்கு இன்றி யமையாதன, ஆலயங்கள் அமைத்தல் புண்ணியமான பணி என்பனவற்றை முன் னோர் வழி நின்று போற்றிய பாரதி ஆலயங்கள் எதற்காக அமைக்கப்பட்டன? அவை எதனை அறிவுறுத்துகின்றன? என்பன பற்றியும் சில கருத்துக்களைக் கூறியுள்ளார்.

உருவவழிபாட்டின் முக்கியத்துவத்தி னால் தோற்றம் பெற்ற ஆலயங்கள் பற்றி விளக்கமளித்தோர் பல்வேறு நிலைகளில் நின்று விளக்கம் தந்துள்ளனர். “பசுவினுடைய உடம்பெங்கணும் பரந்தோடும் குருதி பக் குவமடைந்து பாலாகப் பரிணமிக்கும் பொழுது அதை வெளியேற்ற முலைகள் அமைந்து விளங்குவதைப் போல், உலகெங் கணும் பரந்து விளங்கும் பரமன் ஆன்ம ஈடேற்றங் கருதிக் கருணை மேலீட்டினால் உருவந்தாங்கி எழுந்தருளியிருக்கும் இடம் கோயில்” எனச் சிலர் விளக்கம் கூறியுள் ளனர். “தேவாலயமாவது எங்கும் வியாப கராய் மறைந்திருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளியிருக்கும் இட மாம்” என்பது நாவலரது விளக்கம்.

இவ்வாறு,

“தாபர சங்கமங்கள்
என்றிரண்டு ருவில் நின்று
மாபரன் பூசை கொண்டு
மன்னுயிர்க் கருளை வைப்பன்.”

என்ற சிவஞானசித்தியார் கருத்தைத் தழுவி, “இறைவன் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அவர்களுக்கு அருள் புரிவதற்கு எழுந்தருளி யுள்ள இடமே ஆலயம்” என்ற பொதுக் கருத்தையே பலரும் பலவாறு விளக்கியுள் ளனர். இப்படியான ஒரு பின்னணியில் வைத்துப் பார்க்குமிடத்து, பாரதி ஆலயம் பற்றித் தரும் விளக்கங்கள் புதுமையான வையாக வேறுபட்டு அமைவதைக் காண லாம்.

பாரதி நாட்டின் விடுதலையை விரும்பிய அதேசமயத்தில் நாட்டின்—சமூகத்தின் ஒற் றுமையையும் அவாவியவன். அதனாலேதான் “ஆனந்த சுதந்திர மடைந்து விட்டோம்” என்று சுதந்திரப் பள்ளு பாடியவன், “சாதி மதங்களைப் பாரோம் உயர் ஜன்மம் இத் தேசத்தில் எய்தின ராயின் வேதியராயினு மொன்றே அன்றி வேறு குலத்தின ராயினு மொன்றே” எனச் சாதிவேற்றுமையைத் தகர்த்தும், “மாதர் தம்மை இழிவு செய் யும் மடமையைக் கொளுத்துவோம், வைய வாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குளே தாதரென்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வ மிந்த நாட்டிலே” எனப் பெண் விடுதலை யைப் போற்றியும் பாடினான். நாட்டு விடு தலைக்குச் சமூக ஒற்றுமை அவசியம் என்பதை உணர்ந்திருந்த பாரதிக்கு, மக்கள் ஒருங்கு கூடி இறைவனை வழிபடும் ஆலயம் முத் திமை அளிக்குமிடமாகத் தோன்றாது ஒற்று மையை ஏற்படுத்தும் இடமாகவே காட்சிய ளித்தது. அதனாலே ஆலயம் பற்றிய அவ னது விளக்கமும் புதுமையானதாக அமைந் தது.

“கடவுள் எங்கும் இருக்கிறாரே? எல் லாம் கடவுள்தானே? ஊருக்கு நடுவில் ஒரு கோயிலைக்கட்டி அதில் ஒரு கல் லையோ செப்பையோ நட்டு அங்கே தான் எல்லோரும் வந்து கும்பிட வேண் டும் என்ற நியமம் எதற்காக? என்றால் ஜனங்களுக்குள் ஐக்கியம் ஏற்படுத்து வதற்காக.

“ஒன்று கூடிக் கடவுளை வணங்கப் போகு மிடத்து மனிதரின் மனங்கள் ஒருமைப் பட்டு தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தெரிந்துகொள்ள இடமுண்டாகு மென்று கூறி முன்னோர் கோயில் வகுத் தார்கள்.'' என்பது பாரதி ஆலயம் ஏன் தோன்றியது என்பதற்குக் கொடுக்கும் விளக்கம். இங்கு பாரதி, ''ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு ஆலயம் அமைந்தது'' என்ற சமயக் கருத்தை விலக்கி, ''மக்களுக் கிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த ஆலயங் கள் தோன்றின'' எனச் சமூக உணர்வுடன் புது விளக்கத்தை அளித்துள்ளான். அத் துடன் கோயில் வழிபாட்டால் அந்த 'ஐக்கி யம்' எவ்விதம் ஏற்படும் என்பதனையும் தெளிவாக விளக்கியுள்ளான். கோயில்களில் பெண் தெய்வங்களை வழிபடும்பொழுது அத் தெய்வங்களைப் போல பெண்களை நேசிக்க வேண்டும். ஆண் தெய்வங்களை வழிபடும் பொழுது ஏனைய ஆண்களை அந்நிலையில் வைத்துப்பார்க்க வேண்டும். அப்படிச் செய்யுமிடத்து 'ஐக்கியம்' உருவாகும் எனப் பாரதி கருதுகின்றான்.

> ''கவனி, நல்ல பச்சைத் தமிழில் சொல் கிறேன். நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வம் எல்லாம் உன் தாய் மனைவி சகோதரி மகள் முதலிய பெண்களிடத்தே வெளிப்படாமல் இது வரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம் மன் தாய். அவளைப்போலவே நம் முடைய பெண்கள் மனைவி, சகோதரி, மாதா முதலியோர் ஒளிவீச நாம் பார்க்க வேண்டும் என்பதே குறிப்பு. ஆண் தெய்வமெல்லாம் நீ உன் பிதா, உன் சகோதரன், உன் மகன், உன்னைச் சேர்ந்த ஆண் மக்கள் அடைய வேண் டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன. இதைக் காட்டி மிருகநிலையி லிருந்த மனிதரைத் தேவநிலைக்குக் கொண்டு செல்லும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக்கூடங்களே கோயில் கள்''

எனப் பாரதி அதனை விளக்கியுள்ளான்.

மக்களிடையே 'ஐக்கியத்தை' ஏற்படுத் தத்தக்க இடமாக அமையும் ஆலயங்கள் கல்வி வளர்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பாரதி விரும்பியுள்ளான். தனது காலத்தில் வருமானம் அதிகமுடைய ஆலயங்கள் வீண்விடயங்களில் பணத்தை விரயமாக்குவதைக் குறிப்பிட்டு அதனைக் கண்டித்ததுடன், கிறிஸ்தவ 'சர்ச்சு'களில், படித்தவர்கள் ஊழியர்களாக இருப்பது போல் ஆலயங்களிலும் படித்தவர்களை ஊழியர்களாக நியமித்துக் கல்வியை வளர்க்க வேண்டும் எனக் கருத்துவைத்துள்ளான்.

> '' பக்தியும் கல்வியும் ஒருவாறு புணர்ந் திருக்கப்பட்டன வென்பதை விளக்கு வதற்காக கிறிஸ்தவப் பாதிரிகளைத் திருஷ்டாந்தமாகக் காண்பிக்கலாகும். அவர்கள் மதத்தை விருத்தி செய்வதற் காக வந்திருந்த போதிலும் பல இடங் களில் பெரிய பாடசாலைகளை ஏற்படுத்திக் கல்வி விருத்தியைச் செய்கிறார்கள். ஆத லால் நம்முடைய ஆலயங்களில் மிகுந்த பணத்தை வீண்செலவு செய்யாமல் கல்விக்காக உபயோகப்படுத்தினால்,ஜனங் களுக்கு அபரிமிதமான திருப்தியை உண் டாக்கும்.''

பாரதியின் இக்கருத்துப் பாரதிக்கு முன்பு ஆறுமுகநாவலராலும் எடுத்துக் கூறப் பட்டமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

இவற்றைத்தவிர ஆலயங்களில் நடை பெறும் 'அன்னதானம்' பற்றியும், ஆலயங்க ளில் பூசை செய்வோர் பற்றியும் பாரதி கூறியனவும் இங்கு நோக்கத்தக்கன. கோவில் களில் நடைபெறும் அன்னதானங்கள் பெரும்பாலும் 'சோம்பேறிகளாய்க் கண்ட இடத்தில் சாப்பிட்டுக் காலம் போக்கிறவர் களுக்குத்தான்' அளிக்கப்படுகிறது எனக் கூறும் பாரதி சோம்பேறிகளை விருத்தி செய்யக் கோயில் பணம் பயன்படக்கூடாது என்றும் சுவாமி தரிசனத்தின் பொருட்டு அயலூரிலிருந்து வரும் பிரயாணிகளுக்கே அன்னதானம் வழங்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளான். அடுத்து ஆலயங்களில் பூசை புரிவோர் குருலிங்க சங்கம பக்தியுள்ளவர்க ளாகவும் ஆகம உணர்ச்சியுள்ளவர்களாகவும் இருக்கவேண்டுமென சமயப் பெரியார் கூறுவர். பாரதியோ ஆலயங்களில் பூசை செய்வோர் ' தம்மைத் தெய்வம்சம் உடைய வர்களாகவும், கும்பிடுவோரை நித்திய அடி மைகளாகவும் கருதும் மனப்பாங்கு உடைய வர்களாக இருக்கக்கூடாது' என்கிறான்.

இவ்விதமாக ஆலயம் பற்றி ஆலயத்தில் நடைபெறவேண்டிய பணிகள் பற்றி வெறு மனே சமய உணர்வுடன் மாத்திரமல்லாது சமூகவுணர்வினையும் சமயத்துடன் இணைத் துப் பாரதி கூறிய கருத்துக்கள் இன்றும் எம் மால் பின்பற்றத்தகும் சிறப்பு வாய்ந்தன வாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Radhika Jewels

*Dealers in:*

**SOVEREIGN GOLD,**

**JEWELLERIES,**

**WATCHES Etc.**

**54, Kotugodella Vidiya,**

**KANDY.**

# Ashok Motor Centre

**37, Peradeniya Road,**

**KANDY.**

*T. P.* 08 - 2864

# BALAKRISHNA STORES

**136, Colombo Street,**

KANDY.

4534

# GLOBE HARDWARE

**170B, Colombo Street,**

KANDY.

*T. P.* 2296


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஔவையும் முருகனும்

செல்வி தவமணிதேவி சாம்பசிவம், B. A. (Hons)

சங்கம் வைத்துத் தமிழ் வளர்க்கப்பட்ட காலங்களில் ஆண்பாற் புலவர்கள் போற் பெண்பாற் புலவர்களும் நினைவு கூரத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர். இப் பெண்பாற் புலவர்களுள் ஔவையார், ஆதிமந்தியார், வெள்ளிவீதியார், பூதப் பாண்டியன் தேவியார் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் படைப்புக்கள் தமிழ் உலகில் நிலைத்துநிற்கின்றன. இவர்களுள் ஔவையார் தமிழ்ப் பெரும் மூதாட்டி என்று பலராலும் போற்றப்படுகின்றார். ஆனால் எமது துரதிஷ்டம் இவ் ஔவையார் பரம்பரையினரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் இன்னும் ஒரு தெளிவான இடத்தை அடையவில்லை. இன்று கிடைக்கும் அவர்தம் படைப்புக்களைக் கொண்டே அவர்களைப்பற்றி அறிய முடிகிறது.

சங்ககால ஔவையாரை அடுத்து இன்னுமொரு ஔவை மூதாட்டி சோழர் காலத்திற் காணப்படுகின்றார். கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர் போன்றோர் மத்தியிற் சிறப்பான இடத்தை வகித்தவராக இவ்வம்மையார் காணப்படுகிறார். தமிழ் இலக்கிய வரலாற்றில் அதன் வளர்ச்சிக்குப் புலவர் பரம்பரையினருக்கு அவ்வப்போது கடவுளர் துணைசெய்துள்ளனர். உதாரணமாக நக்கீரர், அருணகிரிநாதர் ஆகியோருக்கு முருகனும், நாயன்மார்களுக்குச் சிவனும் ஆழ்வார்களுக்குத் திருமாலும் அருள்பாலித்ததை நாம் அறிகின்றோம். இவ்வரிசையில் ஔவையாரும் விநாயகப் பெருமானிடம் பால், தேன், பாகு, பருப்பு முதலியவற்றைக் கலந்து உனக்கு உணவாகத் தருகின்றேன். "நீ எனக்குச் சங்கத் தமிழ் மூன்றும் தா" என வேண்டி நிற்கிறார். இவ் வேளையிலேதான் ஔவைக்கும் கலியுக வரதனுக்கும் என்ன தொடர்பு இருந்திருக்கலாம் என்று அறிய ஆவல் மேலிடுகின்றது. ஔவை விநாயகரிடம் கேட்டதைப்போல் முருகனிடம் கேட்டதாகக் கிடைத்த அவர் படைப்புக்கள்மூலம் அறிய முடியவில்லை. மேலும் ஔவையார், சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமாள் நாயனார் ஆகியோருக்கு முன் கைலையங்கிரியைத் தான் அடைந்தமைக்குத் காரணம் விநாயகப் பெருமானே என்பதையும்,

"மதுர மொழிநல் உமையாள்
சிறுவன் மலரடியை
முதிர நிலையவல் லார்க்கரி
தோமுகில் போன் முழங்கி"

எனக் கூறுகிறார். விநாயகர்மீது 'சீதக்களப' என்னும் அகவலைப் பாடி வணங்கினார் எனவும் தெரிய வருகின்றது. இவ்வாறான நெருக்கமான தொடர்பு ஔவைக்கும் முருகனுக்கும் இல்லாவிட்டாலும் உரையாடல் நடந்ததாக ஏறக்குறைய ஐந்து பாடல்கள் மூலம் தெரிய வருகின்றது.

ஔவையின் சமகாலத்துப் புலவர்களாகக் கூறப்படுபவர்களுள் ஒருவரான ஒட்டக்கூத்தர் சோழன் அரச சபையிற் செல்வாக்கு மிக்கவர். இதனாலே தன்னுடன் புலமைத் துறையில் முன்னிற்கும் புகழேந்தியுடன் சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது சீண்டிக் கொண்டே இருப்பார். ஔவை இச் சந்தர்ப்பங்களிற் கூத்தரின் கர்வத்தை ஒடுக்கிப் புகழேந்தியும் சளைத்தவரல்ல என்பதை நிலைநாட்டுவார். இத்தகைய புலமைமிக்க ஔவை ஒரு மாடு மேய்க்கும் சிறுவனாலே தோற்கடிக்கப்பட்டார் என்றால் தமிழ் உலகம் ஆச்சரியப்படாமலிருக்கமுடியாது. அச் சிறுவன் வேறு யாருமில்லை. முருகனே அச் சிறுவனாகத் தோற்றமெடுத்து ஔவையின் புலமையைச் சோதிக்கிறார். ஔவை யாருடன் முருகனைச் சேர்த்தெண்ணும்போது அனைவருக்கும் ஞாபகத்தில் வருவது சுட்ட பழம் சுடாத பழம் என்பதாகும். சுட்ட பழமா? சுடாத பழமா? வேண்டுமென்று கேட்ட சிறுவனிடம் பழத்திலும் சுட்ட பழமுண்டா என்று ஆச்சரியப்பட்ட ஔவை சுட்ட பழத்தைக் கேட்கிறார். நிலத்தில் விழுந்த பழத்திலிருந்து மணலை நீக்க ஊதி ஊதிச் சாப்பிடுகிறார். அப்போது சிறுவன் பாட்டி, பழம் சுடுகிறதா? என்று கேட்கிறான். அவன் அறிவை எண்ணி வியந்த

ஔவை அவனை அண்ணுந்து பார்த்து உனக்குத் தோற்றேன் என்ருர். அங்கு முருகப் பெருமான் தோற்றமளிக்கிருர். ஔவையின் உள்ளம் நாணி,

" கருங்காலிக் கட்டைக்கு
நாணுக் கோடாலி
இருங்கதலித் தண்டுக்கு நாணும் —
பெருங்கானில்
காரெருமை மேய்க்கின்ற
காளைக்கு நான்தோற்றேன்
ஈரிரவும் துஞ்சாதென் கண்."

என்கிருர். இறைவனிடம் தானே தோற்றது என்று அவர் அமைதியாகி விடவில்லை. அதனுல் இரண்டு இரவுகளுக்குத் தன் கண் நித்திரையினைப் பெருது என வருத்துதல் நயக்கத் தக்கது.

தன்னிடம் தோற்ற ஔவையிடம் முருகன் சில கேள்விகளைக் கேட்டு அவர் மூலம் அரிய உண்மைகளைக் கூற வைக்கிருர். அவரிடம் முதலில் உலகிற் கொடியது எது என்கிருர். வறுமை, இளமையில் வறுமை, ஆற்றுெணுக் கொடுநோய், அன்பிலாப் பெண்டிர் இவையே கொடியது என்று முதலிற் கூறியவர் இவற்றிலும் கொடியது,

" ..........................................................

அதனினும் கொடிதே
இன்புற அவள் கையில் உண்பது தானே"

என்கிருர். இல்லறத் தலைவி கொடியவள் எனத் தெரிந்த பின்னும் அவள் கையால் வாங்கியுண்ணும் ஒரு ஆண்மகன் நிலையே எல்லாக் கொடியவற்றுள்ளும் கொடிது என்று கூறியது இன்றுவரை ஏற்கக் கூடியதே.

அடுத்து இனியது எது என்று வினவுகிருர். 'இனியது இனியது ஏகாந்தம் இனியது என்று கூறியவர் சற்றுச் சென்று ஆதியைத் தொழுதல் இனியது என்றவர் இறுதியில் அறிவுள்ளாரைக் கனவிலும் நனவிலும் காண்பதே இனியது என்கிருர். உலகிற் பெரியது எது என்று கேட்டபோது அதற்களித்த ஔவையின் விடை ஆழமான அவர் அறிவுள்ளத்தைத் துலக்கி நிற்கிறது. சாதாரண எம் போன்றவர்களைப் பெரியது எது என்று கேட்டால் எம்மைப் படைத்துக் காத்தழிக்கும் இறைவன் என்றே கூறுவோம். பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்! என விளித்து முதலிற் புவனத்தைக் கூறிப் பின் படிப்படியாகப் புவனத்தைப் படைத்த நான்முகன், நான்முகன் உதித்த கரியமால் துயின்ற அலைகடல், அலைகடல் அடங்கிய குறுமுனி, குறுமுனி பிறந்த கலசம், கலசம் ஆக்கப்பட்ட புவிமண், புவியைத் தாங்கிய ஆதிசேடன், ஆதிசேடனை மோதிரமாகக் கொண்ட உமையவள், உமையவளைப் பாகத்திற் கொண்ட இறைவன் எனக் கூறி இறுதியில்,

" ..........................................................

இறைவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"

எனக் கூறித் தொண்டர் பெருமையை அழகாக உயர்த்தி விடுகிருர். தொடர்ந்து அரியது எதுவெனில் தானமும் தவமும் தரித்தலே என்கிருர்.

இவ்வளவு மிகக் குறைந்த அளவான பாடல்களை ஔவை, முருகன் தொடர்பை அறிய உதவுகின்றன. அவற்றுள் சுட்ட பழம், கொடியது, பெரிது, அரியது, இனியது என்பவற்றின் விளக்கங்கள், தமிழ் இலக்கிய உலகில் ஒரு சிறந்த முத்திரையைப் பதித்துள்ளன. மேலும் தென்பாண்டி நாட்டில் உள்ள ஔவையார் கோயிலும் தமிழ் நாட்டுப் பகுதிகளில் பெண்கள் கடைப்பிடிக்கும் ஔவையார் நோன்பும் இன்றுவரை அவர் பெருமையை நிலைநாட்டி நிற்கும் சான்றுகளாகும்.

ஆதாரங்கள் :

1. பல வித்துவான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு முதற்பாகம் — திரு. கா. சுப்பிரமணியம்பிள்ளையவர்கள்
2. தனிப்பாடல் திரட்டு உரைக் குறிப்புகளுடன் (முதற்பகுதி)—கருப்பக்கிளார் த. அ. இராமசாமிப் புலவர்
3. ஔவையார் பாடல்கள்—புலியூர்க் கேசிகன் உரையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரன் தோத்திரம்

அருட்கவி சீ. விநாசித்தம்பி

காப்பு

தீராத நோய்தணிக்கும் சித்திரவே லாயுதனே
பேரா தணிவாழ் பெருமானே — சீராரும்
தந்திக் கணபதிக்குத் தம்பியே நின்கருணைச்
சந்தமலர்த் தாளிணையைத் தா.

ஒளிதரு சரவ ணத்தில் உதித்தசெங் கதிரே போற்றி
கனிதரு புனமான் வள்ளி கஜவல்லி கணவா போற்றி
அனிதரு கடப்ப மாலை யணிதடந் தோளா போற்றி
குளிர்தரு வளக் குறிஞ்சிக் குமரனே போற்றி போற்றி.

கலைபயில் தமிழ் நயந்த கார்த்திகை பாலா போற்றி
நிலையுணர் கீர னுக்கு நிரைகழல் தந்தாய் போற்றி
தலைபெறு பிரண வத்தின் தத்துவம் புகன்றாய் போற்றி
குலைமலர் சொரி குறிஞ்சிக் குமரனே போற்றி போற்றி.

பாடுவார் மனத்தி ருக்கும் பன்னிரு கையா போற்றி
நாடுமா ருதா ரத்துள் நடமிடும் பாதா போற்றி
கேடிலா துலக முய்யக் கிழவிவாக் குவந்தாய் போற்றி
கூடுதே யிலைக் குறிஞ்சிக் குமரனே போற்றி போற்றி.

மயிலேறும் குகனே போற்றி வாரணத் துவஜா போற்றி
வெயிலேறு வண்ணு போற்றி வேதநா யகனே போற்றி
அயிலேறு வேல் நயந்த அம்பிகை புதல்வா போற்றி
குயிலேறு பொழிற்கு றிஞ்சிக் குமரனே போற்றி போற்றி.

கொடியவஞ் சனைய ரக்கர் குலமழித் தாண்டாய் போற்றி
அடியவர் துணைவா போற்றி அறுபடைக் கதிபா போற்றி
நெடியவன் மருகா போற்றி நிறைகனி யானாய் போற்றி
கொடியணி வாள் குறிஞ்சிக் குமரனே போற்றி போற்றி.

கற்றவர் போற்ற நின்ற கற்பக முருகா போற்றி
சுற்றமும் துணையு மாகித் தொண்டரைக் காப்பாய் போற்றி
நற்றமி ழழகா போற்றி ஞானபண் டிதனே போற்றி
கொற்றவா சிவகு றிஞ்சிக் குமரனே போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூறுகிறேன் கேள் குமரா!

— அக்கரைச் சக்தி

சூரர்படை சுட்டவேல் தூக்கும்அதி தீரா!
தூயமயில் ஏறிநடம் ஆடும்செந் தூரா!
மாரனை விடஅழகில் வல்ல குமரா!
மான்மகள் வள்ளிமகிழ் மார்பலங் காரா
வீரர்பணி யாற்றுபெரு வீரரில் வீரா!
விண்ணவர் தலைவன் வியந்திடும் சேரா!
சாரதர் போற்றிடும் ராஜகெம் பீரா!
சண்முகம் எனஅன்பர் சாற்றிடும் பேரா!

ஏராள மானமலை ஏறினேன் ஐயா!
என்காலில் நோவன்றி எதுவுமில்லை ஐயா!
பேரா தனையெனும் பெருநில மதனைப்
பேணவந் தாயுந்தன் பெட்பை நினைந்தே!
ஆரா தனைசெய்யும் அன்பர்களி னோடு
அடியேனும் இந்தமலை யதனிலே ஏற
சேராத ஆற்றல்பல சேர்ந்ததே ஐயா!
சிங்கார ரூபனே! செல்லமே ஐயா!

எத்தனை பாடல் இயற்றினேன் ஐயா!
இசையுடன் பாடிஇன் புற்றனன் ஐயா!
உத்தமர் புகழ்தர உலவினேன் ஐயா!
உயர்தமிழ்க் காக உழைத்தனன் ஐயா!
அத்தனை சேவைகள் ஆயிரம் செய்தும்
அமைதியும் சாந்தமும் அகத்தினில் இல்லை
தத்துவச் சுடரே தவமணீ! உன்தாள்
தமியேன் பணிந்தேன்! தாஅருள் ஐயா!

கோலநிறை கின்ற குறிஞ்சிக் குமரா!
கூப்பிட்ட அடியார் குறைபோக்கு முருகா!
ஞால மிதிலேநலம் நாடுவோர்க் கெல்லாம்
யமபயம் போக்கிடும் ஞானச் சொரூபா!
ஆலமது உண்டவன் அன்புப் புதல்வா!
அம்பிகை சேர்த்தணைத் திடும்ஆறு முகவா!
ஓலமிடு முன்பக்தர் உறுதுன்ப நீக்க
ஓங்கார நாதனே! ஓடிநீ வா! வா!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்நாளோ அற்ப மாயினு மதற்குள்
மமதைகொண் டேமக்கள் வதிகிரு ரையா!
சூழவே துயர்கோடி சோதனை வேறு
சொந்தமும் பந்தமும் சுவைகளும் வேறு
சூழவே இவைகளில் அமிழுக என்றுதான்
அடியவர் களையுநீ ஆணையிட் டனையோ?
மீளவே இப்பிறப் பெதற்கெனக் கிறைவா!
வேலவா! குறிஞ்சியின் வேந்தனே முருகா!

அச்சங்க ளென்றென் னகத்திருந் தகலும்?
ஆறுதல் நெஞ்சகத் தெப்போ விளங்கும்?
கச்சித மானஉன் கருணையின் மேன்மை
கண்டிடும் ஆற்றலென் றென்கண்கள் காணும்!
எச்சமய மாயினும் எங்கென்ற போதும்
ஈரநெஞ் சங்கொண்டு இன்புறும் பாங்கை
நிச்சய மாகநான் கைக்கொள்ளும் நேரம்
நேசனே! அதுவாழ்வில் நேரும்சுப நேரம்!

வேறு

உதவிஒரு துளியுமிலை உறவுஒரு வகையுமிலை
பதவிஇது பெரிதுஎனும் பாங்கில்லை — இதுவரையில்
நீகூட அருளவிலை; நித்தியனே! நிர்க்கதியில்
வேகிடுதல் தான்பயனோ விளம்பு?

எங்கென்ன கதைப்பதெனத் தெரியாமல் ஏதோகதைத்து
சங்கைகுறைக் கும்தோழர் சந்நிதியில் — பங்குகொள
நான்தானு கிடைத்தேன்? நாயகனே வேலவனே!
ஏன்தான் இச்சோதனை எனக்கு?

பண்ணுத பாவம் பழியெல்லாம் படையெடுத்து
எண்ணுத வகையெல்லாம் என்னை — புண்ணுக
வைக்கிறதே! யான்இந்த வையத்தில் யார்மனதைத்
தைக்கவைத்தேன்? நோகத் தான்!

சா. சக்திதாசன்
(போதனுசிரியர்)
எந்திரப் பொறியியற்றுறை
பொறியியற் பீடம்
பேராதனைப் பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருள்மிகு குறிஞ்சிக் குமரன் புகழ்ப் பாக்கள்மீது

# ஆசியுரை

குமாரசுவாமி ஐயர்
குறிஞ்சிக் குமரன் கோவில் பூசகர்

அகில புவன முடியும் வெளியில் அணியும் ஒளியின் நிலையமே
அறியுள் அறிவை அறியும் அவரும் அறிய அரிய பிரம்மமே
மலையின் மகன்கண் மணியை அனைய மதலை வருக, வருகவே
வளமை தழுவு பரிதி புரியின் மருவு குமரன் வருகவே.
இந்து சைவ சமயாசமய சமுதாயமே!
உன் சாதனம்எம் பின்னேடிக்கு வழிகாட்டி,
வாழும் தமிழைப் போற்றும் பாரதியை வாழ்த்தி— எம்
சிந்தனையைத் தூண்டியெமைத் தேனமு துப்பித்தாய்
வந்தனைகள் பன்னூறு போதாதே— செந்தமிழே
ஆக்கம் பலசெய்யும் ஆற்லெனக் களித்தாய்
உள்ளம் உவந்துதரு வெண்பாப் பொருள்காட்டி,
விள்ளற்கரிய வண்டமிழே—தெள்ளமுதாய்
இன்பக்கனி கிடைக்க ஆய்ந்தாய்நீ வாழியவே
அன்பு பெருகக் காலறிந்து,
உன்னைத் தொடர்ந்துவரும் மணிஓசை புகழ்பாடி
மனப்பூர்வ மாய்த்தந்த வண்டமிழே யென்றேன்
உளப்பூர்வ நன்றி யுனக்கு.
உய்த்துணர்வி லின்ப முறுங்கவிதை யாத்தந்த
மெய்ப்புலவ ராக்கப் பெருஞ்செல்வமாம் — இந்துதருமம்
சாதனங் களிலின்பத் தேனுக வாழியவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Master Institute

B. M. C. Lane,

*JAFFNA.*



அன்பளிப்பு

*Bharat Studio*

JAFFNA.

*T. P.* 252



With the best Compliments from

**Shanmuga Agencies**

*General Merchant & Commission Agents*

**No. 45, 4th Cross Street,**

**COLOMBO - 11.**

Phone: 21943




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய நங்கையர்களே !
உங்கள் அழகுக்கு அழகூட்ட
தங்க நகைகளைத் தெரிவு செய்ய
இன்றே விஜயம் செய்யுங்கள்
ஆடர் நகைகளும்,
அசல் 22 காரட்டில் சுத்தமாகக்
குறித்த தவணையில் செய்து தரப்படும்

விஜிதா ஜுவலரி
நகை மாளிகை
195, செட்டியார் தெரு,
கொழும்பு-11

With best Compliments
from
ANNALACKSHMI
GOLD HOUSE
Jewellers & Gem Merchants
Articles are all guaranteed and Genuine
137, Sea Street,
COLOMBO — 11

With best Compliments
from
NEW CITY TRADERS
No. 4, Adamally Buildings,
COLOMBO - 13

With the best Compliments
of
Thiruchenthuran
Trader
COMMISSION AGENT
220, Forth Cross Street,
COLOMBO-11
Phone: 23801
Associates:
SELVAN TRADER
38, Lawson Street.
NUWARAELIYA
Phone: 433

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரணாகதி

செல்வி அம்பிகைவதனா கதிரித்தம்பி
இறுதியாண்டு,
மருத்துவபீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்

குறிஞ்சிக் குமரனின் சந்நிதானத்தில் நின்று, இவ்வுலக நினைவுகளையெல்லாம் மறந்து அவனுடைய கருணை நிறைந்த ஆறு திருமுகங்களையும், பன்னிரு தோள்களையும், பயந்த தனிவழிக்குத் துணையாயிருக்கும் வேலாயுதத்தையும், பாவிக்கும் புகலிடம் அளிக்கும் சரணகமலாலயத்தையும் கண்டு களித்துக் கூப்பிய கரங்களைச் சிரசிலே குவிக்கின்ற அக்கணப்பொழுதுதான் எவ்வளவு இனிமையானது. அப்பொழுதிலே எம்முடைய செயல்கள், செயல்களின் பயன்கள் எல்லாவற்றையும் மறந்து நிற்கிறோம், எம்முடைய வாழ்விற்கு அவன் பாதுகாவலன் என்ற நினைப்பில் இருக்கிறோம். ஆலய வாசலில் நிற்கும்பொழுது மட்டும்தான் நாம் அவனிடம் சரணாகதி அடைகிறோம். மற்றையவேளைகளில் எல்லாம் எம்மை ஆட்டிப் படைக்கும் மாயைக்கு அடிமையாகி, "நான் செய்கின்றேன்" என்ற இறுமாப்பில் ஆழ்ந்து இறுதியில் துன்பத்தையும் அடைகின்றோம்.

சிறு குழந்தையொன்று எப்போதும் மகிழ்வாக இருக்கின்றது. எந்த விதமான சூதுவாது அற்றும் இருக்கின்றது. தனக்கென்ற விருப்பு வெறுப்பற்று அன்னை என்னும் வட்டத்தினுள்ளேயே சுழன்றுகொண்டிருக்கின்றமையால், தன்னைப்பற்றிய நினைவே இல்லாமல் இருப்பதனுற்தான் அக்குழந்தை தானும் எப்பொழுதும் ஆனந்தத்தில் திளைத்துக்கொண்டு மற்றவர்களையுந் தன் கள்ளம் கபடமற்ற சிரிப்பினால் மகிழ்வித்துக் கொண்டிருக்கிறது. அக் குழந்தையைப் போன்று நாமும் எம்முடைய கடமைகளையும், அவற்றின் பயன்களையும் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்த" அன்னையாம் இறைவனிடத்து ஒப்படைத்து எம்மைச் சரணாகதிப்படுத்தினோமானால், நிலையான இன்பத்தைப் பெறமுடியும். சரணாகதி என்ற உயர்ந்த நிலையை, ஞானத்தைத் தேடித்தரும் அந்த மனப்பக்குவத்தைப் பெறுதல் இலகுவானதன்று.

மெய் வருத்தமில்லாத இவ்வுலக வாழ்க்கையில் இந்த அழிகின்ற, நிலையற்ற கட்டுக்குள் அடங்கிய பிரபஞ்சத்தில் உயர்நிலையை அடங்கிய பிரபஞ்சத்தில் உயர்நிலையை அடைவதற்கே பாடுபட்டு உழைக்க வேண்டியிருக்கின்றதெனின், அமைதியையும், அந்தக் கரண சுத்தியையும், பேரானந்தத்தையும் தருகின்ற ஆண்டவனின் காட்சியைப் பெறுகின்றதென்றால் மனஉழைப்பின்றி அடைய முடியுமா? உழைப்பிற்கு அஞ்சுபவனுக்கு எதுவுமே கிட்டாது. ஆத்ம போதத்திற் திளைத்திருக்கின்றவன் கர்மத்தைப்பற்றியே நினைவில்லாமல், அதேநேரத்திற் கர்மங்களை ஆற்றிக் கொண்டும் இருக்கின்றான். அவன் தான் இறைவனிடம் சரணாகதி அடைந்தவனாகக் கருதப்படுகின்றான்.

இறைவனுக்கும் பக்தனுக்குமிடையிற் பல வேறான பந்தங்களுண்டு. மணிவாசகருக்கும் இறைவனுக்குமிடையில் தாசன் — அடிமை உறவு நிலவிவந்தது. அந்த உறவின் மூலம் பெற்ற இன்பங்களையெல்லாம், "தந்தது உன்தன்னை ; கொண்டது என்தன்னை; சங்கரா யார்கொலோ சதுரர்....." என்ற இரண்டு வரிகளில் அழகாக எடுத்துக் கூறுகின்றார். இருளிற் கிடந்துழலும் ஆன்மாவிற்குத் தீப ஒளியாக நின்று இறைவனிடம் சரணாகதி அடையவைக்கப் பெரிதும் உதவி செய்கின்றது– மணிவாசகரின் அடைக்கலப் பத்து. "மோது வல்வினைகள் வந்தடையாமல் அடைக்கலப்பத் துரைத்தாயே" எனத் திருவாசகம் கூறுகின்றது. "பற்றி இன்பத்தைப் பற்றற நாம் பற்றிடின் பற்றிய பேரானந்தம் பாடுதும்கா ணம்மானாய்" என்று மணிவாசகர் சரணாகதி அடையும் வழியினைத் தெளிவாகக் கூறுகின்றார்.

இறைவனையே நம்பி அவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்தோமானால் எம்முடைய ஒவ்வொரு அசைவும் அவனால் நடத்தப்படுவதாயிருக்கின்றது; அல்லாமல் அவன் ஆட்டுகின்றான்; நாம் ஆடுகின்றோம்; எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் அவன் செயற்படி நடக்கின்றது என்பதெல்லாம் வெறும் வாய்ப்பேச்சாகப்படுகின்றது. ஆட்டுவான் கருத்தறிந்து ஆடாமல் ஆடிவிட்டு, களைத்து வாழ்க்கை முடியுந்தறுவாயில் யமன் பாசக் கயிற்றை வீசுகையில் "சிவனே சிவனே" என்று கதறுவதால் என்ன பயன்? அப்படியாயின் அவன் கருத்துத்தான் என்ன? எம்மால் அதை எப்படி உணரமுடியும்? மகாத்மா காந்திஜி பின்வருமாறு கூறுகின்றார்: "இறைவனுடைய குரல் என்றும் ஒலித்துக்கொண்டுதான் இருக்கின்றது. ஆனால் அக் குரலைச் செவிமடுத்துக் கேட்க விரும்பாமல் மக்கள் வீண் ஆரவாரங்களிலேயே மூழ்கிப்போய்க் கிடக்கின்றார்கள். அந்தரங்கத்தில் ஒலிக்கின்ற அக்குரலைக் கேளுங்கள்."

'ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு
ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி."

என்று திருவள்ளுவர் அழகாகக் கூறுகின்றார். ஐம்புலன்களை அடக்குபவனின் அந்தரங்கத்தில் இறைவனின் குரல் என்றும் ஒலித்துக் கொண்டுதானிருக்கும்.

திரௌபதை தன்னுடைய மானத்தைக் காப்பாற்றுவதற்குக் கட்டிய கணவர்கள் முன் வராததைக் கண்டு துகிலைக் கைகளாற் பற்றிக்கொண்டு, 'கண்ணா! கண்ணா!' என்று கதறிய பொழுது அருளாத கண்ணன், இரு கரங்களையும் அவனை நோக்கி நீட்டிய வண்ணம் தன்னுடைய மானத்திற்கு அவனைக் காப்பாக எண்ணிக் கதறிய போது ஓடோடி வந்து அருளுகின்றான். அவ்வாறு எம்மை நாமும் முழுமையாக அவன் பாதங்களில் சரணப்படுத்திடுவோமானால் இவ்வுலக வாழ்க்கையை அவ்வுலகமாக மாற்றியமைத்திடலாம்.

இந்துசமயம் அருட்பெரும் பொக்கிஷங்களை, தத்துவங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. ஆனால் அத்தத்துவங்களைத் தேடிச்சென்று அறியுமளவிற்கு எமக்கு நேரமோ, மனமோ கிடைப்பதில்லை. எது எப்படி இருப்பினும் அதிகம் தெரிந்து செயலாற்றாமல் இருப்பதைவிட சிறிது தெரிந்து நடைமுறைக்குக் கொண்டு வருதல் சாலச் சிறந்தது.

கீதையிற் கிருஷ்ணன் கூறும் கருத்து குறிப்பிடத்தக்கது. சரீரத்தைக் கொண்டிருப்பதே ஒருவித அகங்காரம். அதைச் சுக போகத்திற்கென்று வைத்திருப்பதும், அதை அலங்கரிப்பது, கொழுக்கச் செய்வது முதலியனவும் கொடிய அகங்காரமாகும். கிடைப்பதற்கரிய மானுடப்பிறவி அதனால் அனர்த்தமாகப் போகின்றது. மனிதன் தன்னுடைய கடமைகளை முறையாகச் செய்தல் இன்றியமையாதது. அவற்றைச் சுவாசிப்பது போன்று இடைவிடாது செய்ய வேண்டும். எனவே நாம் பற்றற்றுக் காரியம் ஆற்றுவோமாக. பற்றற்ற மனத்திலே தெளிந்த நீர் மேல் காட்சி போன்று இறைவன் காட்சி தெளிவாகும். வெறென்ன வேண்டும் எமக்கு? பிறந்ததன் பயனை அடைந்திடலாமே!

மனத்தை ஒருவன் அடக்கி வெற்றிகொள்ள முழுமனத்தோடு விரும்புவானானால் சிவத்தியானத்தைத் தினந்தோறும் செய்துவரக் கடவன். படிப்படியாக அவன் மனமொடுங்கி வருவதை அவன் கண்கூடாகக் காண்பான். சாந்தம், பொறுமை, அடக்கம் முதலிய நற்குணங்கள் அவனிடத் துதிக்கும். அவன் மன மெந்தநேரமும் மகிழ்ச்சியுடையதாகவே இருக்கும்.

—யோகர் சுவாமிகள்

* * * *

குழந்தையினது போன்ற கபடமின்மையோடு ஆழ்ந்த யோசனையையும் இணைத்துக் கொள். அனைவரோடும் ஒத்துவாழ். அகந்தை நினைவை முழுவதும் ஒழித்து விடு. ஒரு கட்சிச் சார்பான கருத்துகட்கு இடம் கொடாதே. பயனற்ற வாதப் போர் பெரும் பாவமாம்.

—சுவாமி விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை இந்து யார்?

செல்வி மைத்ரேயி சபாரத்தினம்
கலைப்பீடம்
4ஆம் வருடம் பொருளியல் சிறப்பு,
பேராதனை

முன்னொரு காலத்தில் இந்து என்ற சொல் இந்து நதிக்கு இப்பால் வாழ்ந்தவர்களைக் குறித்தது. ஆனால் இப்பொழுது இந்து நதிக்கு இப்பால் பாகிஸ்தான் போன்ற நாடுகளும் பல்லாயிரம் மதத்தினரும் வாழ்கின்றனர். எனவே இப்பொழுது இந்து என்பவர், உலகின் மிகத் தொன்மையான சமய இலக்கியம் என அறிஞர்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் வேதங்களைத் தம்மதநூல் எனக் கொள்பவர் அனைவருமே ஆவர்.

உண்மை இந்து என்ற அடைமொழி ஏன் என்ற கேள்வி எழலாம். "The Motley doesn't make the Monk" என்றார் ஷேக்ஸ்பியர். வெளித் தோற்றத்தைக் கொண்டு ஒருவனை இனங்காணுவது மூடரது வழக்கம். புத்திசாலி ஊடுருவிப் பார்த்தே உண்மையை உணர்வான். வேஷதாரிகள் மிகுந்த இக் காலம் வெண்ணீறு பூசி தங்கம் சேர்த்துக் கட்டிய உருத்திராட்சமணிந்து குடுமி வைத்துத் தானே வைதீகத்தின் பிரதிநிதி எனத் தலைநிமிர்ந்து நடப்பவன் உண்மை இந்து என்று கொள்ளலாகாது. அப்படியாயின் மெய்ப்பொருள் நாயனாரிடத்துவந்த வேஷதாரிகள் கொலை பாதகனும் இந்துவல்லவோ?

இந்துவின் முதல் இலட்சணம் இறை நம்பிக்கை. எமக்கு மேலே ஒரு பரம் பொருள் உண்டு. அது உலகைப் படைத்துக் காத்து அழிக்கிறது. "அவன் இன்றி ஓரணுவும் அசையாது" என்ற ஆப்தர் மொழியில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருப்பவன் இந்து. நம்மவருட் சிலர் நிரீச்சுர வாத சாங்கியமும் இந்து சமயத்தின் ஒரு பகுதி தானே என்று கேட்கக்கூடும். அது பிழையானது. கடவுள் நம்பிக்கை இல்லாதவன் இந்து அல்லன். சாங்கியமும் பூர்வமீமாம்சையும் கடவுளை மறுப்பன என்பதால் அவற்றைப் புறச்சமயம் என்றே நம்மவர் கூறுவர். கடவுள் உண்டோ இல்லையோ எனத் தேடுவது ஆராய்வது வேறு, இல்லையென முடிவு கட்டுவது வேறு.

அனுபூதி மலையின் சிகரமாகிய 'ஏகம்' சத் (உள்ளது ஒன்றே) என்னும் உபநிடத வாக்கியம் ஒரு பரிபூரண இந்துவின் உள்ளத்திலிருந்தே பிறக்கும். 'எல்லா உலகமும் ஆனாய் நீயே' என அப்பர் பாடியது வெறும் சொல்லடுக்கு அன்று. உள்பொருள் ஒன்று அண்டமனைத்தையும் ஊடுருவி யுள்ளது என அனுபவத்தில் உணர்ந்தே அவர் பாடினார். எனவே அது சத்திய வாக்கு மறைமொழி. அனுபூதிக் கூற்று.

அனைத்தையும் உள்நின்று இயக்கும் பொருளை இயவுள் என்றும் அது அனைத்தையும் கடந்து நிற்பதால் கடவுள் எனவும் பழந்தமிழர் அழைத்தனர். பாரத நாட்டில் இமயம் முதல் குமரிவரை பலமொழிகளும் இனங்களும் இருந்தாலும் ஒரு இந்துப் பண்பாடே நிலவிற்று. *ஆரிய திராவிட வேறுபாட்டைக் கற்பித்தவர்கள் மேனாட்டுப் பிரித்தாளும் சூழ்ச்சிக்காரர்களே. அந்த இறைவனை அடைவதே தனிமனித வாழ்வின் இலட்சியமாயிற்று.

புற உலக வாழ்வை மதியாது துறந்து அகவுலகினுள்ளே ஆழ்ந்து புகுந்து ஆராய்ந்து அதனைத் தாண்டி அப்பாற் சென்று அந்தமில்லா இன்பத்து அழிவிலாத நிலையாகிய அமர நன்னிலையை (மரணமில்லாப் பெருவாழ்வை) உலக வரலாற்றிலே முதன் முதலாகக் கண்டு "அமரநிலையின் புத்திரர்களே! மேலுலகங்களில் வாழும் விண்ணவர்களே! கேளுங்கள். எல்லா இருள்களுக்கும் மருளுக்கும் அப்பாற்பட்ட பழமையான ஏகப் பரம் பொருளை யாம் கண்டுவிட்டோம். அவரை அறிந்து நீங்களும் மரணத்திலிருந்து உய்வடைவீர்கள்" என்றனர். பழைய ரிஷிகள் "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையமே" என ஆதுரத்துடன் அழைத்து அனைவர்க்கும் அந்த "மற்றீண்டு வாரா" நெறியினைப் போதித்து, அமர நன்னிலையைத் தனிவாழ்க்கைக்குக் குறிக்கோளாக அமைத்தனர். அப்பெருமக்களே உண்மை இந்துவின் இலக்கணமாகத் திகழ்பவர்கள். அவர்களே இந்துக்களின் உரைகல். அத்தகைய ஆரியரிஷிகளைக் கைபர்கணவாய்க்கு அப்பா

---

*பார்க்க: 'Perennial Hindu Culture and the Twin Myths' by M. Vaithialingam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருந்து மாடுமேய்த்துக்கொண்டுவந்த காட்டுமிராண்டிகளென நம்புவோர் நம்மை இந்து என்று சொல்லக்கூடாது.

"அசதோ மா சத் கமய
தமஸோ மா ஜோதிர் கமய
மருத்யோர் மாய அம்ருதம் கமய"

"பொய்மையிலிருந்து உண்மைக்கு இட்டுச்செல்க
இருளிலிருந்து ஒளிக்கு இட்டுச் செல்க
மரணத்திலிருந்து அழிவிலா அமிர்தவாழ்விற்கு
இட்டுச் செல்க."

என்று பாடிய உபநிஷத ரிஷிகளை மதிக்காதவர்கள், வேதநிந்தை செய்பவர்கள் உண்மை இந்துக்களாக முடியாது. சைவசமய நாயன்மாரையும் மாணிக்கவாசகரையும் போற்ற வேண்டுமென்பதற்காக "வேதம் படிக்க மனம் உருகவில்லை; திருவாசகம் படிக்க உருகுதே" என்று கூறும் வேத நிந்தகர்களும், இவர்களைப் பக்தி விமரிசனத்தின் 'கலங்கரை விளக்கம்' எனப் புகழ்மாலை சூட்டுபவர்களும் உண்மை இந்துவாக முடியாது.

இதற்கு மறுதலையாக வேத வேதாந்தங்களைப் புகழவேண்டுமென்பதற்காக ஆகம சாஸ்திரங்களை, கிரியைகளை விளக்கும் கை நூல்களாகிய பத்ததிகளை நிந்திப்போரும் உண்மை இந்துக்களல்ல.

"மிருதி புராணங்கள், கலைகள்
மற்றும் எல்லாம்
மெய்நூலின் வழிபுடையாம்
அங்கம வேதாங்கம்
சுருதி சிவாகமம் ஒழியச்
சொல்லுவது ஒன்றில்லை"

சனாதனதர்மம் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்டது. இன்றுவரை கால வேறுபாட்டுக் கேற்ப மாறுதல்களை ஏற்றுக் கொண்டாலும் இடையீடின்றிச் செல்லும் ஆறுபோல என்றென்றும் ஓடிக்கொண்டிருப்பது. அதில் சேரும் சில நதிகளைப் புறக்கணிப்பதும் சில வற்றை ஏற்றுக்கொள்வதும் உண்மை இந்துவின் இலக்கணமாகாது.

வேதநூல் சைவநூல் ஒன்றிரண்டே நூல்கள் என்ற சித்தியார் பாடலின்படி வேத சிவாகமங்களுக்கிடையில் பேதம் காணாத சரியான பார்வை உடையவனே உண்மை இந்து.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்."

என்ற ஔவைப் பிராட்டியார் கூற்றைப் பேணுபவன் உண்மை இந்து எனலாம்.

முடிவாக உலகாயதத்தில் ஊறிக் களைப் படைந்த மேலைநாடுகளில் இந்து மதம் போதிப்பவர்கள் பலர் யானை தடவின குருடர் போல இந்து மதத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் தனித்தனியே பார்த்துவிட்டு ஒன்றைப் போற்றுவதும், மற்றொன்றைத் தூற்றுவதும் ஆகிய செயல்கள் உண்மை இந்துவுக்கு மனவருத்தத்தையே தரும். இந்து சமயம் அனைத்துக்கும் நடுநாயகமாக விளங்குவது அத்வைதக் கோட்பாடு.

"பொய் கண்டார் காணாப் புனிதமெனும்
அத்துவித மெய்கண்டார்"

என்று அவ் அத்வைதக் கோட்பாட்டுக்கு மிகச் சிறந்த விளக்கம் தந்தவரை நிந்தித்து திருமூலரும் திருவள்ளுவருமே உண்மை விளக்கியவர்கள் என்று பேசும் சைவசித்தாந்த மட ஸ்தாபகர்களைக் கூட உண்மை இந்துக்களாகக் கருதமுடியாது.

இதுவரை உண்மை இந்துவின் இலக்கணம் பற்றிய உடன்பாட்டு, எதிர்மறைக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இவை வாசகரது சிந்தனையைத் தூண்டி உண்மையான இந்துவாக வாழவேண்டுமென்ற நினைப்பை ஒருகணமேனும் ஏற்படுத்த வேண்டுமென்பதே இக்கட்டுரையின் நோக்கமும், பயன்பாடும் ஆகும்.

பாட்டு : இது நியாயமா
இராகம் : ஆபோகி
தாளம் : ஆதி
இயற்றியவர் : மைத்ரேயி. ச

**பல்லவி**

இது நியாயமாகுமா — குறிஞ்சிக்
குன்றிலேறிக் குடியமர்ந்த குமர உனக்கு (இது)

**அனுபல்லவி**

தனிப்பெரும் தெய்வம் நீ
தமிழர்தம் தலைவன் நீ
உனதடியார் துயர் துடைக்க
மறந்தனையோ (இது)

**சரணம்**

அமரர்தம் இடர் நீக்கச்
சூரனை அழித்தாயோ
நக்கீர மாமுனியை
அசுரன்சிறை மீட்டாயே
அடைக்கலம் புகுவாருக்கு
அபயமளிப்பா யின்று
அடிபடும் போதுபாரா
முகமாயினையே உனக்கு (இது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுதல் தரும் குறிஞ்சிக் குமரன் முகம்

நளாயினி

ஆறு திருமுகமும் ஒருமுகமாய் — அவன்
ஆறு படைவீடும் ஒருவீடாய்
ஆறுதல்தர அமர்ந்தான் குறிஞ்சியிலே — அன்பர்
ஆற்றல்கள் பெருகுமவன் அருகினிலே.

ஆண்டவன் காதினிலே அருள்வேதம் — சொன்ன
ஆற்றலை அள்ளித்தரும் தணிகைமலை
ஆண்டியின் கோலம்கொண்ட பழனிமலை — நெஞ்சக்
கூட்டின் சுமைஇறக்கும் ஐயமில்லை.

வள்ளிதெய் வானைக்கோலம் பழமுதிர் சோலைகண்டு
வண்ண மயில்போல்நெஞ்சம் களிநடம் ஆடுதையா
செந்தூர்க் கடலலைகள் துன்பக் கறைகழுவி
சிந்தைசெயல் அனைத்தில் நின்புகழ் பாடுதையா

திருப்பரங் குன்றுதனில் திருமணக் கோலம்கண்டு
அழுக்காறு அறியாமை அகன்ற மனமும்கொண்டு
கந்தக் கோட்டத்தில் நெஞ்சைப் பறிகொடுத்து
நின்ற பக்தர்கள் நின்பதம் சரணடைவர்.

ஆறுமுகம் சொன்ன அருட்கதைகள் — குறிஞ்சிக்
குமரன் முகம்சொல்லி அருளாதோ?
ஏறு மலையில்தினம் ஏறி அவனைக்கண்டால்
பேறுநூறு நம்மைச் சாராதோ?

பல்கலை வளர்க்கும் மன்றில் பக்தர்கள் துதிக்கும் பண்ணில்
நித்திய பூஜை தன்னில் சக்தியின் பாலன் நின்று
உத்தம குணங்கள் எமைப் பற்றிடும் வழிகள் சொல்லி
கற்றவை கசடறக் கற்றுமே லோங்கச் செய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments
of

*

# Elite Enterprise

*Dealers in:*

Textiles, Fancy Goods
Radio, Bicycles
&
House hold items

218, N. C. Road,
TRINCOMALEE.



GANESH TRADINGS
கணேஸ் டிரேடிங்ஸ்

*

*Dealers in:*

**Explosive Fishing Tagles and Cycle Spare parts Etc.**

*

190, Ehambaram Road,
TRINCOMALEE.



அழகிய தங்க வைர
நகைகள்

தங்கள் மனதிற்குகந்த
நவீன முறையில் கிடைக்குமிடம்

நியூ வி. எஸ். இ.
நகை மாளிகை

8 W, காசுக்கடைத் தெரு,
திருகோணமலை.

தொலைபேசி: 599



*Selvasannithi Stores*

*

*Dealers in:* **Elephant Brand, SOFT DRINKS**

**No. 11 & 18,** Third Cross Street,
TRINCOMALEE.

*T. P. Shop:* **563**
*Residence:* **585**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ஞ்ஞானத்தினின்று விஞ்ஞானத்திற்கு


சு. சிவகுமார்
4ஆம் வருடம்
எந்திரவியற்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

செ. ரூபசிங்கம்
2ஆம் வருடம்
விவசாயபீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்


அன்புச் சகோதரர்களே!

சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிந்து, சந்தி தெருப் பெருக்கும் சாஸ்திரங்களின் நெறிப்பட்டு, உலகையே குறுக்கிவிட்டு, அன்று அணுக்குண்டைக் கொடிதென உரைத்து, இன்று அதனிலுங் கொடிய நியூற்றன் குண்டைப் படைத்து விட்டு, இன்னும் இவனால் இயம்பும் இயல்பற்ற சாதனைகளை நிலைநாட்டிநிற்கும் விஞ்ஞான யுகத்திலே உள்ள சகோதரர்களே!

சந்தனக் குற்றி ஒன்று உள்ளது. அதிலே இறைவனை உருவகிக்கின்றான் ஒருவன். அதனைப் பிறர் அறியாது கவர எண்ணுகின்றான் ஒருவன். அது கறையுள்ளது என்கிறான் ஒருவன்.

முதலாமவன் — பக்தன்
இரண்டாமவன் — கள்வன்
மூன்றாமவன் — வியாபாரி

இம் மூவரினது மனோநிலைகட் கேற்ப இவர்களது செயல்களும் அமைகின்றன. இவர்களது நோக்க நெறிகள் வேறுபட்டவை. இதுபோலவே மதங்களுமாகும்.

அடுத்து இறைவனைக் காட்டு? என்னும் வினாவியற்றி விடைபெற விளைகையில்..........., ஒளி......? கண்ணால் பார்க்க முடியாதது. ஒரு தெறி பரப்பில் பட்டுத் தெறிக்குங்கால் கண்ணுக்குத் தெரிகிறது.

அதுபோல இறைவனை ........... அவனருள் திருவவதாரிகள் மீது பட்டுத் தெறிக்குங்கால் அதனை யாம் நோக்குகின்றோம். காஞ்சிப் பெரியவர், பகவான் சாயி, புத்தர், யேசு, நபி என்போர் இறையருள் பட்டுத் தெறிக்கும் தெறிபரப்பாயமைகின்றனர்.

பற்றீரியாக்கள், வைரசுக்கள், புரோட்டோசூவன்கள் பொதுவாக தலோ பீற்றுக்களும், புரோட்டோ பீற்றுக்களும் வெற்றுக் கண்ணால் நோக்க முடியாதன. அவற்றை நோக்க நுண்தரிசினி பூதக்கண்ணாடியின் உதவி தேவைப்படுகின்றது. அது கைவில்லையாக, ஒளி நுணுக்குக்காட்டியாக இலத்திரன் நுணுக்குக் காட்டியாக அமையலாம். எமக்கு விளக்கம் தேவைப்படுகின்ற அளவை யொட்டியது இவற்றின் பிரயோகம். அது போலவே இறைவனை நோக்குதற்கும் நுண் தரிசினிகளாக அமைவன மதங்கள். அவற்றில் இலத்திரன் நுணுக்குக் காட்டியாக இந்து மதம் இலங்குகின்றது.

இக்கருவிகளில் உள்ள வில்லைகளில் படியும் பங்கசுப் படலங்களை யகற்ற சைலீன் பாவிக்கப்படுகிறது. இது போலவே யாம் மத நெறிப்படுங் காலை இடையில் ஏற்படும் குறுக்கீடுகளைத் தெய்வ நம்பிக்கையினால் அகற்றுகிறோம்.

வழக்கொன்றில் நீதிபதி தீர்ப்பளிக்கிறார். நீதியான தீர்ப்பெனப் பகர்கிறோம். ஆயின் அதனைக் காட்டும்படி கேட்கப்படுங்காலை விழிக்கிறோம். சமாளித்துக் கொள்கிறோம்—— தீர்ப்பை உணரலாம் என்று. இது போலவே இறைவரையும் உணர்ந்து கொள்கிறோம். அந்த உணர்விலேயே அவரைக் காண்கிறோம்.

இந் நெறி போலவே விஞ்ஞான நெறியுமாம். மெய்ஞ்ஞானத்தின் முடிவிலே மெய்யின்பத்தை அறிகிறோம். விஞ்ஞானத்தின் வழியிலே அதனையும் விஞ்சிய தொன்றுளதென்று உணர்கிறோம். எனவே விஞ்ஞான வழிப்படினும் முடிவிலே அது மெய்ஞ்ஞானத்தில் சங்கமிப்பதைக் காண்கிறோம். விஞ்ஞானிகள் தற்காலத்தே ஊண் உறக்கத்தை மறந்து உன்னத உண்மைகளைக் கண்டு பிடிக்கின்றனர். இவர்கள் இப்போது கண்டு பிடிப்பவற்றை பல காலங்கட்கு முன்னரே மெய்ஞ்ஞானிகள் கண்டு பிடித்துத் தமது மெய்யியல் நூல்களில் விளம்பியுள்ளனர். இந்நூல்களுள் ஒன்று திருவாசகம். இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்டப் பகுதியில் "நூற்றொருகோடி யின் மேற்பட விரிந்த" என்கிறார் மணி வாசகர். பூமியின் வயதைக் குறிப்பிட்டு விஞ்ஞானிகள் விண்ட விடயம் $1\cdot89 \times 10^9$ ஆண்டுகள் புவியின் வயதெனச் செப்புகின் றது. இவர்கள் இதனை விஞ்ஞான வழிப் பட்டறிந்தனர். இதனையே மணிவாசகர் மெய்ஞ்ஞான நெறிப்பட்டு அறிந்தார்.

பிறிதோரிடத்தில் "அணுவுளணுவாக" என்று கூறி அணுவை விடச் சிறிய பொருள் களும் உண்டென்று கூறுகிறார். ஆனால் விஞ் ஞானிகளோ இவர் காலத்துக்குப் பின்னரே அணுவினும் சிறிய பொருள் அணுவுள் ளுள்ள தென்பதைக் கண்டறிந்தனர்.

பிரயோக கணிதத்தில், திணிவு வேகம், வேகவளர்ச்சி என்னும் பதங்களை ஆங்கிலத் தில் Mass of Velocity, Increasing Velocity என மொழியாது சுருங்க, Momentum Acceleration எனச் செப்புகின்றனர். இவ் விருபதங்களும் அதே பொருள்படப் பைந் தமிழில் — திருவாசகத்தில், உந்தம் ஆர்முடு கல் என வருகின்றன. இதனைப் பின்னரே கணித விற்பன்னர்கள் தமிழில் கையாண் டனர்.

அடப்பாவமே! மெய்ஞ்ஞானத்தினின்று...... ......விஞ்ஞானத்துக்கா? என்று எண்ணுகிறீர் களா ? நம்பத்தான் வேண்டும். நம்பியேயாக வேண்டும். இஃதிங்ஙன மிருக்க, நமது பாரம் பரிய உடைமைகளாய மெய்யியல் நூற்கருத் துக்களை— அவற்றினின்றே, மேலைத் தேயத் தாரறிந்து அதற்குப் பிறிதொரு பெயர் வழங்கி நமக்களிக்கும் போது யாமதனை வரவேற்கிறோம். இது எமக்குப் பழக்கப்பட்டு விட்டது. இந்நிலையிலேயே மெய்யியல் நூற் கருத்துக்களை அவர்கள் விஞ்ஞானப் போர்வையணிந்து வழங்கும்போது வரவேற் பளிக்கிறோம்.

இந்தப் பண்பைக் குறிக்குமிடத்தே, "எமது கலை கலாச்சாரங்களை ஆங்கிலேய ருக்கு ஏற்றுமதி செய்து பின்னர் அவர்கள் மீளத் தமது கை வண்ணம் புனைந்து வழங் குவதை வரவேற்கவே எமது சமுதாயம் விரும்புகிறது" என்று கூறுகிறார் ஜவஹர் லால் நேரு.

தற்போது பிரபல்யமாக அடிபடும் யோகக்கலையும் இவ்வண்ணமே அவர்கள் அதன் சாரத்தை உணர்ந்து பயன்படுத்திய பின்னர் நமக்கு வழங்கும்போது நாமும் பின்பற்றுகிறோம். மனித வாழ்வில் ஏற்படும் இடர்பாடுகளைக் களைவதற்கும் மனிதனைப் படைத்த அன்றே மகா கருணைக்கடலாகிய மகேசுரன் நெறிகளைப் படைத்ததும்அவற்றை இனங்கண்டு கொள்ள ஆறுவது அறிவை யும் அளித்து விட்டான். இவ்வகை நெறிகளை விஞ்ஞானம் விண்டு வைக்குமுதல் மெய்ஞ் ஞானம் மெய்ப்பித்துக் காட்டி விட்டது.

இவ்வகை வழிகளில் ஒன்றே சிலவகை ஒலிகள். "உலோக ஒலி" உருவாக்கப்படு கையில் எழும் "கடந்த ஒலியானது" சில வியாதிகளை வினயப்படுத்துவதாக விஞ் ஞானிகள் விளம்புகின்றனர். இக்கடந்த ஒலி யானது சங்கு, மணி முதலாய ஒலி முதல் களில் நின்றும் உருவாவதை உய்த்து அவற் றைக் கோயில்களில் கையாள்வதால் கோயில் களை அகவாழ்வுப் பிணி அகற்றுமிடமாகக் கையாளும் அதே வேளையில் புறவாழ்வைப் புடம் போடும் களமாகவும் கையாண்டனர். இந்நெறி நவிலும் இந்து மதமே பலரால் மூடநம்பிக்கையின் மூலம் என்றும் வழங் கப்படுகின்றது. இந்த விஞ்ஞான யுகத்திலே விஞ்ஞானத்தின் துணைகொண்டு வியத்தகு விந்தைகள் பல இயற்றப்படுவது கண்கூடு. இவற்றில் ஒன்று கடந்த ஒலி மூலம் உலோ கங்கள் உருக்கப்படுவது.

இந்த யுகத்துக்கு முந்தி மூன்று யுகங்கள் செல்வோமாயின் மெய்ஞ்ஞான ஏடுகளில் அகத்தியர் வீணகானத்தால் மலையுருகிய வரலாற்றைக் காண்கிறோம். வீணையினின் றும் எழுவதும் கடந்த ஒலியே. எனவே விஞ்ஞானிகள் வியந்தளித்த உண்மை பழ மையானதே என்பதைக் காண்கிறோம். இவ்வுண்மையை என்றோ எம்மத விற்பன் னர்கள் விண்டு வைத்து அனுபவித்ததை யும் காண்கிறோம். அகத்தியர் ஆய்சாலை சென்றாரில்லை; சுரமானியைத் தீண்டினாரில்லை. ஆயின் அவர் கடந்த ஒலி—அதன் உபயோ கம் — என்பனவற்றை அறிந்திருந்தார்.

இதே செயற்பாட்டையே பின்னொரு கால் அகத்தியருக்கும் இராவணனுக்கும் இடையே இடம்பெற்ற இசைப்போட்டியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது காண்கிறோம். அப்போதும் மலேயே இசையால் உருகியது. இத்துணை ஞானம் மிக்கவர்களால் வழிநடத்தப்பட்ட இந்து மதமா? மடமைகளின் மூலம்? ஆம்! ..........உங்களில் ........ சிலர் .......... இவ்வாறே கூறுகின்றனர்.

ஒவ்வொரு மதத்திற்கும், தம்மத நெறியறிவிக்கும் நூல்கள் சிறப்பாக அமைந்திருக்கும். அத்தகைய நூல்கள் சமுதாயம் அதன் அங்கத்தவர், அதன் பாரம்பரியம் முதலாய அடிப்படைப் பிரமாணங்களில் ஆரம்பித்து இறுதியில் இறைவனைச் சுட்டி நிற்கும்.

இதற்கு ஒரு உதாரணமாக பாரத இதிகாசத்தை எடுப்போமாயின், பொறுமைக்குத் தருமன், வீரத்துக்கு வீமன், ஆண்மைக்கு அருச்சுனன், பாரம்பரிய பழக்க வழக்கங்கட்கு நகுலசகாதேவர்களும், இறை பக்திக்கும் தருணம் பார்த்து தயை புரியும் தகைமைக்கும் பாஞ்சாலியும், கொடைக்கு கர்ணன், இராஜதந்திரத்துக்கு கண்ணன், துர்க்குண விசேடத்துக்கு கௌரவர்கள் என்றவாறு அங்கத்தவர்கள் அனைவரையும் அவர்களது பண்புகளையும் துல்லியமாகத் துலங்க வைக்கின்றது. ஆக மொத்தத்தில் ஒரு சமுதாயத்தின் அங்கங்கள் அனைத்தும் ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன. அதன் பின்னணியில் அவற்றுக்கும் இறைவனுக்கும் இடையேயான தொடர்புப்பாடுகள் கோடிப் படுகின்றன.

இத்தகைய இதிகாசங்கள் ஆன்மாக்களின் அகவாழ்வை மட்டுமன்றிப் புறவாழ்வையும் செம்மைப்படுத்தும் திறனுடையவை. ஆதலால் விஞ்ஞானத்தை விஞ்சிய தன்மை பெறப்படுகின்றது. இங்கு அஃது அகவாழ்வைச் செம்மைப்படுத்தும் பாங்கை விஞ்ஞானம் பகரும் பாங்கற்றது.

எனவே, இத்தகைய நூல்களைப் பாமரரும் பயனுறும் வகையில் கோவில்கள், மடங்கள், ஆசிரமங்கள், ஆதீனங்கள் முதலாய இடங்களிலே செம்பொருள் விரித்துக் குறிபொருளுரைத்து புராணபடனஞ் செய்கின்றனர். இம்முயற்சி வேறுமதங்களி னின்றும் வேறுபட்டதொரு நிகழ்ச்சியாகும்.

இன்றைய இளையதலைமுறையினர் சேந்தனர் பாடல் பாடினால் எவ்வாறு தேர் ஓடும்? கொடிக்கவி பாடியவுடன் எவ்வாறு கொடி ஏறும்? எனப் பல வினா வியற்றிடுகின்றனர். இவர்கள் விஞ்ஞான விற்பன்னர்கள் அல்லாராயினும், அதனையும் மெய்ஞ்ஞானத்தையும் நுனிப்புல் மேய்ந்த கதையாகச் சற்றே தெரிந்து வைத்ததன் விளைவு இஃது. உண்மையில் இரண்டினையும் ஒப்பு நோக்கும் பாங்குடையராயின் விஞ்ஞானமோ அன்றி மெய்ஞ்ஞானமோ என்ற வேறுபாடின்றி, விஞ்ஞான சகாப்தமாகிய தற்காலத்தே 18 வயதுடைய இஸ்ரவேல் இளைஞர் ஒருவர் ஓடிக்கொண்டிருந்த கடிகாரத்தை ஓடாது தடுத்த நிகழ்ச்சி பற்றியும் சிந்தித்திருப்பர்.

இவ்விருவகையான நிகழ்ச்சிகளும் வியக்கத்தக்கனவே! ஆயினும் முன்னையதை நம்பப் பலர் மறுக்கின்றனர். காரணம்...? யாம் விஞ்ஞான யுகத்தில் உள்ளோர் என விடையளிப்பாராயின் இவர்களை விஞ்சிய மூடர்கள் உலகில் இல்லை என்பது இவனது தாழ்மையான கருத்து.

*1962ம் ஆண்டு................?*

பருத்திநகர் கொட்டடி சித்தி விநாயகர் ஆலயத்திலே, மகான் ஒருவர் தம் சீடர்கட்கு ஞானோபதேசம் நல்கிக்கொண்டு இருந்தார். இடையிலே புத்தி பிசகியதோ என எண்ணும் வகையில் 'போச்சு', 'போச்சு', 'போச்சு' என அரற்றினார். ஞானச் செம்மலின் வாய்வழிப் பட்ட அச்சொற்களுக்காய அர்த்தத்தை அவர் சீடரறிய ஆவலுற்று வினவினர்.

அதற்கு அவர் 'சிதம்பரத்து நந்தனார் கோவிற் றிரை தீ வாய்ப்பட்டது' எனத் திருவாய் மலர்ந்தார். நம்மவருக்கோ வியப்பு ஒருபால். சந்தேகம் ஒருபால். கோயில் நிர்வாகிகள் மூலமாகத் தொடர்பு கொண்டபோது நடந்த நிகழ்ச்சி உறுதிப்படுத்தப்பட்டது.

ஓ! விஞ்ஞான யுக அங்கத்தவர்களே!

விளம்பிடுவீர்களாக! மகானின் ஏற்பாடு தான் என ஏற்றமுற எடுத்தியம்பிடுவீர்களேயாயின் உங்கள் பாதையினின்றும் விலகிக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு பால் இருக்க மறுபுறம் மனோ தத்துவக் கலையை வளர்ப்பதற்கு இன்றைய விஞ்ஞானிகள் படும்பாடு..............? எத்தனை ஆய்வுகள்..........? எத்தனை பாடு..........? இதற்கு எடுக்கும், எடுக்கின்ற காலம்தான் எத்தனை எத்தனை,

மேற்படி இரு வழிகளிலும் முடி வொன்றே.வித்தியாசம் முன்னையது. மெய்ஞ் ஞானத்தின்பாற்பட்டது. பின்னையது விஞ் சிய ஞான முடிவில் பெறப்பட்டது.

இந்துக்களின் இல்லற வாழ்வின் புகு முகப்பிலான திருமணத்தின் போது 'அருந் ததி காட்டல்' என்பது ஒரு சடங்கு. அதன் அர்த்தம்தான் என்ன? பெண் அருந்ததியைப் போன்று கற்பும் பொற்பும் உடையவளாக அமைதல் வேண்டும் என்பதாம். கற்புக் காக்கப்படும் போது பொற்பு (பொறை— பொறுமை) போற்றப்படுகின்றது. இதனுல் இருவரும்—மணமக்கள்—இணைபிரியா வியல் பினராயமைகின்றனர். இதுதான் உள்ளர்த் தம்.

விஞ்ஞானிகளோ? அண்மையில்தான் அருந்ததி நட்சத்திரமானது தனித்த தொன் றல்ல வென்றும் ஒன்றையொன்று பிரியாத பிரிக்க முடியாத இரட்டை நட்சத்திரங்கள் எனவும் கண்டுபிடித்துள்ளனர். என்னே விந்தை ..............? எத்துணை பொருத்தம்? இதை யுன்னித்தானே இத்தகைய குறி பொருள் கொண்ட வைபவத்தை இயற்று கின்றனர். இப்பொழுது உரையுங்கள்.......... விஞ்ஞானத்தினின்றும் மெய்ஞ்ஞானத்துக்கு ஒரு பாலம் அமைத்து அதன் வழிப்படு வோமாயின் யாம் எத்துணை லாப முறலாம்? சிந்தியுங்கள் !———சிந்தியுங்கள் !

நடுநிலை அவதானிகளின் கூற்றுப்படி, இந்துமதம்—எந்த ஒருவிடயத்தையும் உள்ளி ருந்து வெளியாக படிப்படியாக ஆராய்வது. விஞ்ஞானம்—மாறுக வெளியிலிருந்து உள் ளாக ஆராய முற்படுவது எனத் தெளி கிறோம்.

இவ்வாறுன விஞ்ஞானமானது வெளியிலி ருந்து உள்ளாகச் செல்கையில் ஏற்படும் தவறுகளாலேயே முடிவான முடிவை நோக் காது திண்டாடுகிறது.

வேகமாக விஞ்ஞானத்தில் முன்னேறிய நாடான அமெரிக்காவில் இத்தனை மனோ வைத்தியசாலைகள் ஏன்? ஏறத்தாழ ஆறு இலட்சம் வாலிபர்களும் வனிதையரும் இந்து மத மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் சுவாமி சச்சிதானந்தாவின் சீடர்களாக உள்ளனர். அதுமட்டுமல்ல. இந்துமத அடிப்படை சுலோ கங்களில் இடம்பெறும் பதமான 'சிவோஹம்' என்பதைத் தாரக மந்திரமாகக்கொண்டு விளங்கும் தெய்வீக ஒளிச்சங்கத்தில் இலட்சக் கணக்கான அமெரிக்கர்கள் அங்கத்தவராக இருப்பது ஏன்?

ஏன் இந்தப் புரட்சி? அவர்கள் வாழத் தெரிந்தவர்கள் என்பதே இவனது முடிவு?

✱

ஒரு பெண்ணுக்கு அடக்கமே சிறந்த அணிகலன் தெய்வீக உருவின் திருவடிகளில் சமர்ப்பிக்கப்படும்போதுதான் ஒரு மலர் தன்னைப்பாக்கிய சாலியாகக் கருதுகிறது இல்லாவிட்டால் அம்மலர் செடியிலேயே வாடிவிடுவது சாலச்சிறந்தது. பெண்கள் வெகு எளிதில் கோபத்திற்கு ஆளாதல் கூடாது. அவர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கப் பழகவேண்டும்.

ஸ்ரீ சாரதாதேவியார்

* * *

பூமியில் செல்வக் குவியல்களை உங்களுக்கென்று சேர்த்து வைக்காதீர்கள். இங்கே பூச்சியும் துருவும் அவற்றைப் பாழாக்கும், திருடர்கள் கன்னமிட்டுத் திருடுவார்கள் ஆனல் அருளுலகத்தில் உங்களுக்கென்று செல்வக்குவியல்களை சேமித்து வையுங்கள்.

யேசுபகவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரோ!

ஸ்ரீரஞ்சினி .S
விவசாய பீடம், இரண்டாம் வருடம்

உலகம் சீராக இயங்கவும், சூரியன் தனது அழிவில்லாத சக்தியைப் பல்வேறு கோலங்களில் வழங்குவதற்கும் ஒரு சிறிய விந்துவும் முட்டையும் இணைந்து ஒரு ஜீவன் உருவாவதற்கும் காரணமாய் நம்மை மீறிய ஒரு பெரிய சக்தி இருக்கின்றது என நம்முன்னோர் திடமாய் நம்பினர். இந்த சக்தியை ஆக்கவோ, அழிக்கவோ முடியாது என்றனர். இதே 'சக்தி' என்ற பதமே நம் பௌதிக விஞ்ஞானத்திலும் பயன்படுகிறது. இச் சக்திக்கு இறைவன் என திருநாமமிட்டு அவனை நம் குடும்ப வாழ்வுடன் இணைத்து பல உருவங்களில் வழிபட்டனர். அற நெறியை வகுத்து, அன்பைப் போதித்துத் தம் நாயகனைத் தலைவனுக்கிச் சமயத்தை உருவாக்கினர்.

சமயம் மனிதனை நல்வாழ்வு வாழ்வதற்குரிய வழிகளில் நடத்திச் செல்லும் ஒரு கருவியாக இருந்தது. இதன் பொருள்படவே சமயத்திற்கு மார்க்கம், நெறி எனப் பல பெயர் வழங்கினர். சமயம் சமுதாயத்தை வளமூட்டியது. இதனுல் மக்கள் ஒரே நெறியுடையராயினர். கடமை, கண்ணியம், கட்டுப்பாடுகள் மக்களிடையே மலர்ந்தன; வளர்ந்தன. அன்பு, அகிம்சை, உண்மை, திங்கிழையாமை போன்ற சில அடிப்படைக் கொள்கைகள் சகல மதங்களுக்கும் பொதுவாயின. எளிமையான வாழ்வு அமைதியுடன் நகர்ந்தது.

இன்றும் சமயத்தின் செல்வாக்கு அழுங்குப் பிடியாக நம் சமூகத்தில் நிலவுகிறது. ஆனுல் பலர் அர்த்தம் புரியாதும், சிலர் வேண்டா வெறுப்பாகக் கடமையாகவுமே அவற்றைப் பின்பற்றுகின்றனர். காரணம், சமயத்தின் நாயகனே இன்று நம் விவாதப் பொருளாகிவிட்டார். விஞ்ஞானம் வளர்வதுடன் நாமும் வளர்கின்றேம் என்ற நினைவில் இறைவன் இருக்கின்றனு, இல்லையா என்ற விவாதத்துக்குப் பலரும் தமக்கு ஆதரவாக கருத்துக்களைச் சேகரித்துக் கொண்டிருக்கின்றனர். விவாதத்தின் முடிவு ஒரு குறியை அணுகாவிடினும் சாதாரண மனிதனின் உள்ளத்தில் தினமும் வாதம் நடைபெறுகின்றதுதான்.

இறைவன் இருக்கின்றன் என வாதிடும் சில சந்தர்ப்பங்களில் நேர்மையாய் வாழ்ந்து பிழைக்க முடியாதுள்ளபோது, நேர்மையீனமாய் வாழ்ந்து பிழைத்துப் பலர் உல்லாச வாழ்க்கை வாழும்போது, இறைவன் உண்மையில் இருக்கின்றன் தானு என்ற வெறுப்புக் கலந்த சந்தேகம் கொள்கிறன். ஆனுல் நல்லவர்களே ஏமாளிகளாகவும், பிழைக்கத் தெரியாதவர்களாயும் இருக்கின்றனர் என்பது உண்மையே! நீதி, நேர்மை, பழி என்பவற்றுக்கு அஞ்சுவதனுலேயே அவர்களால் பிழைக்க முடிவதில்லை!

இதே போல இறைவன் இல்லை என வாதிடும் நாஸ்திகனும் தனக்குக் கஷ்டம் நேரும்போது, தனக்குப் பிடித்த மிகப் பிரியமானவருக்கு ஆபத்து நேரும்போது தன்னையறியாமலேயே இறைவனை நினைத்துக் கொள்கிறன். "ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரோ" —அவன் ஆட்டுவிக்கின்றன் நான் ஆடுகின்றேன் எனப் பாடினுர் கவியரசு. நமக்குத் துன்பம் வருகிறது என்பதற்காக கண்கெட்ட கடவுளே எனத் திட்டுவதிலோ, கடவுளே இல்லை என வாதிடுவதிலோ எவ்வித அர்த்தமும் இல்லை. நமக்கென ஒருபாதை நம் வாழ்வினைப் பயனுக்கு ஏற்ப வகுத்தாயிற்று. அதில் இனிப் பயணம் செய்வதே நம் கடமை. அதையே கவிஞர் ஓர் இடத்தில் 'பாதை வகுத்த பின்னர் பயந்தென்னலாபம் ?' எனக் கேட்கிறர். படைத்தவன் படி அளப்பான் என்ற நம்பிக்கையில் நம்முன்னேர் அமைதியாக வாழ்ந்தமாதிரி நம்மால் வாழ முடியவில்லையே! இன்பம், இன்பம் என்று எங்கு எங்கோ எதையெல்லாமோ தேடியலைந்து இறுதியில் வாழ்வையே வெறுத்து ஒதுக்கி 'ஹிப்பி' நிலைதான் பிரதிபலனுகக் கிடைத்திருக்கிறது. எங்கும் அமைதியின்மை, பரபரப்பு, அமைதியான குடும்பத்தில், அன்பான மனைவியின் புன்னகையில், ஆனந்தமான குழந்தைகளின் வாய்மொழியில் இருக்கும், மனத்தை நிறைவித்து குளிர்விக்கும் இன்பம் நம் இளைஞர்களில் பலருக்குத் தெரிவதில்லை. மனத்தைத் தேவையற்ற இடங்களுக்கெல்லாம் இப்படி அலைபாய விடாது கட்டிவைக்கும் சக்தி தெய்வ நம்பிக்கைக்கு உண்டு. நாம் செய்யும் அநியாயங்கள் எங்கே எம் வாழ்வைப் பாதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமோ என்ற பயத்தை, அச்சத்தை மனத்துள் வியாபிக்க வைக்கும் சக்தி கடவுள் நம்பிக்கைக்கு உண்டு.

நாடகம் ஒன்றை முழுவதாக, முதலிலிருந்தே பார்க்காது அரைவாசியில் பார்க்கும் ஒருவனுக்கு அதன் முடிவு எப்படி என்று புரியாது, விளங்காது இருக்குமோ அதேமாதிரித்தான் நம்வாழ்வையும் முடிவுகளையும் ஆராய்வது! அவனுடைய முடிவுகளில் எவ்வித பிழையுமே இருக்கப்போவதில்லை. அதை விளங்கிக்கொள்ளும் பக்குவம்தான் நம்மிடமில்லை. நாம் நினைப்பது ஒன்று நடக்கிறது இன்னொன்று என்றால் அது அவனுக்குப் பிடித்திருக்கிறது. சமதர்மம் தந்திருக்கிறான் என்று பொருள். அதேமாதிரி நடக்காதபோது அவனின் திருவிளையாடல் நடக்கிறது நன்மைக்குத்தான் என்று மன ஆறுதல் கொள்ள வேண்டும்.

நம் சமயத்திலுள்ள குறைபாடுகளும் இச் சந்தேகங்களுக்குக் காரணமாகின்றன. எனவேதான் சந்திரமண்டலத்தில் காலடி வைத்ததும் இறைவன் என்பது பொய் என்ற நினைவு நம் உள்ளத்தில் அரும்பியது. ஆனால் அதேமாதிரி ஆவியுலகை ஆராயும் விஞ்ஞானிகளின் கருத்துக்களும், மறுபிறப்புப் பற்றிய செய்திகளும் மீண்டும் இறைவன் இருக்கிறான் என்பது உண்மையாகவிருக்குமோ என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

எதுவாகியிருந்தபோதிலும் கடவுள் நம்பிக்கை மனிதரை விரக்தியின் விளிம்பிலிருந்து, துன்ப மயச் சூழலிருந்து விடுவிக்கின்றது என்பது நிதர்சனமான உண்மையே! அந்த நம்பிக்கை எனும் துடுப்பின் மூலம் துன்பமாகிய கடலிலிருந்து உறுதியான மனம் என்னும் கரையை அடைய முடிகிறது. திடீர் இறப்பு ஒன்று நிவர்த்தி செய்ய முடியாத பேரிழப்பாகத் தோன்றும் போது இனி எப்படி வாழ்வது? நம் வாழ்வு எப்படி நகரப் போகின்றது? என்ற விரக்தியும் வாழ்வையே விட்டு ஓடவேண்டும் என்ற துடிப்பும் உருவாவது இயல்புதான்' ஆனால் வீட்டிலிருக்கும் செடிகொடி வளரத்தான் நாம் நீருற்றுகின்றோமே தவிர காட்டிலிருப்பனவற்றுக்கு ஊற்றுகின்றோமா? அவை வளரவில்லையா? ஒருவர் இல்லாவிடில் உலகமே இயக்கமற்று ஸ்தம்பித்து நின்று விடப்போவதில்லை. ஏதோவிதமாக இயங்கித்தானே ஆகவேண்டும். எத்தனையோ குடும்பங்கள் தலைவன் இறந்தபின் முன்பைவிட நன்றாக வாழ்வது முண்டு அல்லவா? கடலில் பிறந்து மடியும் கடல் அலைகள்போல துன்ப உணர்விலிருந்து பிறக்கும் துயர அலைகளும் உடனே மடிந்து விடுவதில்லை. மீண்டும் பிறந்துகொண்டுதானிருக்கின்றன. ஆனால் அவற்றின் உற்பத்தியின் வேகத்தையும் அளவையும் இந்த நம்பிக்கை குறைக்கக் கூடியது. எனவே கடவுள் நம்பிக்கை நிச்சயம் தேவை.

அதைவிட ஒருவன் நல்லவனாக வாழ அவனது சமயப்பற்று, பக்தியும். கடவுள் நம்பிக்கையும் மிகவும் உதவிசெய்கின்றன. கடவுளுக்குப் பயந்தவனே மனச்சாட்சிக்குப் பயந்தவனாக, உத்தமனாக வாழ்கின்றான்.

கடவுள் நம்பிக்கையால் உருவாகும் பல விளைகள் தமது சமுதாய வாழ்வையும் வளம் படுத்துகின்றன. அது கற்றுத்தரும் சுகாதாரமான விரதமும் அதன் நடைமுறைகளும் உள்ளன. இதைவிட ஆண் பெண் சமத்துவத்தை, உரிமையை, பிணைப்பின் வலிமையை இறைவன் திருமேனி புகட்டுகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஒருகணம் இறைவன் சந்நிதானத்தில் அமைதியாக நின்று பிரார்த்திப்பதை, தீப ஆரத்தி பார்ப்பதை, மனதால் அவனுடன் சங்கமிப்பதை நினைத்துப்பாருங்கள். அந்த நேரத்தில் நம் மனதில் நம்மையே அறியாது தோன்றும் சாந்தியை, நிம்மதியை, தூய்மையை உணரும் போது வாழ்விலே அந்த ஒரு நிறைவைப் பெறுவதற்கேனும் இறைபக்தி, இறைநம்பிக்கை தேவை என்று தோன்றவில்லையா? மன அமைதிக்கு நம்பிக்கை உதவுகிறது. நல்ல எண்ணங்கள், பழக்க வழக்கங்கள் நல்ல செயல்களாய் மாறும்போது நம் உள்ளமே ஒரு தெய்வ சந்நிதானமாகி ஒளிவிடும். எனவே நமக்காக நாம் கடவுளை நம்புவோம். நம் அமைதிக்காக அவனை வழிபடுவோம். நமக்கு ஒரு கஷ்டம் வரும்போது கூட அதைக் கடவுளுக்குப் பாரம் போட்டு விட்டு" "என்னால் முடிந்ததைச் செய்து விட்டேன் இனி உன்பொறுப்பு" என்று அமைதி கொள்வோமாயின் நம்மனதில் கலக்கம்இராது.

வண்டிச் சக்கரம் போல இன்பமும் துன்பமும் வாழ்வில் மாறிமாறி வரத்தான் வேண்டும். மேதை ராதாகிருஷ்ணன் சொன்னது போல் "வாழ்க்கை ஒரு சீட்டாட்டம். அதில் வரும் இன்பதுன்பங்கள் நமக்கு வரும் சீட்டுக்கள் போன்றன. அது தான் விதி அந்தச் சீட்டைக் கருவியாக்கி மூளையின் உதவியுடன் வெல்ல நினைக்கிறோமே அதுவே மதி" எனவே வாழ்க்கை எல்லோருக்கும் ஒரு மாதிரியானதே! அதைச் சுழியோட வேண்டியதோ, வெள்ளமாக்குவதோ, பூப்பந்தல் ஆக்குவதோ நம்மனதில் தங்கியது. வாழ்வைக் கண்டு பயந்து ஓடாது இறைவனுடைய தீர்ப்புகள் புத்திசாலித்தனமானவை என்ற நம்பிக்கையுடன் நம் மதியை உபயோகித்து அமைதியாக வாழ்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடமுழுக்குக் கொண்டனையோ குமரா! குமரா!

இ. ஆனந்தி
3ஆம் வருடம் — விஞ்ஞானபீடம்

மறந்திருந்தேன் நினையன்று குமரா! குமரா!
நினைக்கவைத்தாய் உனை இன்று அமரா! அமரா!
மறந்திருந்தே னெனையன்று குமரா! குமரா!
உணர்த்திவிட்டாய் எனையின்று அமரா! அமரா!

மமதைகொண்டேன் மனத்தினிலே குமரா! குமரா!
மமதைதனை எடுத்துக்கொண்டாய் அமரா! அமரா!
மனத்திலொரு களங்கமின்றிக் குமரா! குமரா!
உனைத்துதிக்க எனக்கருள்தா அமரா! அமரா!

நீயுமெனைக் கைவிடாதே குமரா! குமரா! — இவள்
உலகறியாச் சிறுமியடா அமரா! அமரா!
நீயறியாச் சூதுமில்லை குமரா! குமரா!
நீவரைந்த சித்திரம்தான் அமரா! அமரா!

கொடும்சூரனுக் கருள்புரிந்தாய் குமரா! குமரா!
கொடுமையென்ன செய்துவிட்டேன் நானும் இங்கே?
கருணையுட னருளாயோ குமரா! குமரா!
கொடும்காட்டில் வாடுகிறேன் அமரா! அமரா!

விளையாட மயிலில்லையோ குமரா! குமரா! — அது
பறந்துபோச்சோ கருமுகிலைக் கண்டே அமரா!
விளையாட ஆளின்றி எந்தனோடே — நீ
விளையாட நினைத்தனையோ அமரா! அமரா!

குடமுழுக்குக் கொண்டனையோ குமரா! குமரா! — அன்று
குழப்பினையோ என்மனத்தைக் கூர்கொள்வேலால் — பெரும்
புயலிடையில் துரும்பதுபோல் தவிக்கின்றேன் யான்
பொறுப்புனக்கே காத்திடுவாய் குமரா! குமரா!

தந்தையாரின் தொடர்ச்சியிதா குமரா! குமரா!
திருவிளையாட்டின் ஒருகதையா அமரா! அமரா!
அருள்புரியாய் நீயெனக்குக் குமரா! குமரா!
தரணிபுகழ் குறிஞ்சிமலை யமரா! அமரா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகன் பெருமை

செல்வி த. கமலராணி
பல் வைத்தியபீடம்

அருவமு முருவ மாகி
யனுதியாய்ப் பலவா யொன்றுய்
பிரம்மமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்க ளாறுங்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலக முய்ய!

சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவ பெருமான். இப்பெருமான் தடத்தநிலை, சொரூபநிலையென இருநிலைகளைக் கொண்டவர். ஆன்மாக்களின் மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாதவனுய், குணங் குறிகளைக் கடந்தவனுய், உரைப்பதற்கோர் பெயரில்லாதவனுய், வேறுக நிற்கும் நிலை சொரூபநிலை எனப்படும். இவ்வுலகின்கண் உள்ள ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு அருவம், உருவம், அருவுருவம் என்னும் முத்திருமேனிகளைக் கொண்டு ஐந்தொழில்களை ஆற்றும் நிலை தடத்தநிலை எனப்படும். ஆன்மாக்களுக்கு போதம் தந்து அவற்றின் இழிவினை உணர்த்தி அதனினும் மேம்பட்ட வீடுபேற்றில் விளைவு பெறச் செய்து, அதற்குரிய சாதனம் தந்து, ஒழுக வைத்து வீடு நல்குவதற்காக அவன் அருள் உருவம் கொள்வான். அவ்வேளை அவன் அருவும், உருவும், அருவுருவும் உடையான். இவ்வாறு அவன் அருளுருவம் அடையும்போது அவன்பால் பற்று வைத்து, உளம் கசிந்துருகி, அவன் புகழ் பாடி, அவன் அருள் வேண்டி நிற்கும் அன்பர்களுக்குப் பல்வகைப் பேறுகளையும் அளிப்பதற்கென்றே போற்றத்தகு திருவுருவங்களைப் பெற்றுத் திருவிளையாடல்கள் பல புரிந்திருக்கின்றுன்.

அப் பொருந்தகையாளன் கொண்ட திருவுருவங்களில் ஒன்றுதான் திருமுருக அவதாரம். மாற்ற மனங்கழிய, எங்கும் நீக்கமற நினைந்து நின்று யாவற்றையும் தன்னகத்தே கொண்ட பிரம்மமய ஈசனே ஆடலால் மதலையானவன். தனக்குத் தானே மகனுகிய தத்துவன். பிரபந்தமாய் நின்ற சோதிப் பிழம்பே இவ்வுலகுய்ய விசித்திர உருக் கொண்டு சண்முகனுய்த் தோன்றினுன்.

கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலக முய்ய

என்ற அடிகளால் கச்சியப்ப சிவாச்சாரியார் இவ்வுண்மையினை விதந்துரைக்கின்றுர்

தேவர்கள், அசுரர்களின் கொடுமைகளைத் தாங்க முடியாது பரமசிவனிடம் முறையிட்டு, அழுது அவன் அருள் வேண்டிநின்ற காலையில் சிவனின் புருவ மத்தியில் அழற்கண்ணின்றும் சோதியாகத் தோன்றி நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய ஐம்பொறிகளின் உறவு கொண்டு சரவணப் பொய்கையில் தாமரை மலர்மேல் ஆறுமுகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு முருகனுக அவதரித்து, தேவர்களின் அல்லல்களை அழிப்பதற்காகவே, முருகனுக அவதாரம் செய்தான் என்பதைப் புராணங்கள் வரலாறுகள் உணர்த்துகின்றன.

இவ்வாறு இயற்கையுடன் உறவு கொண்டு தோன்றிய இயற்கைத் தெய்வம் முருகன். இயற்கையோடு இயைந்து இன்ப எழில் வாழ்க்கை நடாத்தி வந்த பழந்தமிழ் மக்கள் முருகனை இயற்கையின் வாயிலாக இனித்தறிந்தனர். தமிழ் மக்களின் உயரிய நோக்கங்கள் கொள்கைகள் ஆகியவற்றின் உருவாக விளங்கும் முருகப் பெருமானின் அருமை பெருமைகளை இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர் முற்பட்டதெனக் கருதும் பழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியம் முதல் இன்று வெளிவந்துலவும் சகல நூல்களும் ஏற்றிப் போற்றுகின்றன. இதிலிருந்து முருகன் வழிபாடு மிகத் தொன்னெடும் காலம் முதல் நிகழ்ந்து வருதலை எண்ணிக் களிப்புறுகின்றேம்.

இயற்கையினூடே இறையவனை முருகனைக் கண்டு கருதி கவினுறப் போற்றிக் களித்த மக்களும், நீலக்கடலில் மாலைச் செங்கதிரவன் தோன்றும் அழகிய அற்புத காட்சியைக் கண்ட அறிஞர்களும், சான்றேர்களும் அக்காட்சியின் வாயிலாக நீல மயில்மீதமர்ந்து வரும் செவ்வேள் குமரனை நினைந்துணர்ந்து பல பாடல்களைப் புனைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நூல்கள் அனைத்தும் நினைந்துணரும் தோறும் அனைத் தெலும்பும் உள்ளுருக ஆனந்தத்தேன் சொரியும் இயல்பினதாய் நின்று இலங்குகின்றன.

''சேயோன் மேய மைவரை உலகமும்'' எனத் தொல்காப்பியம் போற்றுகின்றது. குறிஞ்சிக்கிழவனுகிய முருகன் ''பண்டைத் தன் இளநலங் காட்டியருளுவான்'' எனக் கடைச்சங்க தலைமைப் புலவராகிய நக்கீரர் போற்றியுள்ளார். மேலும் நக்கீரர் ஈன்ற திரு முருகாற்றுப்படை, பத்துப்பாட்டு வகையில் முதற்றிருப்பாட்டாக விளங்குகின்றது. இப் பெரு நூல் அழகுக் குமரனின் புகழ்பற்றிப் பேசுகின்றது.

சந்தனம் பொதியச் செந்தமிழ் முனி வனுகிய அகத்தியற்குத் தமிழ் அறிவுறுத்தி யவன் ''சூர் முதல் தடித்த வீரவேல் முரு கன்'' எனப் பல நூல்கள் பேசுகின்றன. ''ஐச்சுடர் நெடுவேற் சேவலங் கொடியோன் காப்ப ஏமவைகல் எய்திற்ற வுலகே'' எனப் பெருந்தேவனுர் போற்றுகின்றுர். முருகன் தமிழ்க் கடவுள், தமிழ் மொழியை முதன் முதல் அகத்தியனுக்கு அறிவுறுத்தியமையி னுலும், தந்தை சிவனுக்குப் பிரணவப் பொருளைத் தமிழில் உபதேசித்தமையாலும், அருணகிரிநாதனுக்கு அழகுதமிழில் அடியெ டுத்துக் கொடுத்தமையாலும் அவன் தமிழ்க் கடவுளாகின்முன்.

''கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழிற் பயர்வோனே''

எனத் தந்தைக்குத் தனயன் உணர்த்திய மையை விளக்குகின்றது.

முருகன் என்ற சொல்லுக்கு அழகு, தெய்வத்தன்மை, இளமை, நல்மணம் எனப் பல பொருள்கள் விளங்குகின்றன. திருமுரு காற்றுப்படையில் நக்கீரர் முருக வேளுக் குரிய பல திருநாமங்களை அர்ச்சனை போலச் சொல்லியிருக்கின்முர். அத்திருநாமக் கோ வையிலே,

''அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக'' என்ற அடி முருகன் என்ற அரும் பதத்தின் சிறப்பை எடுத்துரைக்கின்றது. பிறராலே பெறுவதற்கரிய இலக்கணங்களை யுடைய பெரிய பெயருடைய முருகன் என் பது இதன் அரும்பொருள், இவ்வாறு அவன் ஆற்றிய திருவிளையாடல்களால் அவனுக்குப் பல திருநாமங்கள் வழங்குகின்றன. குகன், விசாகன், சரவணபவன், வேலாயுதன், குமா ரன், கடம்பன், கந்தன், கார்த்திகேயன் செவ்வேள், தகப்பன்சுவாமி, சிவகுமாரன், சண்முகன், வள்ளி தெய்வானை சமேதரன், ஞான பண்டிதன் போன்றன அவற்றுட் சில.

முருகன் அழகுத் தெய்வம், அவன் மேனி தூய்மையானது, என்றும் கமழ்வது, கட்ட ழகு நிறைந்தவன், பேரின்ப வடிவினன், தோள் வலிமையுடையவன், யாவற்றிற்கும் பற்றுக் கோடாய் அமைந்தவன். இவ்வழகுக் குமரனின் திருமேனிச் சிறப்பை,

''கானிற் குறத்திபுணர் கந்தவேள் கொண்டதிரு
மேனிச் சிறப்பு விளம்புதற்குத் — தேனிற்
பழங்கலந்தா லென்னசுவைப் பைந்தமிழ்ச்
சொற் றேடி
வழங்குமொரு வெள்ளைநிற மான் ''

எனக் கூறுகின்றது.

முருகனின் பண்பு நலத்தையும், உருவ அமைப்பையும் நோக்குகையில் பற்பல சிறப் புகளைக் காணமுடிகின்றது. சிவாகம உபநிட தங்கள் கூறும் சத் + சித் + ஆனந்தம்—சச்சி தானந்தம். சிவம், சக்தி, முருகன் ஒருங்கே வீற்றிருக்கும் சோமாஸ்கந்த மூர்த்தத்தைப் பிரதிபலிக்கின்றது. தமிழிலுள்ள களவு நெறி, கற்பு நெறி என்னும் இருவகை நெறி களையும் வள்ளிநாயகியின் திருமணத்தாலும், தெய்வயானையின் திருமணத்தாலும் உல கிற்கு உணர்த்தியவன். முருகன் வள்ளிநாய கியின் திருமணம் ஐம்புலன்களாகிய வேடர்க ளிடையே அகப்பட்டு உளன்றுவரும் உயிர் களை இறைவன் குருவாக வந்து தடுத்தாட் கொண்டருளும் தன்மையினை உணர்த்து கின்றது.

முருகப்பெருமானின் திருவிளையாடல் களில் சீரும், சிறப்பும், அறிவும் தருவது சூரபதுமனைச் சங்கரித்து அவன் ஆணவத்தை அடக்கி தமக்குத் தொண்டனுக்கிய திருவிளை யாடலாகும். இத் திருவிளையாடல் பற்றி நம் சொந்த புராணமாகிய கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் விளக்குகின்முர். கந்தபுராணத்தில் வரும் சூரபதுமன், சிங்க முகாசுரன், தாரகாசுரன் என்னும் மூவரும் முறையே ஆணவம், கன்மம், மாயை என் னும் மும்மலங்களையும் சித்தரிப்பவரேயா வர். தாரகன் மாயாமலம், சிங்கமுகன் கன்ம மலம், சூரபதுமன் ஆணவமலம். மாயை முதலில் கெடும். ஆதலால் தாரகாசுரன் முதலில் அழிந்தான். கன்மம் ஒளியாகி, அறிவை விளக்கும் ஒரேவழி மயக்கமும் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும். அம்முறையில் சிங்கமுகாசுரன் நல் லியல்பும், தீய இயல்பும் ஒன்றுசேர கொண் டிருந்தான். ஆணவம், ஆவாரக சக்தி, அதோ நியாமாக சக்தி என்னும் இரு நிற ஆற்றல் களை யுடையது. அது போலவே சூரபதும னும் மனித உடலும், குதிரைத் தலையும் கொண்டு சூரன், பதுமன் என இரு வேறு உடல்களால் ஒன்றியிருந்தான்.

ஆணவமலம் ஆற்றல் கெடுமேயன்றி, அழிவதில்லை எனச் சைவசித்தாந்தம் கூறுகின் றது. அவ்வகையிலே வேலனின் வேலினுல் சூரபதுமன் இரு கூறுகித் தன் தீய இயல்பு களை விட்டுச் சேவலும் மயிலுமாக அழக னுக்கு அடைக்கலம் புகுந்தான். இதனுல் என்றும் அவன் அழியாநிலை பெற்றுன். வேலவனின் வேற்படை மெய்ஞானம், இத னுல் தான் சூரபதுமனின் அஞ்ஞானப் பிழம்பை மெய்ஞானமாகிய வேற்படை வென்றது. வேலாயுதனுக்கு வேல் ஞான சக்தி, வள்ளிநாயகி இச்சாசக்தி, தெய்வ யானை கிரியாசக்தி, மயில் விந்து தத்துவம், சேவல் நாததத்துவம் எனக் கந்தபுராணம் கவினுற விளக்குகின்றது.

செவ்வேள் சேயோன் ஒரு சமஷ்டித் தெய்வம். அவனை வணங்கினுல் அனைத்துக் கடவுளரையும் வணங்க அடையும் பலன் கள் யாவையும் ஒருங்கே பெறலாம். மைந்த னுக்குச் செய்யும் சிறப்பால் சிவனும் சக்தி யும், தம்பியைப் போற்றுதலால் தமைய னுர் விநாயகரும், மருமகனைப் போற்றுத லால் திருமாலும், தலைவன் தாள் பணிவ தால் தேவரும், முனிவரும் களிப்புறுவர். ஆதலினுல் அவன் சமஷ்டித் தெய்வமாகின் றுன். தன் அடியவர்களுக்கு இடர்வந்துற்ற காலையில் வந்து காக்கும் சிறப்பால் அவன் வேலைக்காரன் ஆகின்றுன். இச் சிறப்பைக் கொடுத்தவர் அருணகிரிநாதர். தன் அடிய வர்கள் வேண்டும் நலங்கள் யாவையும் விரும் பிக் கொடுத்தலால் கற்பகதருவாகின்றுன். எல்லா யுகங்களிலும் அடியவர்களுக்கு வரங் களை வாரிவழங்கும் முருகன் கொடியதா கிய கலியுகத்திலும்கூட பேரருள் சுரந்து வேண்டும் வரங்களை விரைந்து கொடுப்ப தால் அவன் கலியுக வரதனுகின்றுன்.

பேசற்கரிய சிறப்புடைத் தமிழ்க் கடவு ளுக்குப் படை வீடுகள் என ஆறு தலங்கள் விளங்குகின்றன. வீரத் தெய்வமாகிய முரு கன் படைகள் யாவற்றிற்கும் தலை சிறந்த படை வீரனுதலால் அவன் எழுந் தருளி விளங்கும் தலங்கள் படை வீடுகளெனச் சிறப்புப் பெயர் பெறுகின்றன. ஆறுபடை வீடுகளாகிய திருப்பரம்குன்றில் ஒளிவடி வாகவும், திருச்செந்தூரில் அருள்வடிவாக வும், திருவாவினன்குடி தனில் தவ வடிவாக வும், திருவேரகத்தில் மந்திர வடிவாகவும், பழமுதிர்ச் சோலையில் எளிமை வடிவாகவும், குன்றுதோருடலில் வியாபக வடிவாகவும் குறிஞ்சிக் குமரன் விளங்குவான் எனத் திரு முருகாற்றுப்படை சிறப்புற விளக்குகின்றது.

இப் பெரும் சிறப்புப்பெற்ற ஆறு தலங் களும் அவன் படை வீடுகளெனினும் அப் பாலகன் காட்டிலும், சோலையிலும், ஆறு களிலும், குளங்களிலும், குறிஞ்சி முதலிய ஐவகை நிலங்களிலும், நாற்சந்தி கூடுமிடங் களிலும், புதிய கடப்ப மலர்களிலும், மரத் தின் அடி நுனியிலும், தூணிலும், துரும்பி லும், கட்டுத் தறிகளிலும் அவன் விளக்கமற நின்றிலங்கி அருள்பாலித்தவண்ணம் இருப் பான்.

முருகன் குழந்தைகளுக்குக் குழந்தை வேலனுகவும், இளைஞர்களுக்கு பாலசுப்பிர மணியனுகவும், கலைஞர்களுக்கு ஆறுமுகம் கொண்ட அண்ணலாகவும், வீரர்களுக்கு தேவ சேனதிபதியாகவும், மந்திரோபதேசம் பெற விரும்பி வருவோர்க்கு சுவாமிநாதனுக வும், இல்லற வாழ்வினர்க்கு சுவாமி தெய்வ யானை சமேதர சுப்பிரமணிய சுவாமியாக வும், பற்றற்ற தூய ஞான துறவறநிலையி னர்க்குப் பழனியாண்டவராகவும், ஞான பண்டிதனுகவும் காட்சி கொடுத்து அருளு வான். அழகுத் தெய்வமாகிய குமரன் எங் கெல்லாம் அழகு மிளிர்கின்றதோ அங் கெல்லாம் வியாபித்திருந்து அழகிற்கழகு செய்வான். அதற்கிணங்க இயற்கையின் எழில் கொஞ்சும் அழகுக்கலை நலம் புரியும் பேராதனையின் அழகையும், குறிஞ்சிக் கும ரன் விட்டுவைக்கவில்லை. அவ்வழகுப் பிரதே சத்திற்கு அழகனுகவும் வீற்றிருந்து அழகுக்கு அழகு செய்கின்றுன். அவ்வழகன் அப்பிர தேசத்தினர் குறிஞ்சிக் குமரன் எனக் கொண் டாடிடச் சிறப்புற விற்றிருந்து அருளுகின் றுன். அக்குறிஞ்சிக் குமரனின் புகழ்பாடி ஏற்றித் தொழுது அவனருள் பெறுவோமாக.

''ஆறிரு தடந்தோள் வாழ்க
அறுமுகம் வாழ்க வெற்பை
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க
யானைதன் னணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க
வாழ்கசீ ரடியா ரெல்லாம்.''

மங்களம் சுபமங்களம்! மங்களம் சுபமங்களம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டில் நாம் காணும் திருப்தி என்ன?

# அதில் அதிருப்தி சிறிதளவேனும் உண்டா?

செல்வன் அ. சுரேஷ்
பொறியியற்பீடம், பேராதனை

"சமயம் என்ருல் எல்லா மனிதரும் சமரசமாக ஒத்துவாழ்வதற்கு வழிகாட்டும் ஒரு சன்மார்க்கம்" என வரையறுக்கப் படலாம். அன்றைய நாள்முதல் வரையறுக் கப்பட்ட சமயக் கோட்பாடுகள் அனைத்தும் ஆராயப்படுமிடத்து உலகில் தோன்றிய பல தத்துவ ஞானிகளின் உளவியல் கருத்துக் களுடன் தொடர்புபடுத்தப்படக்கூடியதாக அமைந்துள்ளன. கோட்பாடுகட்கு சமயரீதி யில் கொடுக்கப்படும் விளக்கம் உளவியல் நோக்கில் கொடுக்கப்படும் விளக்கத்துடன் மாறுபட்டுத் தென்படலாம். ஆனல் உற்று நோக்கின் ஒரேவித முடிவுகளைக் கொண்டிருப் பதைக் கண்டுகொள்ள முடியும்.

இன்று எம்மில் பலருக்குச் சமயம் பற்றி பலத்த சந்தேகம். சமயக் கோட்பாடுகள் எல் லாம் சரியானதா? எதற்காக நாம் சமயக் கொள்கைகளை ஒழுகி நடக்க வேண்டும்? உண் மையில் கடவுள் என்று ஒன்று உண்டா? இவ் வாறெல்லாம் அவர்கள் மனதில் பல சந் தேகங்கள் பிறக்கின்றன. சுருக்கமாக அவர்களை ஆலயவழிபாட்டில் காணும் திருப் தியை ஏற்றுக்கொள்ளாதவர்கள் —உணராத வர்கள் என வைத்துக்கொள்வோம். அவர் களால் உணரமுடியாமல் இருப்பதற்குக் கார ணம் இருக்கிறது.

சர்க்கரையைப் பொட்டலத்தில் வைத்துப் பார்ப்பதற்கும் வாயில் போட்டுச் சுவைப்ப தற்கும் வித்தியாசம் இருக்கிறது. சுவைத்த வர்கள் 'சொல்ல இயலாது' என்கிருர்கள். சுவைக்காதவர்களோ தங்கள் அறியாமையை, அனுபவமின்மையைப் பெருமையாக்கிக் கொள்கிருர்கள்.

சமய மரபில் எடுத்துரைக்கப்படும் 'தியானம்' பற்றி சிறிது கருதுவோமானல் ..................தியானம் செய்யும்போது மனம் ஒரு கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஒரு நெறி யில், ஒரு அமைதியில், எங்கோ ஏதோ ஒன்றுடன் ஐக்கியமாகி விடுகிறது. இதன் விளைவாகச் செய்யும் காரியங்களில் ஒரு தெளிவு ஏற்படுகிறது. ஒரு ஆக்கசக்தி நமது வேலைகளில் வெளிப்படுகின்றது. ஒரு நிதா னம் நம்மிடையே நிலவுகிறது.

இதே சமயம் மருத்துவரீதியில் 'தியானம்' பற்றிக் கருதுவோமானல்........... தியானத் தின் போது இதயத் துடிப்பு நிமிடத்திற்கு மூன்றுதடவை குறைவாகவே துடிக்கிறது. நமது மூளை ஒருநல்ல தூக்கநிலையின் போது உண்டாகும் 'அல்பா' நிலையினை அடைகிறது. அதாவது உடல் ஓர் உரிய ஓய்வை அனுபவிக் கின்றது. இதனல் அதைத் தொடர்ந்து ஈடு படும் வேலைகளில் அதிக சக்தியுடன் ஈடுபட முடிகிறது. எமது செயல்களில் நிறைந்த நிதானம் ஏற்படுகின்றது.

இவ்விளக்கத்தை நோக்குகையில் 'தியா னம்' என்ற அம்சத்திற்கு இருவகையிலும் கொடுக்கப்பட்ட விளக்கத்தில் வேறுபாடு தென்பட்டாலும் முடிபுகள் ஒத்திருப்பதை நாம் காணலாம். எனவே, நாம் ஆலய வழி பாட்டில் அதிருப்தி அடைகின்ருேம் என எந்த உளவியல் கருத்தையும் முன்வைத்துக் கூட உரைக்கமுடியாது. இந்நிலையில் ஆலய வழிபாட்டில் ஏன் பின்வாங்க வேண்டும்?

சிலவிடயங்களில் நமக்கு அவை அருகில் இருக்கும்போது அதன் முக்கியத்துவம் புரிவதில்லை. நமக்கு எளிதாகக் கிடைக்கும் பொருட்கள் மீது ஒருவகையான அலட்சியம் நம்மிடையே நிலவுகிறது. காந்தீயம், தியா கம், யோகம், பரம்பொருள், தியானம் இவை பற்றி பலவார்த்தைகளையும் அடிக்கடி கேட் டதால் அவற்றில் நமக்கு பலத்த அலட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம், முழுவெறுப்புத்தன்மை உண்டாகிறது. அந்த வெறுப்பு உணர்வோடு கூடிய நிலையில் அவைபற்றி ஆழமாகச் சிந்திப்பது கிடையாது. இவைபற்றி ஆழமான எவ்வறிவும் இன்றி இவை அர்த்தம் அற்றன என்று உரைப்பது எவ்வளவு அபத்தமான பேச்சு.

எமது வாழ்க்கை ஒரு நீண்டதூரப் பிரயாணம். எமது இந்தப் பிரயாணத்தில் எம்மை வழிநடத்திச் செல்லத்தக்க ஒரு வழிகாட்டி ஆண்டவனுகத்தான் இருக்க முடியும். எம் ஒவ்வொரு செயலிலும் சரி, பிழை, நீதி எது, அநீதி எது இவற்றை யெல்லாம் பல செயற்பாடுகள் மூலம் அவன் வெளிப்படுத்திக்கொள்கிருன். இவ்வாருக ஆண்டவனை அரிய வழிகாட்டியாக்கிக்கொள்வதற்குச் சமயவாழ்க்கை அவசியம். சமய விதிகள் முத்தி அடைவதை மட்டும் எடுத்துரைக்கின்றன, எனக் கருதுவது தவறு.

நாம் இன்பமாக வாழவேண்டும். எமக்கு முத்திபற்றி அக்கறை இல்லை. ஆகவே நாம் ஆலயவழிபாட்டை ஏன் ஏற்படுத்த வேண்டும்? இவ்விதமாக ஒரு சாராரின் மனப்பாங்கு அமைந்துள்ளது. ஆனுல் இது உண்மையல்ல. எமது நீதியான, இன்பமான வாழ்க்கைக்கு ஆலயவழிபாடு அவசியம். அதை நாம் சரிவரப் புரிந்துகொள்ள வேண்டும்.

ஆலய வழிபாட்டில் ஈடுபடும்போது சொல்லமுடியாத ஒரு அதீத சக்தி நம் வாழ்வைத் தொடுகிறது. அதை நான் பார்த்ததில்லை. ஆனுல் உணர்கிறேன் என்றவாறு உரைக்கின்ருர் மகாத்மாகாந்தி. அதீத சக்தியாகிய பிரபஞ்ச அறிவு நம்மைச் சூழ்ந்திருக்கின்றது. நாம் இதில் இருந்துதான் பிறந்தோம். இன்று நாம் அதன் ஒரு பகுதியாக இருக்கிருேம். இப்பிரபஞ்சத்தில் உள்ள காற்று, கல், மண், புல், பூண்டு, தாவரங்கள், மிருகங்கள் அனைத்துடன் நமக்கு ஒரு தொடர்பு இருக்கிறது. நமக்கு ஓர் உறவு இருக்கிறது. நாம் இதை உணர்கையில் எம் மனுேபாவம் வளர்ச்சி பெறுகிறது. எம் மனதில் ஓர் எளிமை பிறக்கிறது. இப் பிரபஞ்சத்தில் எல்லா இயக்கங்களும் ஏதோ ஓரிடத்தில் முடிந்திருப்பதாக ஆரம்பித்திருப்பதாகத் தோன்றுகிறது.

பிரபஞ்ச அறிவுடன் நாம் தொடர்பு கொள்வது நமது வாழ்க்கைக்குப் பெரிதும் பயன்படும். பிரபஞ்ச அறிவைக் காட்ட முடியுமா? காணமுடியுமா? என்று கேட்கலாம்.

காணுவதும், உணர்வதும் தத்தமது அனுபவத்தால் ஏற்படவேண்டும். நாம் ஆலய வழிபாட்டை ஒழுங்காக மேற்கொள்ளவேண்டும்.

ஆலய வழிபாட்டில் ஈடுபடுகையில் எமது மனம் எவ்வாறு தெளிவுபடுகிறது? அதன் மூலம் எமது மனம் எவ்வாறு தெளிவுபடுகிறது? அதன்மூலம் எமது செயல்கள் எவ்வாறு வலுப்பெறுகின்றன?

சமுதாயத்தில் ஒற்றுமையை ஆலய வழிபாடு எவ்வாறு வளர்க்கிறது? இவற்றிற்கான விளக்கங்களை நாம் கண்டுகொள்ள வேண்டும். திருப்தியே வழங்கும் வழிபாட்டில் அனைவரும் ஈடுபடுவது பெரிதும் விரும்பத்தக்கது.

✳

கடவுளை இமயமலைக் குகையிற் காணலாம் என்று எனக்குத் தோன்றினுல் நான் உடனே அவ்விடத்தை நோக்கிப் புறப்படுவேன். ஆனுல், அவரை மனிதசமூகத்தை விட்டு வெளியே காணமுடியாது என்று எனக்கு நன்ருகத் தெரியும். —காந்தி

* * *

மனம் பொறிவழிப் போகாதிருத்தற் பொருட்டு உணவைச் சுருக்கியேனும் விடுத்தேனும் இறைவனைத் தியானிப்பதே விரதமெனப்படும். —நாவலர்

* * *

துன்பத்தை நுகர்கிறவர்கள் கடவுளையோ மற்றவர்களையோ நோவக்கூடாது. நம் வினையைத்தான் நோவ வேண்டும். —வாரியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரன்மீது வேல்விப்பத்து

—குமரன் அன்பர்

வெற்றிவேல் கையிற் கொண்டு விரைந்துநீ வாரா யானுற்
சற்றுமே தரியேன் ஆவி சத்தியம் சொல்லு கின்றேன்
பற்றவோ ஏது வில்லைப் பாவியேன் படுந் துயரம்
கொற்றவா குறிஞ்சி மன்னு குழந்தைநான் செய்வ தென்ன.

சூல் கொண்ட மேகமதாய்த் துயர்கொண் டலையும் என்னை
மால் கொண்ட வாழ்வும் மறிகொண்ட நெஞ்சும் தந்து
ஏல் என்று சொல்லி இறுமாந் திருப்பதென்ன ஐயா உன்
கால் கொண்டு காத்துக் கவின் குறிஞ்சி காட்டாயோ.

வேருடன் அசுரர் எல்லாம் வீழ்ந்திடப் பொருத அந்நாள்
சீர்திகழ் கன்னி தேவ யானையாம் அமுத வல்லி
பாரெல்லாம் புகழ உன்கை பற்றினுள் மகிழ்ந்தாய் நீயும்
யாருடன் நோவேன் குறிஞ்சிக் குமரநீ இல்லை யானல்.

முக்கணன் மகன்நீ என்பார் முகுந்தனின் மருகன் என்பார்
நற்றவ வள்ளி தேவ குஞ்சரி மணுளன் என்பார்
வக்கணம் வசைகள் ஆற்ரு குறிஞ்சியிற் துயில்கின் ருயோ
எக்கணம் வருவாய் ஐயா என்றுதான் அருள்வாய் நீயும்.

வேதனை தாங்கா நேரம் விரைந்துநான் வருவேன் உன்முன்
சாதனை வீரன் போலச் சாய்ந்தமர்ந் திருப்பாய் நீயும்
நாதனே என்று நானும் நயந்துனைப் பரிந்து வேண்ட
சோதனை செய்வ தென்ன குறிஞ்சியின் குமர வேளே.

ஆறெழுத்து மந்திரத்தால் அடியேன்நான் உனைப்பிடிப்பேன்
வீறுகொண்டு நீயெழுந்தால் வேதனையாற் கட்டிடுவேன்
ஆறுபடை வீடுகளும் அயராது தேடிநிற்பேன்
தேறுநிலை தளராமல் குறிஞ்சியிற்போய் மறைவாயோ.

அழகென்ற சொற்பதமே அழகுபெற்ற துன்னுற்ருன்
தழல்உன்றன் நிறமென்ருற் தாமரைதான் பொன்னடிகள்
சுழிகின்ற பெரும்பூமிச் சூருவளிக் கொதுங்கும்
குழல்நாணற் புல்லானேன் குறிஞ்சியிலும் இடமுண்டோ.

ஆறுதலுந் தேறுதலும் அடியேனுக் கில்லையென்ருல்
நூறுமுறை முருகாஎன் ருேதிடுவேன் என்செய்வாய்
சீறுவாய் சினப்பாய் சீவிடுநீ எனைஎன்பாய்
கூறுசெய்து போட்டாலுங் குறிஞ்சியில்நான் முளைத்திடுவேன்.

தந்தையாய் தாயு மாகித் தாரமாய்த் தமரு மாகிச்
சிந்தனைக் கெட்டா நிற்கும் சிவனுமாய்க் குகனு மாகி
வந்தனை செய்ய வந்த வள்ளலாய் வரத ஞகிச்
செந்தினை மாவும் தேனும் சேர்க்கவா குறிஞ்சி சென்ருய்.

ஆரா அமுதமு மாய் அன்பு செய்வார் இதயமுமாய்
வாரா வினை தீர்க்கும் வெற்றிவடி வேலனு மாய்ச்
சோரா மன முடையார் சுகங்காண நீ இருக்கும்
பேரா தனைகாட்டும் பெருங்குறிஞ்சி மலை தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயமும், அதன் பிரிவுகளும்

ச. தயாபரன்
3ஆம் வருடம் — பொறியியற்பீடம்

இந்து சமயம் என்பது வேதங்களை ஒப்புக்கொண்டு நிலவும் வைதிக சமயங்களின் பொதுப் பெயராகும். சிந்து வெளியில் குடியேறிய மக்களே இந்துக்கள் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சிந்து நதிக்கு இந்துநதி என்ற பெயரும் உள்ளதால் வரலாற்று நூல்களில் கூறப்பட்ட காரணம், நாம் ஒப்புக் கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. வரலாற்று அடிப்படையில் நாம் ஆராய்வோமானால் இந்து சமயம் பழைமை வாய்ந்தது என்பது தெளிவு. பரந்த நோக்குடையது. சனாதன தர்மம் என்று வழக்கப்படுவது. அது காலப்போக்கிற்கு ஏற்ப பல்வேறு கருத்துக்களையும் கோட்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு இன்றைய இந்துமதமாய் வளர்ந்திருக்கிறது.

ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி இந்து மதத்தின் தோற்றம் கிறீஸ்துவுக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னராகும். 1927ஆம் ஆண்டளவில் சிந்து வெளியில் மொஹெஞ்சதாரோ, ஹரப்பா என்னும் நகரங்களிலே ஜோன் மார்சல், சேர் அலக்ஸாண்டர், கன்னிங்காம், சேர் வில்லியம் ஜோன்ஸ் ஆகியோர் நடாத்திய தொல்பொருளாராய்ச்சியில் பெறப்பட்ட சான்றுகளைக் கொண்டே சீன எகிப்திய மொசபத்தோமியா ஆகிய நாகரீகங்களிற்குச் சமமான ஒரு நாகரீகம் இருந்ததாக அறிய முடிகிறது.

இந்து சமய பிரிவுகளை எடுத்து நோக்குவோமாகில் மிகச் சிறப்புடன் விளங்கும் சமயங்கள் சைவம் சாக்தம் வைணவம் எனும் முப்பொருள் உண்மைகளையே கொண்டுள்ளது. இச் சமயங்கள் முறையே சிவபெருமான், தாய்த்தெய்வம், மகாவிஷ்ணு ஆகியவர்களை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயங்களாகும்.

சைவசமயமானது சரித்திரத்திற்கு அப்பாற்பட்ட பழமையுடைதாய் விளங்குகிறது. சைவசமய அடிப்படையில் கடவுள், உயிர், உலகம் எனும் முப்பொருள்களை முறையே பதி, பசு, பாசம் என்ற சைவ சிந்தாந்த நூல்கள் கூறுகின்றன. சிந்துவெளி நாகரீகத்தைப் பற்றி எழுதிய திரு. ஜோன் மார்ஷல் சிந்து வெளியிற் கிடைத்த புதுமைகளின் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் பழமையே ஆகும். அதாவது வெண்கல யுகத்திற்கோ அதற்கு முற்பட்ட காலத்திற்கோ உரியது. இயன்றளவு வழக்கிலுள்ள மிகப் பெரிய சமயமெனக் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து நமக்குத் தெளிவாவது இந்தியாவில் ஆரியர் காலத்திற்கு முற்பட்ட காலமாக இருக்க வேண்டும். ஏனெனில் இந்திய ஆரிய வருகை இரும்பு யுகத்தில் ஆகும். காலைத் தூக்கி ஆடும் நடராசப் பெருமானின் சிலை ஐந்தொழில்களைக் குறிப்பதாகவும் ஒரு சிறந்த கலைவடிவமாகவும் இந்துக்களால் கருதப்படுகிறது. ஹரப்பாவில் பெறப்பட்ட இலச்சினையில் இடம்பெறும் ஆடும் உருவம் நடராசப் பெருமானின் உருவமாய் இருக்கலாம் எனக் கருதப்படலாம்.

